இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 85 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஐப்பசி 17 – வெள்ளிக்கிழமை 03 நவம்பர் 2023 – மதுரை 12 + 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 85 : Thiruvalluvar Year - 2054 - Ayppasi 17 - Friday 03 November 2023 - Madurai 12+8 Pages ₹5.00

# “களம் காணட்டும் கழகப் படை!”



**நம் உயிருடன் கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகளுக்கு, உங்களில் ஒருவன் எழுதும் மடல்.**

திராவிட முன்னேற்றக் கழகம் ஆறாவது முறையாக ஆட்சி செய்கின்ற வாய்ப்பினை வழங்கிய தமிழ்நாட்டு மக்களின் நம்பிக்கையை நிறைவேற்றுகிற வகையில் நாள்தோறும் சாதனைத் திட்டங்களை சிறப்பாக நிறைவேற்றி வருகிறது நமது திராவிட மாடல் அரசு. இந்தியாவின் பல்வேறு மாநிலங்களும் பின்பற்றக்கூடிய வகையில் நம்முடைய அரசின் திட்டங்கள் மக்களுக்குப் பயனளித்து வருகின்றன.

அதேநேரத்தில், மாநிலங்களின் வளர்ச்சியை விரும்பாத - மாநிலங்களின் உரிமைகளை மதிக்காத - மாநிலங்களுக்குப் போதிய நிதியளிக்காத - மாநிலங்கள் என்ற கட்டமைப்பே இருக்கக்கூடாது என்ற கொள்கையைக் கொண்டவர்களின் ஆட்சி இந்திய ஒன்றியத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இது குறித்து ‘Speaking for India’ என்ற நிகழ்வின் மூன்றாவது பகுதியில் பேசியிருக்கிறேன். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சட்டமன்றத்தில் நிறைவேற்றிய மாநில சுயாட்சிக் கொள்கையையும் அதன் இன்றைய தேவையையும் அந்த உரையில் குறிப்பிட்டிருக்கிறேன். தமிழிலும் இந்திய மொழிகள் பலவற்றிலும் வெளியாகியுள்ள அந்த உரையை உடன்பிறப்புகளாகிய நீங்கள் கேட்டிருப்பீர்கள் என நம்புகிறேன். அதனை எல்லாரிடமும் எடுத்துச் செல்ல வேண்டிய பணியையும் நீங்கள் மேற்கொள்ள வேண்டும்.

**இந்தியாவின் பன்முகத்தன்மைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் எதிரான மதவாதக் கொள்கை கொண்ட ஆட்சியை அகற்றிட இந்தியா கூட்டணி உருவாகி, நாளுக்கு நாள் வலுவடைந்து வருகிறது. அதில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் பங்கு மகத்தானது. 2024 நாடாளுமன்றத் தேர்தலில் முழுமையான வெற்றியை இந்தியா கூட்டணி பெற்றிட, தமிழ்நாடு, புதுவை உள்ளடக்கிய 40 தொகுதிகளிலும் நாம் வெற்றி பெற்றாக வேண்டும். அதற்கான கட்டமைப்பை இந்தியா கூட்டணி உருவாவதற்கு முன்பே நாம் தொடங்கிவிட்டோம்.**

கடந்த மார்ச் 22-ஆம் நாள் நடந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் 100 வாக்காளர்களுக்கு ஒருவர் என பூத் கமிட்டி அமைப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது. ஒவ்வொரு பூத் கமிட்டியிலும் மகளிர், இளைஞர், சமூக வலைதளச் செயற்பாட்டாளர்கள் இருக்க வேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டது. அதன்படி தமிழ்நாடு முழுவதுமுள்ள வாக்குச்சாவடிகளுக்கு பூத் கமிட்டிகள் அமைக்கப்பட்டு, அதில் பங்கேற்றுள்ள உறுப்பினர்களின் விவரங்கள் சரியாக இருக்கிறதா என்பதும் உறுதி செய்யப்பட்டது.

அதே மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில், தி.மு.கழகத்தில் ஏற்கனவே உள்ள ஒரு கோடி உறுப்பினர்களுடன் புதிதாக ஒரு கோடி உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும் என்கிற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டு, ஒரு தொகுதிக்கு எத்தனை உறுப்பினர்கள் என்ற விவரமும் மாவட்ட நிர்வாகத்திடம் வழங்கப்பட்டு, அதன்படி புதிய உறுப்பினர்கள் சேர்ப்பு நிறைவடைந்துள்ளது. புதிய உறுப்பினர்களின் வாக்காளர் அடையாள அட்டை உள்ளிட்ட ஆதாரங்களும் சரிபார்க்கப்பட்டுள்ளன. நவம்பர் 7-ஆம் நாள் முதல், கழகத்தின் புதிய உறுப்பினர்களுக்கான அட்டைகள் வழங்கப்படவிருக்கின்றன.

அதுபோலவே, பூத் கமிட்டிக்குரிய பாக முகவர்களின் (BLA2) கூட்டம் மண்டல வாரியாக நடைபெற்று வருகிறது. 26-07-2023 அன்று திருச்சியில் டெல்டா மண்டல பாக முகவர்களுக்கான பயிற்சிக் கூட்டமும், 17-08-2023 அன்று இராமநாதபுரத்தில் தென்மண்டல பாக முகவர்களுக்கான பயிற்சிக் கூட்டமும், 24-09-2023 அன்று காங்கேயத்தில் மேற்கு மண்டல பாக முகவர்களுக்கான பயிற்சிக் கூட்டமும், 22-10-2023 அன்று திருவண்ணாமலையில் வடக்கு மண்டல பாக முகவர்களுக்கான பயிற்சிக் கூட்டமும் சிறப்பான முறையில் நடந்தேறிய நிலையில், நவம்பர் 5 அன்று சென்னை மண்டலத்திற்கான பாக முகவர்களுக்குரிய பயிற்சிக் கூட்டம் திருவள்ளூரில் நடைபெறவிருக்கிறது.

மாநாடுகள் போல நடைபெற்ற ஒவ்வொரு கூட்டத்திலும், பாக முகவர்களும் பூத் கமிட்டி உறுப்பினர்களும் எத்தகைய பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதற்கான பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. சமூக வலைத்தளங்களில் எப்படிச் செயல்படவேண்டும் என்பதையும், கழகத்தின் சார்பிலான செயலிகளைப் பயன்படுத்தும் முறையையும் தெளிவாக விளக்கி, ஒவ்வொரு வாக்கையும் சிந்தாமல் சிதறாமல் கழக அணிக்குக் கொண்டு வருவதற்குரிய வகையில் பயிற்சிகள் அமைந்தன. வெறும் கூடிக் கலையும் கூட்டமாக இல்லாமல், கொள்கைத் தெளிவுடனும் அந்தக் கொள்கைகளைக் கொண்டு சேர்க்கத் தேவையான தொழில்நுட்பப் பயிற்சியுடனும் இந்தக் கூட்டங்கள் மிகச் சிறந்த பயிலரங்குகளாக நடைபெற்றிருக்கின்றன.

பூத் கமிட்டிகளை அமைப்பதற்காகவும், புதிய உறுப்பினர்கள் சேர்க்கும் பணியை மேற்கொள்வதற்காவும் தமிழ்நாட்டின் 234 சட்டமன்றத் தொகுதிகளுக்கும் கழகத்தின் சார்பில் தொகுதிப் பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டு, அவர்கள் தங்கள் பணியை நிறைவேற்றியுள்ளனர். 100 வாக்காளர்களுக்கு ஓர் உறுப்பினர் என்ற அளவில் நியமிக்கப்பட்ட பூத் கமிட்டி உறுப்பினர்களின் விவரங்களை இந்தப் பார்வையாளர்கள் சரிபார்த்ததுடன், புதிய உறுப்பினர்கள் சேர்ப்பு நிகழ்வுகளையும் வீடு வீடாகச் சென்று மேற்கொள்வதை உறுதி செய்தனர். இந்தப் பணிகள் நிறைவடைந்த பிறகும், வாரம் ஒரு நாளேனும் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகுதிக்கு நேரில் சென்று களப்பணியாற்றி, வாக்காளர்களின் ஆதரவை உறுதி செய்யும் பணியும் தொகுதிப் பார்வையாளர்களுக்கு ஒப்படைக்கப்பட்டு, நடைமுறைப் படுத்தப்பட்டு உள்ளது.

கழகத்தின் கடைக்கோடித் தொண்டர்கள் வரை களத்தில் பணியாற்றும்போது, கழகத் தலைவர் என்ற பொறுப்பை உங்களால் அடைந்த கழகத்தின் மூத்த தொண்டனான உங்களில் ஒருவனான நானும் - தமிழ்நாடு முழுவதும் பயணித்து வருகிறேன். அரசு அறிவித்த திட்டங்கள் மக்களுக்கு எந்தளவில் பயன்களைத் தருகின்றன, எந்தெந்தத் திட்டங்களில் சுணக்கம் தெரிகிறது, அவற்றை மேம்படுத்த வேண்டிய வழிமுறைகள் என்ன என்பதை நான் மாவட்டந்தோறும் ஆய்வு செய்து, ஆலோசனைகளை வழங்கி, பணிகளை விரைந்து நிறைவேற்றச் செய்து வருகிறேன். கழகத்தின் மூத்த அமைச்சர்களும் இதே போல ஆய்வுப் பணியை மேற்கொண்டு, இளைய அமைச்சர்களுக்கும் வழிகாட்டுகிறார்கள்.

> **தமிழ்நாட்டை மட்டுமல்ல, இந்தியாவைக் காப்பாற்ற வேண்டிய கடமையையும் திராவிட முன்னேற்றக் கழகம் தன் தோளில் சுமந்துள்ளது. அதற்குப் பாக முகவர்களும், பூத் கமிட்டியினரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். தொகுதிப் பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டிருப்போரும் வாரம் ஒரு முறையேனும் தொகுதிக்குச் சென்று பணிகளை மேற்கொள்ள வேண்டும். அனைவரின் பணிகளையும் மூத்த தொண்டன் என்ற முறையில் கழகத்தின் தலைவனான நான் கண்காணித்து, ஒவ்வொரு தொகுதியின் நிலவரத்தையும் பெற்றுக் கொண்டுதான் இருப்பேன்.**

கழகத்தின் இளைஞரணிச் செயலாளரும், இளைஞர் நலன் - விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சருமான தம்பி உதயநிதியும் தமிழ்நாடு முழுவதும் கழக நிகழ்வுகளில் தொடர்ச்சியாகப் பங்கேற்பதுடன், கழக அரசின் திட்டங்கள் எந்தளவில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதை ஆய்வு செய்யும் பணிகளிலும் முனைப்பாகச் செயல்பட்டு வருவதை, நான் செல்லும் மாவட்டங்களில் என்னைச் சந்திக்கும் மூத்த அமைச்சர்களும் மாவட்டக் கழகச் செயலாளர்களும் தெரிவித்து வருகின்றனர்.

**கழகத்தில் எந்தவிதப் பிரதிபலனும் எதிர்பாராமல் நம் உயிர்நிகர்த் தலைவர் கலைஞருக்காகவும், கருப்பு - சிவப்பு கொடியின் நிறமே தங்கள் குருதி நிறம் என்ற உணர்வுடனும் தங்கள் இளமை வாழ்வை இயக்கத்திற்கு அர்ப்பணித்து, இன்று மூத்த உறுப்பினர்களாகத் திகழ்பவர்களுக்கு மாவட்டந்தோறும் பொற்கிழி வழங்குகிறார் தம்பி உதயநிதி.**

**கழகம் என்றென்றும் வலிமையுடன் திகழ்ந்து, ஆதிக்க சக்தியினரையும், அவர்களிடம் அடிமைப்பட்டுக் கிடக்கும் கூட்டத்தினரையும் ஒருசேர வீழ்த்த வேண்டும் என்பதற்காக அயராது பாடுபடும் மூத்த உறுப்பினர்களைத் தம்பி உதயநிதி மதித்துப் போற்றுகின்ற விதம் எனக்கு மிகவும் பிடித்துள்ளது. இதைத்தான் ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒன்றியத்திலும், நகரத்திலும், பேரூர்களிலும் பொறுப்பில் இருக்கும் கழகத்தினர் செய்ய வேண்டும்.**

## உங்களில் ஒருவன்

**மூத்த உடன்பிறப்புகளின் அர்ப்பணிப்பையும் நெஞ்சுறுதியையும் இளைய உடன்பிறப்புகள் பெற வேண்டும் என்பதை இளைஞரணிச் செயலாளர் பங்கேற்கும் இந்த நிகழ்வுகள் எடுத்துக் காட்டுகின்றன.**

அதுபோலவே, தமிழ்நாட்டின் மருத்துவக் கட்டமைப்பை உருக்குலைத்து, தமிழ்நாட்டு மாணவமணிகளின் மருத்துவப் படிப்புக் கனவைச் சிதைக்கும் ‘நீட்’ எனும் கோடரிக்கு எதிராகத் தம்பி உதயநிதி அவர்கள் கழக இளைஞரணி - மாணவரணி - மருத்துவ அணியை இணைத்து தொடங்கியுள்ள கையெழுத்து இயக்கமும் மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

நீட்டை விரட்டும் இயக்கத்திற்கான முதல் கையெழுத்தைக் கழகத்தின் தகவல் தொழில்நுட்ப அணி நடத்திய நிகழ்வில் உங்களில் ஒருவனான நான் போட்டேன். இந்தக் கையெழுத்து இயக்கத்தில், கழகத்தின் கடைக்கோடித் தொண்டர்கள் பங்கேற்று கையெழுத்திடுவது மட்டுமின்றி, அவரவர் பகுதியில் உள்ள பொது மக்களிடமும் மாணவர்களிடமும் நீங்கள் கையெழுத்தைப் பெற வேண்டும். 50 இலட்சம் என நிர்ணயித்திருக்கின்ற இலக்கையும் தாண்டி உங்களுடைய பங்களிப்பு இருக்க வேண்டும். குறிப்பாக மருத்துவக் கனவு சிதைகின்ற அச்சத்தில் உள்ள மாணவர்கள், ‘நீட்’ தேர்வினால் பெரும் அவதிக்கு உள்ளாகும் பெற்றோர் ஆகியோரிடம் கையெழுத்துப் பெற வேண்டும்.

இளைஞரணி சார்பில் வருகின்ற டிசம்பர் 17-ஆம் நாள் சேலம் மாநகரில் இளைஞரணியின் மாநில மாநாடு சீரோடும் சிறப்போடும் நடைபெற இருக்கிறது. மாநில உரிமைகளை மீட்டெடுக்கும் நோக்கத்துடன், இந்தியாவின் தென் திசையிலிருந்து எத்திசைக்கும் பரவுகின்ற வகையில் நடைபெறவுள்ள எழுச்சி மாநாட்டைக் கழகத்தினர் அனைவரும் ஒருங்கிணைந்து வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

தமிழ்நாட்டை மட்டுமல்ல, இந்தியாவைக் காப்பாற்ற வேண்டிய கடமையையும் திராவிட முன்னேற்றக் கழகம் தன் தோளில் சுமந்துள்ளது. அதற்குப் பாக முகவர்களும், பூத் கமிட்டியினரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். தொகுதிப் பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டிருப்போரும் வாரம் ஒரு முறையேனும் தொகுதிக்குச் சென்று பணிகளை மேற்கொள்ள வேண்டும். அனைவரின் பணிகளையும் மூத்த தொண்டன் என்ற முறையில் கழகத்தின் தலைவனான நான் கண்காணித்து, ஒவ்வொரு தொகுதியின் நிலவரத்தையும் பெற்றுக் கொண்டுதான் இருப்பேன்.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் எனும் புரட்சித் திட்டம், பேருந்துகளில் பெண்களுக்குக் கட்டணமில்லாத விடியல் பயணத் திட்டம், காலை உணவுத் திட்டம், நான் முதல்வன் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம் உள்ளிட்ட மகத்தான திட்டங்களின் பயன்கள் மக்களிடம் சரியாகப் போய்ச் சேரவேண்டும். அது பற்றி அவர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். அரசின் திட்டங்கள் எவருக்கேனும் கிடைக்காமல் இருந்தால், அவர்கள் தகுதியான விண்ணப்பதாரர்களாக இருக்கும்பட்சத்தில் அவர்களுக்கு அரசின் திட்டங்களின் பயன்கள் கிடைக்கும்படி செய்திட வேண்டியது தொகுதிக்குட்பட்ட மாவட்டச் செயலாளர்கள், ஒன்றிய - நகரச் செயலாளர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகளின் பொறுப்பாகும்.

வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியினைத் தேர்தல் ஆணையம் மேற்கொள்ளும் நாட்களில் நம்முடைய கழகத்தினர் கண்ணும் கருத்துமாக இருந்து, யார் யார் உண்மையான வாக்காளர்கள், யார் யார் போலியானவர்கள், இறந்துபோனவர்கள் எத்தனை பேர், இடம் மாறியவர்கள் எத்தனை பேர், இரண்டு இடங்களில் பெயர் கொடுத்திருப்போர் யார் என்பது உள்ளிட்டவற்றைக் கவனித்திட வேண்டும்.

சென்னை மண்டல பாக முகவர்கள் கூட்டம் நடைபெறும் நாளான நவம்பர் 5-ஆம் நாளன்றுகூட வாக்காளர் பட்டியல் சரிபார்ப்புப் பணி நடைபெறவிருக்கிறது. தொகுதியின் ஒவ்வொரு வார்டிலும் இருக்கக்கூடிய பூத் கமிட்டி உறுப்பினர்களைக் கொண்டு அந்தப் பணியைத் தவறாமல் மேற்கொள்ள வேண்டும்.

**நாம் உழைப்பது நம் இயக்கத்தின் வெற்றிக்காக மட்டுமல்ல, நாட்டு மக்களின் விடுதலைக்காக! ஏழரை லட்சம் கோடி ஊழல் செய்ததாக சி.ஏ.ஜி.யால் குற்றம்சாட்டப்பட்டுள்ள பா.ஜ.க.வின் கைகளிலிருந்து காப்பாற்றும் வகையிலும், அவர்களுடன் கூட்டு சேர்ந்து நாட்டுக்கும் மக்களுக்கும் எண்ணற்ற துரோகங்கள் செய்துவிட்டு, இப்போது கூட்டணி முறிந்துவிட்டதாக வேடம் போடும் அ.தி.மு.க.வின் கள்ளக்கூட்டணியை அம்பலப்படுத்தும் வகையிலும் வீடு வீடாக உங்கள் பணி மேற்கொள்ளப்பட வேண்டும்.**

நாற்பதும் நமதே, நாடும் நமதே என்று கடந்த 2022-ஆம் ஆண்டு விருதுநகரில் நடந்த முப்பெரும் விழாவில் என் முழக்கத்தை முன்வைத்தேன். அதைச் செயல்படுத்தும் வியூகங்கள் வலுப்பெற்று, இன்று இந்தியா முழுவதும் பா.ஜ.க. அரசுக்கு எதிரான அலை கடுமையாக வீசிக்கொண்டிருக்கிறது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா நம் வசம்தான்! ஜனநாயகம் காப்பதில் உறுதியாக உள்ள தோழமை சக்திகளுடன் இணைந்து மகத்தான வெற்றியைப் பெறுவோம்! அதற்கேற்ற வகையில் ஒவ்வொரு வாக்குச்சாவடியாகக் களம் காணட்டும் கழகப் படை! வெற்றியை உறுதி செய்யும் உழைப்பை வழங்கட்டும்! இப்படை தோற்கின் எப்படை வெல்லும்!

அன்புடன்

**மு.க.ஸ்டாலின்**

திருவள்ளுவர் ஆண்டு 2054,
ஐப்பசி 16
02.11.2023

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 03-11-2023

# ஆளுநர் பதில் சொல்லியாக வேண்டும்

தான் பதில் சொல்ல வேண்டியவை எதற்கும் பதில் சொல்லாமல் - ஆரிய சனாதன வகுப்பு எடுத்துக் கொண்டு இருக்கிறார் ஆளுநர் ஆர்.என். ரவி. அவரைச் சட்டத்தின் நீதிமன்றத்தில் நிறுத்தி இருக்கிறது தமிழ்நாடு அரசு. இனி ஆளுநர் பதில் சொல்லித்தான் ஆக வேண்டும்.

ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு எதிராக தமிழ்நாடு அரசு சார்பில் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. அதில் அவரது முகம் கிழித்தெறியப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு ஆளுநராக ஆர்.என்.ரவி கடந்த 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் பதவியேற்றார். அவர் பதவியேற்றது முதல், தமிழ்நாடு அரசுடன் தொடர்ந்து மோதல் போக்கை கடைப்பிடித்து வருவதையே வழக்கமாக கொண்டுள்ளார். தமிழ்நாடு அரசு அனுப்பும் கோப்புகளுக்கு உடனுக்குடன் கையெழுத்து போடாமல், ஒவ்வொரு கோப்புக்கும் விளக்கம் கேட்பதையே வழக்கமாக வைத்துள்ளார். அரசியல் எதிரி போன்று செயல்படும் ஆளுநர் ஆர்.என்.ரவி, தமிழ்நாடு சட்டமன்றமானது தனது கடமைகளைச் செய்ய விடாமல் முட்டுக்கட்டை போடுகிறார்.**

அரசியல் சாசன பிரிவுகள் 200 மற்றும் 163-ன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை ஆளுநர் தவறாகப் பயன்படுத்தி உள்ளதாக குற்றம்சாட்டியுள்ள தமிழ்நாடு அரசு, 'நீட்' விலக்கு மசோதா, பல்கலைக்கழக சட்டங்களை திருத்துவதற்கான மசோதா உள்ளிட்ட 12 மசோதாக்கள், 4 நடவடிக்கை உத்தரவுகள், 54 கைதிகளின் முன்கூட்டி விடுதலை தொடர்பான கோப்புகள் உள்ளிட்டவை தமிழ்நாடு ஆளுநரால் முடக்கி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆளுநர் பதவி ஒரு சம்பிரதாய பதவி என்றும், ஆளுநர் அமைச்சரவை ஆலோசனையின்படி செயல்படக் கடமைப்பட்டவர் எனவும் முந்தைய வழக்குகளில் உச்சநீதிமன்றம் கூறியுள்ளதை சுட்டிக் காட்டியுள்ள தமிழ்நாடு அரசு, மசோதாக்கள் மற்றும் அரசு உத்தரவுகளுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்க சர்க்காரியா கமிஷன் பரிந்துரை அடிப்படையில் கால வரம்பு நிர்ணயம் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளது.

**மசோதாக்களுக்கு ஒப்புதல் தராமல் தாமதிப்பதன் மூலம் பேரவை செயல்பாடுகளையே ஆளுநர் தடுக்கிறார். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு மற்றும் அரசமைப்புச் சட்டத்தின் செயல்பாட்டுக்கு முட்டுக்கட்டையாக அவரது செயல்பாடுகள் அனைத்தும் உள்ளது. பல்வேறு மசோதாக்களை நிலுவையில் வைத்துள்ளது மட்டுமின்றி, அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் மீதான ஊழல் வழக்குகள் தொடர அனுமதி தருவதிலும் ஆளுநர் தாமதம் செய்கிறார். சரியான காரணங்களை தெரிவிக்காமல், அரசு அனுப்பும் கோப்புகளை ஆளுநர் திருப்பி அனுப்புகிறார். ஆளுநர் திருப்பி அனுப்பிய கோப்புகளை அரசு உரிய விளக்கத்துடன் மீண்டும் அனுப்பியபோதும் ஆளுநர் ஒப்புதல் தர மறுக்கிறார்.**

அரசால் அனுப்பப்படும் கோப்புகள், அரசாணைகள் மற்றும் கொள்கை முடிவுகளுக்கு ஒப்புதல் தராமல் தாமதிக்கும், ஆளுநரின் இந்த நடவடிக்கையால் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணையத்தின் செயல்பாடுகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

எந்தவொரு அவசர சட்டமும் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு 6 வாரங்களில் அது நிரந்தரச் சட்டமாகியிருக்க வேண்டும். தற்போது வரை 12க்கும் மேற்பட்ட மசோதாக்களுக்கு கையெழுத்து போடாமல் ஆளுநர் ஆர்.என்.ரவி நிலுவையில் வைத்துள்ளார். இதனால் பல வகையில் அரசால் துரிதமாகச் செயல்பட முடியவில்லை.

கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகிகள் பதவிக்காலத்தை ஐந்து ஆண்டுகளிலிருந்து மூன்று ஆண்டுகளாக குறைப்பது தொடர்பான சட்டத்திருத்தம், மாநிலப் பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்களை நியமிக்கும் அதிகாரத்தை அரசுக்கு வழங்குதல், தமிழ்நாடு சித்த மருத்துவப் பல்கலைக் கழகத்தை உருவாக்குவது உள்ளிட்ட மசோதாக்கள் அனுப்பப்பட்டுள்ளன. இவற்றை முடக்கி வைத்திருக்கிறார். இதனால் பல்கலைக் கழகங்கள் செயல்பாடு முடக்கப்பட்டுள்ளது. சித்த மருத்துவ பல்கலைக் கழகத்தின் நோக்கத்தையே சிதைக்கிறார்.

கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் அமைச்சர்களாக இருந்த விஜயபாஸ்கர், ரமணா, வேலுமணி, தங்கமணி உள்ளிட்டோர் மீதான ஊழல் புகாரில் வழக்குப்பதிவு செய்ய 2022 செப்டம்பர் மாதம் தமிழ்நாடு அரசு அனுமதி வழங்கியது. இதுவரை அனுமதி தராமல் ஆளுநர் இழுத்தடித்து வருகிறார். அமைச்சராக செந்தில்பாலாஜியை நீடிக்கக் கூடாது என்று சொல்லி பெரிய பிரச்சினையைக் கிளப்பிய ஆளுநர் ரவி, கடந்த அ.தி.மு.க. ஆட்சியின் அமைச்சர்கள் விஷயத்தில் எப்படி நடந்து கொள்கிறார் என்பதில்தான் அவரது உண்மையான முகம் வெளிச்சத்துக்கு வருகிறது.

"நான் திருப்பி அனுப்பவில்லை என்றால் நிராகரித்ததாக அர்த்தம்" என்று ஆணவமாகச் சொன்னவர் இந்த ஆர்.என்.ரவி. அந்தளவுக்கு அரசியலமைப்புச் சட்டத்தை கரைத்துக் குடித்தவர் அவர். எந்த சட்டமாக இருந்தாலும் ஒரு முறை விளக்கம் கேட்கலாம். திருப்பி அனுப்பலாம். இரண்டாவது முறை அரசு அனுப்பினால், அதனை ஆளுநர் ஏற்கத்தான் வேண்டும். அதைச் செய்வது இல்லை. அப்படியே ஊறுகாய் பானையில் ஊறப்போட்டு விடுவார். இதுதான் அவரது தந்திரம் ஆகும்.

நீட் விலக்கு மசோதாவை அரசியல் உள்நோக்கத்தோடு நிறுத்தி வைத்தார் என்றால், ஆன்லைன் ரம்மி மசோதாவையும் நிறுத்தி வைத்தார். ஆன்லைன் ரம்மி நடத்துபவர்களை ராஜ்பவனுக்கு அழைத்து பேசினார். இதை விட வெட்கக்கேடு இருக்க முடியுமா? ஆன்லைன் ரம்மி தடைச் சட்டத்துக்கு முன்னதாக பொதுமக்கள் கருத்தை தமிழ்நாடு அரசு கேட்டது. 'இதற்கெல்லாமா பொதுமக்கள் கருத்தை கேட்பார்கள்?' என்று கிண்டல் செய்தது பா.ஜ.க. ஆனால், ஆன்லைன் ரம்மி நடத்துபவர்களையே சந்தித்து பேசினார் ரவி. அப்போது பா.ஜ.க.வால் வாயைத் திறக்க முடியவில்லை.

**ஆண்டின் முதல் கூட்டத்தொடரின் முதல் நாளன்று ஆளுநர் உரையாற்ற வேண்டும் என்பது ஒரு வழக்கம். அரசு தயாரித்து தரும் உரையை வாசித்து விட்டுச் செல்ல வேண்டும். அதையே மாற்றியும் திருத்தியும் நீக்கியும் சேர்த்தும் தன் இஷ்டத்துக்கு தான்தோன்றித்தனமாக நடந்து கொண்டவர் ஆளுநர் என்பதை அகில இந்திய ஊடகங்கள் அனைத்துமே கண்டித்தன. அதன்பிறகும் அவர் திருந்துவதாகத் தெரியவில்லை.**

**உச்சநீதிமன்ற வழக்குக்குப் பிறகாவது திருந்துவாரா என்பதைப் பார்ப்போம்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.11.2023) தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் கடலூர் மாநகராட்சி, காந்தி பூங்காவில் நிறுவப்பட்டுள்ள சுதந்திரப் போராட்ட வீராங்கனை அஞ்சலை அம்மாள் அவர்களின் திருவுருவச் சிலையை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன், மாநில திட்டக்குழு முன்னாள் துணைத் தலைவர் மு.நாகநாதன், சட்டமன்ற உறுப்பினர் மரு. நா.எழிலன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு.இரா.செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் த.மோகன் மற்றும் சுதந்திரப் போராட்ட வீராங்கனை அஞ்சலை அம்மாள் அவர்களின் குடும்பத்தினர் கலந்து கொண்டனர். கடலூரிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சட்டமன்ற உறுப்பினர் கோ.அய்யப்பன், கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் அ.தருண் தம்புராஜ், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கடலூரில் நிறுவப்பட்டுள்ள சுதந்திரப் போராட்ட

# வீராங்கனை அஞ்சலை அம்மாள் திருவுருவச் சிலை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலிக் காட்சி மூலம் திறந்து வைத்தார்!

**சென்னை, நவ. 3-**

**கடலூரில் நிறுவப்பட்டுள்ள சுதந்திரப் போராட்ட வீராங்கனை அஞ்சலை அம்மாள் அவர்களின் திருவுருவச் சிலையினை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.11.2023) தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் கடலூர் மாநகராட்சி, காந்தி பூங்காவில் நிறுவப்பட்டுள்ள சுதந்திரப் போராட்ட வீராங்கனை அஞ்சலை அம்மாள் அவர்களின் திருவுருவச்சிலையை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

தமிழகத்தின் புகழ்சால் பெருந்தகையாளர்கள், தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு தமிழ்நாட்டிற்குப் பெருமைத் தேடித்தந்த அறிஞர் பெருமக்கள், சமூகநீதி, விடுதலை உணர்வுகளை ஊட்டிவளர்த்த கவிஞர்கள், இசை மேதைகள், தமிழ்நாட்டின் தியாக வரலாற்றுக்கு உன்னத சாட்சியங்களாக விளங்கும் தியாகிகள், மேதைகள் மற்றும் அறிஞர்களின் நினைவுகளைப் போற்றிப் பெருமைப்படுத்தும் வகையிலும், தமிழ் சமுதாயத்திற்கு அவர்களின் பங்களிப்பை பெருமைப்படுத்தும் வகையிலும், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் நினைவகங்கள், திருவுருவச் சிலைகள், அரங்கங்கள், நினைவுத் தூண்கள், நினைவுச் சின்னங்கள் ஆகியவை அமைக்கப்பட்டு, சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

அஞ்சலை அம்மாள் அவர்கள் சிறுவயது முதல் சுதந்திரப் பற்று மிக்கவராக திகழ்ந்தார். 1921ஆம் ஆண்டு காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை தொடங்கிய போது அதில் கலந்து கொண்டு அஞ்சலை அம்மாள் தமது பொது வாழ்க்கையை தொடங்கினார். சென்னையில் நடைபெற்ற ஆங்கிலேய படைத் தளபதி ஜேம்ஸ் நீல் சிலை அகற்றும் போராட்டம், கடலூரில் நடைபெற்ற உப்பு சத்தியாகிரகம் மற்றும் அந்நிய ஆடை எதிர்ப்பு போராட்டம், 1940ஆம் ஆண்டு நடைபெற்ற தனிநபர் சத்தியாகிரக போராட்டம் உள்ளிட்ட பல்வேறு போராட்டங்களில் பங்கேற்றதற்காக சிறை தண்டனை பெற்றார்.

அஞ்சலையம்மாள் விடுதலைப் போராட்டத்திற்காக தனது குடும்பச் சொத்துக்களையும், குடியிருந்த வீட்டையும் விற்று, நாட்டிற்காக தியாகம் செய்தார். "தென்னாட்டின் ஜான்சி ராணி" என்று மகாத்மா காந்தியடிகளால் அழைக்கப்பட்ட அஞ்சலையம்மாள் அவர்கள், மூன்று முறை சட்டமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பணியாற்றியவர்.

இத்தகைய சிறப்புமிக்க சுதந்திரப் போராட்ட வீராங்கனை அஞ்சலையம்மாள் அவர்களின் நினைவைப் போற்றுகின்ற வகையில், 2021-22ஆம் ஆண்டிற்கான செய்தி மக்கள் தொடர்புத் துறை மானியக் கோரிக்கையில், இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட தியாகி, ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்றத் தென்னிந்தியாவின் முதல் பெண்மணி, அண்ணல் காந்தியடிகளால் தென்னிந்தியாவின் ஜான்சிராணி என்று அழைக்கப்பட்ட சுதந்திரப் போராட்ட வீராங்கனை அஞ்சலை அம்மாள் அவர்களுக்குக் கடலூரில் திருவுருவச் சிலை அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, கடலூர் மாநகராட்சி, காந்தி பூங்காவில் புதிதாக நிறுவப்பட்டுள்ள சுதந்திரப் போராட்ட வீராங்கனை அஞ்சலை அம்மாள் அவர்களின் திருவுருவச் சிலையை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் தலைமைச் செயலகத்திலிருந்து, நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன், மாநில திட்டக்குழு முன்னாள் துணைத் தலைவர் மு.நாகநாதன், சட்டமன்ற உறுப்பினர் மரு. நா.எழிலன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு.இரா.செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் த.மோகன் மற்றும் சுதந்திரப் போராட்ட வீராங்கனை அஞ்சலை அம்மாள் அவர்களின் குடும்பத்தினர் கலந்துகொண்டனர்.

கடலூரிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக, வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சட்டமன்ற உறுப்பினர் கோ.அய்யப்பன், கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் அ.தருண் தம்புராஜ், கடலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ரா.ராஜாராம், கடலூர் மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.சுந்தரி, துணை மேயர் பா.தாமரைச்செல்வன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், சுதந்திரப் போராட்ட வீராங்கனை அஞ்சலை அம்மாள் அவர்களின் கொள்ளுப் பேத்தி திருமதி இளவரசி ஆகியோர் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் - கிண்டி, நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில்,

# நெடுஞ்சாலைத்துறை சார்பில் கைபேசி செயலி!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

*சென்னை, நவ.3-*

*பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.11.2023), சென்னை, கிண்டி, நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத் தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில், பள்ளங்களற்ற சாலை என்ற இலக்கை அடைய சாலையில் ஏற்படும் பள்ளங்களை பொது மக்களின் துணையோடு கண்டறிந்து, குறித்த காலத்தில் செப்பனிடும் திட்டத்திற்காக உருவாக்கப்பட்ட இணையத்தின் அடிப்படையிலான "நம்ம சாலை" என்ற புதிய மென்பொருள் மற்றும் கைபேசி செயலியை தொடங்கி வைத்தார்.*

*தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதியான சாலை உள்கட்டமைப்பு அவசியம். கிராமப்புற பொருளாதாரத்தினை மேம்படுத்திடவும், புதிய வாழ்வாதார வாய்ப்புகளைத் உருவாக்கவும், சந்தைகள், மருத்துவமனைகள் மற்றும் பள்ளிகளை அணுகுவதை எளிதாக்குவதில் சாலை உட்கட்டமைப்பு முக்கிய பங்கு வகிக்கிறது.*

*எனவே, முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க தரமான மற்றும் பாதுகாப்பான சாலை கட்டமைப்பினை, உருவாக்கி, பராமரித்து வருகிறது.*

*தமிழ்நாடு "விபத்தில்லா மாநிலம்" என்ற முதலமைச்சரின் தொலைநோக்குத் திட்டத்தினை செயல்படுத்த, "பள்ளங்களற்ற சாலை" என்ற இலக்கினை அடைவதற்கு ஏதுவாக, பொதுமக்களின் துணையோடு கண்டறியப்படும் சாலையில் ஏற்படும் பள்ளங்கள் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் சரிசெய்யப்பட வேண்டும் என்பதால், 2023-24 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின் போது, பிரத்யேக கைபேசி செயலி உருவாக்கப்படும் என்ற அறிவிப்பின் அடிப்படையில், இணையத்தின் அடிப்படையிலான "நம்ம சாலை" என்ற மென்பொருள் மற்றும் கைபேசி செயலி உருவாக்கப்பட்டு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.*

*இச்செயலியின் மூலம், நெடுஞ்சாலைத்துறையினால் பராமரிக்கப்படும் சாலைகளில் ஏற்படும் பள்ளங்கள் குறித்து பொதுமக்கள் கைபேசி செயலி வாயிலாக, புவி குறியீட்டுடன் கூடிய புகைப்படங்களுடன் பதிவேற்றம் செய்யலாம். பதிவேற்றம் செய்யப்பட்ட விவரம் அச்சாலைக்குரிய பொறியாளருக்கு செயலி வாயிலாக தெரிவிக்கப்பட்டு, குறித்த காலக்கெடுவுக்குள் பள்ளங்களை செப்பனிட நடவடிக்கை எடுக்கப்படும்.*

*அதன் பிறகு, சரி செய்யப்பட்ட விவரம், சாலையின் புகைப்படங்களுடன், "நம்ம சாலை" செயலி மூலம் பதிவேற்றம் செய்யப்பட்டு, புகார் அளிக்கும் பொதுமக்களின் அலைபேசிக்கு அனுப்பப்படும். அதன்படி சாலையில் ஏற்படும் பள்ளங்கள் உடனுக்குடன் சீர் செய்யப்படுவது மட்டுமல்லாமல், தடையற்ற போக்குவரத்து உறுதி செய்யப்படும்.*

*இச்செயலி மூலம் பள்ளங்கள் குறித்து தெரிவிப்பதுடன் மட்டுமில்லாமல், பேரிடர் காலங்களில் மரம் விழுதல், வெள்ளப்பெருக்கு போன்றவற்றைக் குறித்தும் புகார்கள் அளிக்க ஏதுவாக இச்செயலி உருவாக்கப்பட்டுள்ளது.*

*2023-24 ஆம் ஆண்டு மானிய கோரிக்கையின் போது அறிவிக்கப்பட்ட, அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில், நெடுஞ்சாலைத்துறை பொறியாளர்களுக்கு நெருக்கமான பயனர் குழு (CUG) முறையில் நிரந்தர அலைபேசி எண், நெடுஞ்சாலைத்துறை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகில் உள்ள 45 கோட்ட பொறியாளர்கள், 192 உதவி கோட்ட பொறியாளர்கள் மற்றும் 274 உதவி பொறியாளர்களுக்கும் எளிதில் தொடர்பு கொள்ளக் கூடிய வகையில் "நிரந்தர தொலைபேசி எண்" வழங்கப்பட்டது.*

*மேலும், இவ்விழாவில் தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் இரு வழித்தடமாக அகலப்படுத்தி மேம்படுத்தப்பட்ட சாலைகளான, ரூ.204.70 கோடி மதிப்பீட்டில் மேலூர் - திருப்பத்தூர் சாலை, ரூ.198.65 கோடி மதிப்பீட்டில் தஞ்சாவூர் மன்னார்குடி சாலை, ரூ.219.47 கோடி மதிப்பீட்டில் விருத்தாசலம் - உளுந்தூர்பேட்டை சாலை ஆகிய சாலைகளை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார்.*

*மேலூர் திருப்பத்தூர் சாலையில், திருப்பத்தூர் நகர் புறவழிச்சாலையில் 63 குறு மற்றும் 4 சிறு பாலங்களும், தஞ்சாவூர் மன்னார்குடி சாலையில் 44 குறு மற்றும் 4 சிறு பாலங்களும், விருத்தாசலம் உளுந்தூர்பேட்டை சாலை, மங்களம்பேட்டை நகர் புறவழிச் சாலையில் 46 குறு மற்றும் 8 சிறு பாலங்களும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், மேற்படி சாலைகளில், சாலைப் பாதுகாப்பினை உறுதிசெய்ய தெருவிளக்குகள் மற்றும் சூரிய மின்விளக்குகள், கண்காணிப்பு கேமராக்கள் மற்றும் பொதுமக்களின் வசதிக்காக பேருந்து நிறுத்தங்களில் குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன.*

*சாலைகளை அகலப்படுத்தி மேம்படுத்தப்பட்டதாலும் மங்கலம்பேட்டை புறவழிச்சாலை அமைக்கப்பட்டுள்ளதாலும் கனரக வாகனங்களின் போக்குவரத்து நெரிசல் மற்றும் பயண நேரம் குறைந்து, விருத்தாசலத்தில் இருந்து சென்னை செல்லும் வாகனங்கள் எளிதாகச் செல்ல முடியும். நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திற்கு கனரக வாகனங்கள் வந்து செல்வதற்கு பயனுள்ளதாக இருக்கும். விருத்தாசலம் நகரில் அமைந்துள்ள பீங்கான் தொழிற்சாலையிலிருந்து உற்பத்தி செய்யப்படும் பொருட்களை நகர்வு செய்ய போக்குவரத்து மேம்படுத்தப்பட்டுள்ளது.*

*இந்த நிகழ்ச்சியில் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர் பிரதீப் யாதவ், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்ட இயக்குநர் எஸ். பிரபாகர், நெடுஞ்சாலைத் துறை முதன்மை இயக்குநர், தலைமை பொறியாளர்கள், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய இயக்குநர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*

## தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில்

# விளையாட்டு அரங்கங்கள் - விளையாட்டு வளாகம் கட்டும் பணி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

**சென்னை, நவ.3-**

**தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில், ரூ.23.14 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள விளையாட்டுத் துறை கட்டமைப்புகளை திறந்து வைத்து, ரூ.49.79 கோடி மதிப்பீட்டில் 9 சட்டமன்றத் தொகுதிகளில் முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கங்கள், கோபாலபுரத்தில் குத்துச்சண்டை அகாடமி மற்றும் தென்காசியில் மாவட்ட, விளையாட்டு வளாகம் கட்டும் பணிகளுக்கு தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.11.2023) தலைமைச் செயலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில், 23 கோடியே 13 இலட்சத்து 51 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள விளையாட்டு விடுதி, நிர்வாக அலுவலகக் கட்டடம் மற்றும் தங்கும் விடுதி, உள்விளையாட்டு அரங்கம், செயற்கை இழை தடகள ஓடுதளம் மற்றும் 5 நபர் அணிகளுக்கான செயற்கை இழை ஹாக்கி மைதானம் ஆகியவற்றை திறந்து வைத்து, 9 சட்டமன்றத் தொகுதிகளில் 27 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கங்களும், கோபாலபுரத்தில் 7.79 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குத்துச்சண்டை அகாடமியும், தென்காசி மாவட்டம், பட்டக்குறிச்சி கிராமத்தில் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாவட்ட விளையாட்டு வளாகம் ஆகிய விளையாட்டு உட்கட்டமைப்பு பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். மேலும், விளையாட்டு இடஒதுக்கீட்டின் கீழ் (Sports Quota) மூன்று விளையாட்டு வீரர்களுக்கு தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தில் இளநிலை அலுவலர் பணியிடத்திற்கான பணி நியமன ஆணைகளை வழங்கினார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.11.2023) தலைமைச் செயலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் கட்டப்பட்டுள்ள விளையாட்டு விடுதி, நிர்வாக அலுவலகக் கட்டடம் மற்றும் தங்கும் விடுதி, உள்விளையாட்டு அரங்கம், செயற்கை இழை தடகள ஓடுதளம் மற்றும் 5 நபர் அணிகளுக்கான செயற்கை இழை ஹாக்கி மைதானம் ஆகியவற்றை திறந்து வைத்து, 9 சட்டமன்றத் தொகுதிகளில் முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கங்களும், கோபாலபுரத்தில் குத்துச்சண்டை அகாடமியும், தென்காசி மாவட்டம், பட்டக்குறிச்சி கிராமத்தில் மாவட்ட விளையாட்டு வளாகம் ஆகிய விளையாட்டு உட்கட்டமைப்பு பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா.எழிலன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி ஆகியோர் கலந்து கொண்டனர்.

விளையாட்டு துறையில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிடவும், அகில இந்திய அளவிலும், பன்னாட்டு அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கு கொண்டு வெற்றி பெறும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல், உயரிய ஊக்கத்தொகை வழங்குதல், விளையாட்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் என பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது. மேலும், மாநிலத்தில் அதிநவீன விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகளை பெருநிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட நன்கொடையாளர்களிடமிருந்து பாலநன்கொடை பெற்று ஏற்படுத்திட "தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை"யை உருவாக்கியது, சர்வதேச விளையாட்டுப் போட்டிகளை தமிழ்நாட்டில் நடத்திட தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவது போன்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் 1 கோடியே 85 இலட்சத்து 28 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள விளையாட்டு விடுதி;

பெரம்பலூர் மாவட்டத்தில் 1 கோடியே 88 இலட்சம் ரூபாய் செலவில் மாவட்ட விளையாட்டு வளாகத்தில் கட்டப்பட்டுள்ள மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் நிர்வாக அலுவலகக் கட்டடம் மற்றும் தங்கும் விடுதி;

வேலூர் மாவட்டம், காட்பாடியில் உள்ள மாவட்ட விளையாட்டு வளாகத்தில் 10 கோடியே 81 இலட்சத்து 23 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள உள் விளையாட்டு அரங்கம்;

கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் மாவட்ட நேரு விளையாட்டு அரங்கத்தில் 6 கோடியே 55 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட செயற்கை இழை தடகள ஓடுபாதை;

சென்னை, எழும்பூரில் உள்ள மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டு அரங்கத்தில் 2 கோடியே 4 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 5 நபர் அணிகளுக்கான செயற்கை இழை ஹாக்கி மைதானம்;

என மொத்தம் 23 கோடியே 13 இலட்சத்து 51 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள விளையாட்டுத் துறை கட்டமைப்புகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

தென்காசி மாவட்டத்தில் 18.12.2022 அன்று நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் முதலமைச்சர் அவர்கள் "புதிதாக அமைந்துள்ள தென்காசி மாவட்டத்தில் புதிய மாவட்ட விளையாட்டு வளாகம் அமைக்கப்படும்." என்று அறிவித்தார்கள்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் 2023-2024ஆம் ஆண்டின் மானியக் கோரிக்கையில், சட்டமன்றத் தொகுதிகளில் விளையாட்டு வீரர்களின் உடற் தகுதி மற்றும் விளையாட்டு வளர்ச்சியினை தூண்டும் வகையில் 10 சட்டமன்றத் தொகுதிகளில் முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கங்கள் அமைக்கப்படும் என்று அறிவித்தார்.

2022 - 2023ஆம் நிதி ஆண்டிற்கான இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் மானிய கோரிக்கையில், "சென்னையில் இளைஞர்களின் குத்துச்சண்டை ஆர்வத்தினை ஊக்குவிக்க 2 கோடி ரூபாய் செலவில் மற்றுமொரு குத்துச்சண்டை அகாடமி அமைக்கப்படும்" என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்புகளுக்கிணங்க, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட கொளத்தூர் மற்றும் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி, திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி, திருப்பூர் மாவட்டம் காங்கேயம், மதுரை மாவட்டம் சோழவந்தான், தூத்துக்குடி மாவட்டம் திருவைகுண்டம், புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி, சிவகங்கை மாவட்டம் காரைக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டம் பத்மநாபபுரம் ஆகிய 9 சட்டமன்றத் தொகுதிகளில் தலா 3 கோடி ரூபாய் வீதம், மொத்தம் 27 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கங்கள் அமைக்கும் பணிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

மேலும், தென்காசி மாவட்டம், பட்டக்குறிச்சி கிராமத்தில், அனைத்து வசதிகளுடன் கூடிய திறந்தவெளி மற்றும் உள்விளையாட்டரங்கங்களை உள்ளடக்கி 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள மாவட்ட விளையாட்டு வளாகம் மற்றும் சென்னை, கோபாலபுரத்தில் 7 கோடியே 79 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள குத்துச்சண்டை அகாடமி ஆகிய பணிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

**தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தில் மூன்று விளையாட்டு வீரர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்குதல்**

தமிழ்நாட்டின் சார்பாக ஒலிம்பிக் மற்றும் பிற சர்வதேச அளவிலான போட்டிகளில் பங்கேற்று பதக்கம் பெற்ற விளையாட்டு வீரர்களை ஊக்குவித்திடும் வகையில் அவர்களுக்கு அரசுத் துறைகள் / பொதுத்துறை நிறுவனங்களில் (PSUs) 3 சதவிகித இடஒதுக்கீட்டின் கீழ் வேலைவாய்ப்பு தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், மதுரை மாவட்டத்தைச் சார்ந்த பாரா தடகள வீரர் எஸ்.மனோஜ் அவர்கள் இந்தோனேசியாவில் அக்டோபர் மாதம் நடைபெற்ற ஆசியன் பாரா விளையாட்டுப் போட்டியில் பங்கேற்றமைக்காவும், ஜெர்மனியில் 28.07.2023 முதல் 5.08.2023 வரை நடைபெற்ற உலக உயரம் குன்றிய மனிதர்களுக்கான விளையாட்டுப் போட்டியில் குண்டு எறிதல் பிரிவில் பங்கேற்று முதல் இடம் பிடித்து வெற்றி பெற்றமைக்காகவும், விளையாட்டு இடஒதுக்கீட்டின் கீழ் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தில் இளநிலை அலுவலராக பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்த தடகள வீரர் ஆனந்தன் அவர்கள் அரியானா மாவட்டத்தில் 2018ஆம் ஆண்டு நடைபெற்ற 18வது தேசிய அளவிலான பாரா விளையாட்டுப் போட்டியில் 200 மீட்டர் மற்றும் 400 மீட்டர் ஓட்டப்போட்டியில் முதல் இரு இடங்களில் வெற்றி பெற்றமைக்காகவும், இந்தோனேசியாவில் அக்டோபர் மாதம் நடைபெற்ற ஆசியன் பாரா விளையாட்டுப் போட்டியில் 200 மீட்டர் மற்றும் 400 மீட்டர் ஓட்டப்போட்டியில் 2ம் மற்றும் 3ம் இடம் பிடித்து வெற்றி பெற்றமைக்காகவும் விளையாட்டு இடஒதுக்கீட்டின் கீழ் இளநிலை அலுவலராக தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்த தடகள வீராங்கனை செல்வி.ரோஸிமீனா அவர்கள் 2021ஆம் ஆண்டு பஞ்சாப் மாநிலத்தில் நடைபெற்ற 24வது ஃபெடரேஷன் கோப்பை தேசிய சீனியர் தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் போல்வால்ட் பிரிவில் முதலிடத்தில் வெற்றி பெற்றமைக்காகவும், அதே ஆண்டு ஜுன் மாதம் பஞ்சாப் மாநிலத்தில் நடைபெற்ற 60வது தேசிய அளவிலான சீனியர் தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் போல்வால்ட் பிரிவில் 3ஆம் இடம் பெற்றமைக்காகவும் விளையாட்டு இடஒதுக்கீட்டின் கீழ் இளநிலை அலுவலராக தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

விளையாட்டு வீரர்கள் எஸ். மனோஜ், ஆனந்தன் மற்றும் செல்வி.ரோஸிமீனா ஆகியோருக்கு தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தில் இளநிலை அலுவலர் பணியிடத்திற்கான பணிநியமன ஆணைகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா.எழிலன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு - வர்த்தகத் துறை சார்ந்த பொதுத்துறை நிறுவனங்கள் சார்பில்

# தமிழ்நாடு அரசுக்கு இந்தாண்டுக்கான பங்கு ஈவுத்தொகை ரூ.307.22 கோடி!

## முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் வழங்கப்பட்டன!

சென்னை, நவ. 3-

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று (2.11.2023) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தமிழ்நாடு அரசின் தொழில், முதலீடு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்ந்த பொதுத்துறை நிறுவனங்களான தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TIDCO), தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (SIPCOT), தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC) மற்றும் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் (TNPL) ஆகியவற்றின் சார்பாக தமிழ்நாடு அரசுக்கு 2022 - 2023ஆம் நிதியாண்டிற்கான பங்கு ஈவுத் தொகையாக மொத்தம் 307 கோடியே 22 இலட்சத்து 28 ஆயிரத்து 309 ரூபாய்க்கான காசோலைகள் / வரைவோலையை வழங்கினார்.

**தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TIDCO)**

தனியார் தொழில் முனைவோருடன் இணைந்து, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான தொழில்களை மேம்படுத்தவும், கூட்டு முயற்சிகள் வழியாக முதலீட்டை ஈர்த்து, மாநிலத்தை உலகளாவிய தொழில் மையமாக்கும் நோக்கத்துடன் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் நிறுவப்பட்டது. இந்நிறுவனம், தமிழ்நாடு அரசுக்கு, 2022 - 2023ஆம் நிதியாண்டிற்கான பங்கு ஈவுத்தொகையாக 204 கோடியே 1 இலட்சத்து 19 ஆயிரத்து 409 ரூபாய்க்கான காசோலையை வழங்கியுள்ளது.

**தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (SIPCOT)**

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் மாநிலத்தில் பரவலாக தொழில் பூங்காக்களை உருவாக்கி, நிர்வகித்து வருகிறது. இந்நிறுவனம், தமிழ்நாடு அரசுக்கு, 2022 - 2023ஆம் நிதியாண்டிற்கான பங்கு ஈவுத் தொகையாக 75 கோடியே 81 இலட்சத்து 23 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை வழங்கியுள்ளது.


**தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC)**

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், தமிழ்நாட்டின் குறு, சிறு, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான உற்பத்தி மற்றும் சேவை சார்ந்த நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கி வருகிறது. இக்கழகம், தமிழ்நாடு அரசுக்கு 2022 - 2023ஆம் நிதியாண்டிற்கான பங்கு ஈவுத் தொகையாக 15 கோடியே 17 இலட்சத்து 61 ஆயிரத்து 400 ரூபாய்க்கான காசோலையை வழங்கியுள்ளது.

**தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் (TNPL)**

கரும்பு சக்கையை முக்கிய மூலப்பொருளாகக் கொண்டு, செய்தித்தாள், அச்சு மற்றும் எழுது காகிதம் தயாரிக்கும் பொருட்டு, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் நிறுவப்பட்டது. இந்நிறுவனம் தற்போது, இருபுறமும் மேற்பூச்சு செய்யப்பட்ட அடுக்கு காகித அட்டை, உயர்ரக காகித உற்பத்தி என படிப்படியாக விரிவாக்கங்களை மேற்கொண்டு வருகிறது. இந்நிறுவனம், தமிழ்நாடு அரசுக்கு 2022 - 2023 ஆண்டிற்கான பங்கு ஈவுத் தொகையாக 12 கோடியே 22 இலட்சத்து 24 ஆயிரத்து 500 ரூபாய்க்கான வங்கி வரைவோலையை வழங்கியுள்ளது.

இந்நிகழ்ச்சியின்போது தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அரசு செயலாளர் வி.அருண் ராய், கூடுதல் தலைமைச் செயலாளர் / தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழக தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், ஹன்ஸ் ராஜ் வர்மா, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் கூடுதல் தலைமைச் செயலாளர் / தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் முனைவர் மு.சாய்குமார், 'டிட்கோ' நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி, "சிப்காட்" நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கே.செந்தில் ராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





கடலூர் மாநகராட்சி, கடலூர் முதுநகர், காந்தி பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள சுதந்திரப் போராட்ட தியாகி அஞ்சலை அம்மாள் அவர்களின் திருவுருவச் சிலையை, தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்தார். பின்னர் வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அம்மையாரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சியர் டாக்டர் அ.அருண்தம்புராஜ், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் ஆர்.ராஜாராம், மாநகர மேயர் சுந்தரி ராஜா, மாவட்ட வருவாய் அலுவலர் ராஜசேகர், மாநகர கழக செயலளர் கே.எஸ். ராஜா,துணை மேயர் பா.தாமரைச்செல்வன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள், கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

### நன்னியூர் ராஜேந்திரன் தலைமை! தென் மண்டல மாவட்டங்களின்

# கழக நெசவாளர் அணி நிர்வாகிகள் கூட்டம்!

## அமைச்சர்கள் க.பொன்முடி - ஆர்.காந்தி - பி.மூர்த்தி - பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் - அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி - கோ.தளபதி - மு.மணிமாறன் பங்கேற்பு!

மதுரை, நவ. 3 -

திராவிட முன்னேற்றக் கழக நெசவாளர் அணியின் தென் மண்டல மாவட்டங்களான மதுரை வடக்கு, மதுரை தெற்கு, மதுரை மாநகரம், விருதுநகர் வடக்கு, விருதுநகர் தெற்கு, ராமநாதபுரம், தூத்துக்குடி தெற்கு, தூத்துக்குடி வடக்கு, தூத்துக்குடி மாநகரம், தென்காசி வடக்கு, தென்காசி தெற்கு, திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி மத்தியம், நெல்லை மாநகரம், கன்னியாகுமரி மேற்கு, கன்னியாகுமரி கிழக்கு, நாகர்கோவில் மாநகரம் ஆகிய மாவட்டங்களின் அனைத்து நெசவாளர் அணி நிர்வாகிகள் கூட்டம் நாளை (4.11.2023 - சனிக்கிழமை) காலை 10.00 மணி மதுரை கோபாலசாமி திருமண மண்டபம், ஜி.எஸ்.டி.ரோடு (பசுமலை மன்னர் கல்லூரி அருகில்) நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு மாநில நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன் தலைமை வகிக்கிறார்.

மாநில நெசவாளர் அணி துணை தலைவர் ஓ.ஏ.நாகலிங்கம், எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், காஞ்சி தி.அன்பழகன், பரணி கே.மணி, கே.எம்.நாகராஜன், சிந்து ரவிச்சந்திரன், ஜி.வி.மணிமாறன், ஆ.ராமசாமி, மு.கோவிந்தசாமி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாநில நெசவாளர் அணி செயலாளர் க.பழனிசாமி வரவேற்கிறார். மாநில நெசவாளர் அணி செயலாளர் நெல்லை சொ.பெருமாள் நிகழ்ச்சியை ஒருங்கிணைக்கிறார். வசந்தம் ஏ.சி.ஜெயக்குமார் தொகுப்புரையாற்றுகிறார்.

இக்கூட்டத்தில் அமைச்சர்கள் முனைவர் க.பொன்முடி, ராணிப்பேட்டை ஆர்.காந்தி, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர்கள் பி.மூர்த்தி, பி.டி.ஆர்.பழனிவேல்தியாகராஜன், மாவட்டச் செயலாளர்கள் கோ.தளபதி, மு.மணிமாறன் ஆகியோர் சிறப்புரை யாற்றுகின்றனர்.

பொருள்: முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா, நீட் விலக்கு எங்கள் இலக்கு, மற்றும் கையெழுத்து இயக்கம் கழக ஆக்கப்பணிகள் பி.வெள்ளைத்துரை நன்றி கூறுகிறார்.

என்.வி.ஆர்.வினோத், கு.உலகநாதபாண்டியன் ஆகியோர் விளம்பரம் மற்றும் கைத்தறி கண்காட்சி குழுவினராக செயல்படுகின்றனர்.

### கேரள சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காத

# ஆளுநருக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் வழக்கு!

## பினராயி விஜயன் அரசு தொடர்ந்தது!

திருவனந்தபுரம், நவ. 3 -

மாநில அரசுகளுக்கு முட்டைக்கட்டையாக செயல்படும் ஆளுநர்களைக் கண்டித்து அந்தந்த மாநிலங்கள் சார்பில் நீதிமன்றங்களில் வழக்கு தொடரப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில், தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு வழக்கு தொடர்ந்துள்ளது. சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கு தமிழ்நாடு ஆளுநர் காலவரையின்றி நிலுவையில் வைத்துள்ளதை எதிர்த்து தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளது. ஆளுநரின் நடவடிக்கைகள் அரசியல் சாசனத்திற்கு எதிரானது என்றும் தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது. இந்நிலையில், தற்போது, கேரள ஆளுநர் ஆரிப் கானுக்கு எதிராக, பினராயி விஜயன் அரசு உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளது. கேரளாவில் உள்ள பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்களை நியமிப்பது குறித்து ஆளுநருக்கும் கேரள மாநில அரசுக்கும் இடையில் மோதல் நடந்து கொண்டிருக்கிறது. கேரள ஆளுநர் தனது அதிகாரத்தை தவறாக பயன்படுத்துவதாகவும், சங்பரிவார் கொள்கைகளின் அடிப்படையில் ஆளுநர் ஆரிஃப் முகமது கான் செயல்படுவதாகவும் முதலமைச்சர் பினராயி விஜயன் குற்றஞ்சாட்டியிருந்தார். இதனைத் தொடர்ந்து உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

கேரள சட்டமன்றம் நிறைவேற்றி அனுப்பிய 8 மசோதாக்களுக்கு ஆளுநர் ஆரிஃப் கான் ஒப்புதல் அளிக்கவில்லை என மனுவில் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. 3 மசோதாக்கள் 2 ஆண்டுகளாகவும், 5 மசோதாக்கள் ஓராண்டாகவும் நிலுவையில் உள்ளதாக கேரள அரசு தெரிவித்திருக்கிறது. மக்கள் நலன், ஜனநாயக நடைமுறைகளைக் கருத்தில் கொண்டு குறிப்பிட்ட காலவரம்புக்குள் மசோதாக்கள் மீது ஆளுநர்கள் முடிவு எடுக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட வேண்டும் என்று கேரள அரசு வலியுறுத்தியுள்ளது.

அரசியலமைப்புக்கு உட்பட்டு ஆளுநர் செயல்படத் தவறிவிட்டார் என்றும், அரசியலமைப்புக் கடமைகள் மற்றும் பணிகளை செய்ய ஆளுநர் தவறிவிட்டார் என்று அறிவிக்க வேண்டும் என்றும் கேரள அரசு தனது மனுவில் கோரிக்கை வைத்துள்ளது.

தமிழ்நாடு, கேரளா, பஞ்சாப், மேற்குவங்க மாநில அரசுகள் ஆளுநர்களுக்கு எதிராக மனுக்களை தாக்கல் செய்துள்ளதால், அனைத்து மனுக்களையும் ஒன்றாக இணைத்து உச்சநீதிமன்றம் விரைவில் விசாரணை நடத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# சின்னாளப்பட்டியில் பசும்பொன் தேவர் பிறந்தநாள் விழா!

## ஐ.பி.செந்தில்குமார் எம்.எல்.ஏ. தலைமையில் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை!

திண்டுக்கல், நவ.3 -

சின்னாளப்பட்டியில் பசும்பொன் தேவர் திருமகனாரின் 116வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் ஐ.பி. செந்தில்குமார் தலைமையில் நூற்றுக்கணக்கான தி.மு.க.வினர் பசும்பொன் தேவர்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள் தேசியமும், தெய்வீகமும் இரண்டு கண்போல் நினைத்து வாழ்ந்தவர் தேவர் திருமகனார் என்று ஐ.பி.செந்தில்குமார் புகழாரம் சூட்டினார்.

திண்டுக்கல் மாவட்டம் சின்னாளப்பட்டி வடக்கு தெரு பகுதியில் அமைந்துள்ளது பசும்பொன் தேவர் திருமகனாரின் திருவுருவச்சிலை ஒவ்வொரு வருடமும் தேவர் ஜெயந்தியை முன்னிட்டு திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதியில் இருந்தும் அரசியல் கட்சிபிரமுகர்கள் ஊர்வலமாக வந்து மாலை அணிவித்து மரியாதை செலுத்துவது வழக்கம் இவ்வருடம் பசும்பொன் தேவரின் 116வது ஜெயந்தியை முன்னிட்டு தி.மு.க. சார்பாக மாலை அணிவிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு ஆத்தூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் பிள்ளை யார் நத்தம் முருகேசன் தலைமை தாங்கினார். ஆத்தூர் ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி முருகேசன், துணைப்பெருந்தலைவர் ஹேமலதா மணிகண்டன், பேரூராட்சிமன்ற தலைவர் பிரதீபா, துணைத்தலைவர் ஆனந்தி, ஆகியோர் முன்னிலை வகித்தனர். சின்னாளபட்டி நகர தி.மு.க. செயலாளர் மோகன்ராஜ் வரவேற்றார்.

திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், பழனி சட்டமன்ற உறுப்பினருமான ஐ.பி. செந்தில்குமார் தலைமையில் தி.மு.க.வினர் சின்னாளப்பட்டி பேருந்து நிலையத்திலிருந்து ஊர்வலமாக தேவர் சிலை பகுதிக்கு வந்தனர். அங்கு பசும்பொன் தேவர் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து வணங்கிவிட்டு பேசுகையில் இன்று தமிழகம் முழுவதும் பசும்பொன் முத்துராமலிங்க தேவர் திருமகனாரின் பிறந்த நாளை அனைத்து மக்களும் கொண்டாடி வருகின்றனர். அதற்கு காரணம் அவர் ஜாதி, மத, இன பேதமின்றி தேசியத்தையும், தெய்வீகத்தையும் இரண்டு கண் போல் நினைத்து வாழந்தவர். அவரின் ஜெயந்தியை முன்னிட்டு காலையில் பசும்பொன் சென்று தேவர் திருமகனாரை வணங்கிவிட்டு சின்னாளப்பட்டி யில் உள்ள தேவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தியுள்ளேன்.

ஒவ்வொரு வருடமும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி இங்கு வந்து தேவர் சிலைக்கு மாலை அணிவித்து வணங்குவது வழக்கம். மருத்துவரின் ஆலோசனைப்படி ஓய்வு எடுத்து வருவதால் அவரால் இங்கு வரமுடியவில்லை. அவரின் சார்பாக நான் இங்கு வந்து பசும்பொன் தேவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தியுள்ளேன். என்னுடைய பிறந்தநாளும் இன்று வருவதால் அவரின் பிறந்தநாள் அன்று தேவர் அய்யா சிலை அருகே எனக்கு தி.மு.க.வினர் பலர் வாழ்த்துச் சொன்னது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது என்றார்.

நிகழ்ச்சியில் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. துணை செயலாளர் பிலால் உசேன், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் துரை பாண்டி, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி பாறைப்பட்டி வாஞ்சிநாதன், ஒன்றியக் குழு உறுப்பினர் செல்வி காங்கேயன், சின்னாளப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் பெ.செல்வராஜ், தலைமை எழுத்தர் கலியமூர்த்தி, துப்புரவு ஆய்வாளர் கணேசன், முன்னாள் செயலாளர்கள் எஸ்.கே.துரை, பாலகிருஷ்ணன், அறிவழகன் மற்றும் ஊராட்சிமன்ற தலைவர்கள், செட்டியபட்டி ராஜா, பிள்ளையார் நத்தம் உலகநாதன், பேரூராட்சி வார்டு உறுப்பினர்கள், லெட்சுமி குமரகண்ணன், ஹேமா தம்பிதுரை, தாமரை செல்வி, சுப்ரமணி, அரசு ஒப்பந்தகாரர் நாக கண்ணன், இளைஞரணியை சேர்ந்த ஓ.பி. பாரதிராஜா, வினோத், கனகராஜ், தி.மு.க. நிர்வாகிகள் ஜீவா நகர் தங்கபாண்டி, 9வது வார்டு செண்டு கணேசன், சைக்கிள் கடை மணி, கேபிள் ராஜா, அண்ணா நகர் சுகுமாறன், சோலை முருகன், மற்றும் இளைஞர் அணியினர், உட்பட பலர் கலந்துகொண்டனர். முன்னதாக தேவர் சிலைக்கு மாலை அணிவிக்க வந்த திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் ஐ.பி.செந்தில் குமாரை தேவர் சிலை பராமரிப்பு நிர்வாகிகள் வரவேற்றனர்.




சென்னையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் தலைமையில் பழங்குடியின தொழில் முனைவோர் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்வின் போது தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) மேலாண்மை இயக்குனர் க.சு.கந்தசாமி, பழங்குடியினர் நல இயக்குனர் எஸ்.அண்ணாதுரை, தமிழ்நாடு நரிக்குறவர் கூட்டமைப்பு நிறுவனர் தலைவர் ஆர்.சுப்பிரமணியன், தமிழ்நாடு பட்டியல் பழங்குடியினர் (மலையாளி) பேரவை பொதுச் செயலாளர் என்.மோகன், தென்னிந்திய பட்டியல் பழங்குடியினர் நலசங்க காரைத் தலைவர் ஆர்.ஞானசுந்தரி, பழங்குடியின உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### இரா.ஆவுடையப்பன் தலைமையில் - தென் மண்டல அளவிலான

# மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி ஆலோசனைக் கூட்டம்!

## டி.செங்குட்டுவன் ஆலோசனை வழங்கினார்!

நெல்லை, நவ. 3 -

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆலோசனைப்படி

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பல்வேறு நிகழ்ச்சிகள்,நலத்திட்ட உதவிகள் வழங்குவது தொடர்பாக நெல்லை,குமரி,தென்காசி,விருதுநகர், தேனி மாவட்டங்களை உள்ளடக்கிய தி.மு.க.தென் மண்டல அளவிலான மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி ஆலோசனைக் கூட்டம் நெல்லை வண்ணார் பேட்டை ஹோட்டல் அஃப்னா பார்க்கில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் மாநில அமைப்பு சாரா ஓட்டுனர் அணி துணைச் செயலாளர் அம்பாசமுத்திரம் தொகுதி பார்வையாளர் எம்.சிவராஜ் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாநில அமைப்பு சாரா ஓட்டுநர் அணி செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான டி.செங்குட்டுவன் பங்கேற்று முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை சிறப்பாக கொண்டாடுவது குறித்தும், வர இருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலில் 40 தொகுதிகளிலும் வெற்றி பெறுவது தொடர்பாகவும்,அமைப்பு சாரா ஓட்டுநர் அணியினர் தீவிரமாக பணியாற்றிடவும் ஆலோசனைகளை வழங்கியும் உரையாற்றினார்.

நிகழ்வில் மாநில விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன், நெல்லை கிழக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் ஜெ. செல்வசூடாமணி, மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர்கள் அந்தோணி சேவியர் (குமரி கிழக்கு)அனஸ் (குமரி மேற்கு)

பெரியார் (நெல்லை மாநகர்) அண்ணாமலை (தென்காசி தெற்கு) முருகன் (தென்காசி வடக்கு) தங்க மாங்கனி (விருதுநகர் தெற்கு) சிவசுப்பிரமணியன் (விருதுநகர் வடக்கு) மாயக்கண்ணன்(தேனி வடக்கு)

நெல்லை கிழக்கு மாவட்ட துணை அமைப்பாளர்கள் கோபி கோபாலக்கண்ணன்,அண்ணாதுரை, பாலசுப்பிரமணியன், தலைவர் வேல்முருகன்,மணிமுத்தாறு பேரூராட்சி மன்ற உறுப்பினர் மோகன்ராஜா,மாவட்ட இளைஞரணி முன்னாள் துணை அமைப்பாளர் முருகன்,திசையன்விளை பேரூராட்சி உறுப்பினர் நடேஷ் அரவிந்த், உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

### வாக்காளர் பட்டியல் சரிபார்ப்புப்பணி!

# தேனி தெற்கு மாவட்டக் கழகத்தினர் தீவிரமாக ஈடுபடுவீர்!

## மாவட்டக் கழக செயலாளர் கம்பம் நா.இராமகிருஷ்ணன்,எம்.எல்.ஏ., வேண்டுகோள்!



தேனி, நவ. 3 -

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத்தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி தேனி தெற்கு மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பணியில் முழு கவனத்துடன் ஈடுபடுவீர் என தேனி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் கம்பம் நா.இராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ., கழக நிர்வாகிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவித்திருப்பதா வது.

01.01.2024ம் தேதியை தகுதி ஏற்படுத்தும் நாளாக கொண்டு தமிழகத்தில் உள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட வரைவு வாக்காளர் பட்டியலை கடந்த 27.10.2023 அன்று தமிழக தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து 27.10.2023 முதல் 09.12.2023 வரை புதிய வாக்காளர்களை சேர்க்கவும், மற்றும் பெயர்கள் நீக்கம் செய்யவும், மனு செய்ய தேர்தல் ஆணையத்தால் கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

இது தவிர 04.11.2023, சனி 05.11.2023, ஞாயிறு, 18.11.2023, சனி மற்றும் 19.11.2023, ஞாயிறு ஆகிய 4 நாட்களில் நிர்ணயி க்கப் பட்ட வாக்குச்சாவடி மையங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட உள்ளது. இந்த நாட்களில் விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும் 01.01.2024 அன்று 18 வயது நிரம்பக் கூடிய புதிய வாக்காளர்களும் தங்களது பெயர்களை சேர்க்க, நீக்க, திருத் தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பூர்த்தி செய்து, பூர்த்தி செய்த படிவங்களை அந்தந்த முகாம்களில் கொடுக்க வேண்டும்.

இதன் அடிப்படையில் 01.01.2024 அன்று 18 வயது நிரம்பியவர்கள் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம்பெறாத பெயர்களையும், புதிதாக குடிபெயர்ந்துள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும். தொகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும் தீவிர பணிகள் மேற்கொள்ள வேண்டும்.

தேனி தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், வார்டு, கிளைக் கழக செயலாளர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (டீடியு 2) ஆகியோர் தங்களை இப்பணியில் முழுமையாக ஈடுபடுத்தி தாங்கள் ஆற்றிய பணியின் விபரத்தை மாவட்டக் கழகத்திற்கு அவ்வப்போது தெரிவித்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிவிப்பில் தெரிவித்துள்ளார்.

### வாக்காளர் பட்டியல் சரிபார்ப்புப் பணி!

# கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழகத்தினர் தீவிரமாக ஈடுபடுவீர்!

## கழகத்தினருக்கு தா.உதயசூரியன் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!



கள்ளக்குறிச்சி, நவ. 3 -

வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியில் கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழகத்தினர் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு விடுபட்ட மற்றும் புதிய வாக்காளர்களை சேர்த்திட வேண்டுமென கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழக செயலாளர், தா.உதயசூரியன் எம்.எல்.ஏ அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

01.01.2024 தேதியை தகுதியேற்படுத்தும் நாளாக கொண்டு வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்திட வரைவு வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் 27.10.2023 அன்று வெளியிட்டுள்ளது. 27.10.2023 முதல் 09.12.2023 வரை புதிய வாக்காளர்களை சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும், திருத்தம் செய்யவும் மனு செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

இது தவிர 04.11.2023 (சனிக்கிழமை), 05.11.2023 (ஞாயிற்றுக்கிழமை), 18.11.2023 (சனிக்கிழமை), 19.11.2023 (ஞாயிற்றுக் கிழமை) ஆகிய நான்கு நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட மையங்களில் சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளன.

இந்நாட்களில் விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும் 01.01.2024 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று பூர்த்தி செய்து அந்த படிவங்களை அந்தந்த முகாம்களில் கொடுக்க வேண்டும்.

17வயது நிரம்பிய வர்களும், உரிய ஆவணங்களோடு விண்ணப்பிக்கலாம். அவர்கள் 18வயது நிரம்பும்போது வாக்காளர் பட்டியலில் இடம்பெற இந்திய தேர்தல் ஆணையம் ஏற்பாடு செய்திருக்கிறது.

இதன் அடிப்படையில் 2024 ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும் புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும். தொகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள மேற்கண்ட அட்டவணையின்படி சிறப்பு முகாம்கள் நடைபெறவிருக்கும் நாட்களில், நமது கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டத்தில் உள்ள சங்கராபுரம், உளுந்தூர்பேட்டை தொகுதிகளுக்குட்பட்ட வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA-2) உடன் ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் தங்களை முழுமையாக இப்பணியில் ஈடுபடுத்திட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.11.2023) தலைமைச் செயலகத்தில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை சார்பில் தமிழ்நாடு டிஜிட்டல் மயமாக்கல் வியூகம் (Tamil Nadu Digital Transformation Strategy DiTN) ஆவணத்தை வெளியிட்டார். இந்த நிகழ்ச்சியில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை முதன்மைச் செயலாளர் தீரஜ்குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.11.2023) தலைமைச் செயலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில், விளையாட்டு இடஒதுக்கீட்டின் கீழ் (Sports Quota) விளையாட்டு வீரர்கள் எஸ்.மனோஜ், ஆனந்தன் மற்றும் செல்வி.ரோஸிமீனா ஆகியோருக்கு தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தில் இளநிலை அலுவலர் பணியிடத்திற்கான பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் கூடுதல் தலைமைச் செயலாளர் / தலைவர் மேலாண்மை இயக்குநர் முனைவர் மு.சாய் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மூத்த தலைவர் சங்கரய்யாவுக்கு ‘கௌரவ டாக்டர்’ பட்டம் வழங்க ஆளுநர் மறுப்பதா? மதுரை காமராசர்

# பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா புறக்கணிப்பு!

## உயர் கல்வித் துறை அமைச்சர் க.பொன்முடி அறிவிப்பு

சென்னை, நவ. 3 -

**மூத்த தலைவர் என்.சங்கரய்யாவுக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்க ஆளுநர் மறுப்பதைக் கண்டித்து மதுரை காமராசர் பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாவை புறக்கணிக்கப் போவதாக உயர் கல்வித் துறை அமைச்சர் க. பொன்முடி அறிவித்துள்ளார்.**

உயர்கல்வித் துறை அமைச்சர், முனைவர் க.பொன்முடி நேற்று முன்தினம் (01.11.2023) தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு :-


நாளை நடைபெறவிருக்கின்ற மதுரை காமராசர் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவை இணைவேந்தர் என்ற முறையில் புறக்கணிப்பதாக முடிவெடுத்திருக்கிறேன். ஏனென்றால் உங்களுக்குத் தெரியாதது அல்ல, நாளை நடைபெறவிருக்கிற பட்டமளிப்பு விழாவில் மரியாதைக்குரிய அய்யா சங்கரய்யா அவர்களுக்கு கௌரவ முனைவர் பட்டம் வழங்க வேண்டும் என்று அந்த பல்கலைக்கழகத்தினுடைய ஆளவை மன்றம் (Syndicate), ஆட்சிமன்றம் (Senate) இரண்டுமே தீர்மானங்களை நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பி இருந்தோம். அதற்கு பிறகும் அவர் அதை நிராகரித்தார். அதுவும் குறிப்பாக, இந்த தீர்மானங்களை 18.08.2023 நடைபெற்ற காமராசர் பல்கலைக்கழக ஆட்சிக்குழு, அதேபோல 20.09.2023 நடைபெற்ற அந்த பல்கலைக்கழகத்தின் ஆட்சிப் பேரவைக்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டு ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

**சுதந்திர போராட்டத்தில் ஈடுபட்டவர்!**

சங்கரய்யா அவர்களை பற்றி ஆளுநருக்கு தெரியாவிட்டால், கேட்டிருக்க வேண்டும். சங்கரய்யா 1922ல் பிறந்தவர். அமெரிக்கன் கல்லூரியில் பட்டப் படிப்பில் இறுதியாண்டு படித்துக் கொண்டிருந்தபோது, அந்த படிப்பை நிறுத்திவிட்டு சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு ஐந்து ஆண்டுகள் சிறையில் இருந்தவர். அது மட்டுமல்ல, அதற்கு பிறகும் கூட சமூக நீதிக்காக, பொருளாதார சமத்துவத்திற்காக, பலமுறை போராட்டங்களை சந்தித்து, அவர் நான்கு ஆண்டு காலம் சிறையில் இருந்தவர். ஆகவே, 9 ஆண்டு காலம் சிறையில் இருந்தவருக்கு, சுதந்திர போராட்ட வீரராக இருந்த ஒருவருக்கு இன்றளவும் 102 வயதிலும், மக்களுக்காக குரல் கொடுத்துக் கொண்டிருக்கிற அவருக்கு ஒரு கௌரவ முனைவர் பட்டம் கொடுக்க வேண்டும் என்று ஆளவை மன்றமும் ஆட்சி மன்றமும் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பிய பிறகும், மறுத்திருக்கிறார். அவர் மறுத்ததற்கு பிறகு மீண்டும் ஒருமுறை அந்த ஆளவை மன்றம் மற்றும் ஆட்சிமன்றம் அந்த தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பியிருக்கிறார்கள்.

**சமூக நீதி பேசுபவர்களை ஆளுநருக்குப் பிடிப்பதில்லை!**

அந்த பல்கலைக்கழகத்தின் விதி என்னவென்றால், மேற்படி கௌரவ பட்டம் வழங்கும் அதிகாரம் மதுரை காமராசர் பல்கலைக்கழக சட்டம் 1965 அத்தியாயம் 20 தொகுதி 1ல் ஆட்சி பேரவைக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆளவை மன்றம் & ஆட்சி மன்றத்திற்குதான் அந்த அதிகாரம் இருக்கிறது. எந்த ஒரு சட்டமும் அவர் மதிப்பதில்லை. திராவிட மாடல், பொருளாதார சமத்துவம், சமூக நீதி ஆகியவற்றை எல்லாம் பேசுபவர்களை கண்டாலே அவருக்கு பிடிப்பதில்லை. அதனால்தான் கௌரவ முனைவர் பட்டம் கொடுக்க கூடாது என்ற எண்ணத்தில் அவர் இருக்கிறார். சுதந்திர போராட்ட வீரர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று கேட்கிறார். தமிழ்நாடு மக்களுக்காக போராடிய சங்கரய்யா அவர்களுக்கு கௌரவ முனைவர் பட்டம் வழங்க மறுப்பதற்கான காரணம் என்ன? விளக்கம் கொடுக்கத் தயாரா? ஏன் கொடுக்கவில்லை என்று சொல்ல முடியுமா?



**பட்டம் கொடுக்க மறுக்கும் ஆளுநர்!**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நீண்ட காலம், இந்த சமுதாயத்திற்காக போராடியவருக்கு முதன்முதலாக “தகைசால் தமிழர் விருது” வழங்கப்படும் என அறிவித்தார்கள். முதன்முதலாக சங்கரய்யா அவர்களுக்கு தகைசால் தமிழர் விருதை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார். அந்த விருதை வழங்குகிறபோது அவருக்கு கொடுக்கப்பட்ட 10 இலட்சம் ரூபாய் தொகையை கூட அவர் பெற்றுக் கொள்ளாமல், எனக்கு இவை வேண்டாம், நீங்கள் தங்களுடைய அரசு பணத்திலேயே சேர்த்து ஏழை மக்களுக்கு உதவுங்கள் என்று சொன்ன சங்கரய்யா அவர்களுக்கு இன்று ஆளுநர் கௌரவ முனைவர் பட்டம் கொடுப்பதற்கு மறுக்கிறார்.

இந்த திராவிட மாடல் அரசு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சுதந்திர போராட்ட வீரர்களுக்கு மரியாதை கொடுப்பதில்லை என்று ஆளுநர் சொல்கிறார். அதற்கெல்லாம் விளக்கம் உங்களுக்கு தெரியும், நாங்கள் பலமுறை சொல்லிவிட்டோம். மருது சகோதரருக்கு என்னென்ன செய்திருக்கிறார் என்பதும் உங்களுக்குத் தெரியும். சென்னையிலேயே மருது சகோதரருக்கு சிலை அமைத்துக் கொடுத்தவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். அந்த அளவுக்கு சுதந்திர போராட்ட வீரர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கெல்லாம் உதவியது தான் நம்முடைய திராவிட மாடல் ஆட்சி. அண்ணாவாக இருந்தாலும், கலைஞராக இருந்தாலும், தளபதியாக இருந்தாலும், அனைவருக்கும் நல்லது செய்யவேண்டும் என்று நினைப்பவர்கள்.

**நடிப்புச் சுதேசிகள்!**

அந்த காலத்தில் பாரதியார் நடிப்புச் சுதேசிகள், நிறைய பேர் இருக்கிறார்கள் என்று பாடியிருக்கிறார். இப்போது நடிப்புச் சுதேசியர்களாக இந்த ஆளுநர் போன்றவர்கள் இருப்பது உண்மையிலேயே வருந்தத்தக்கது. ஒரு சுதந்திர போராட்ட வீரருக்கு, ஒரு பொதுவுடைமைவாதிக்கு, 102 வயதில் வாழ்ந்து கொண்டிருக்கிற ஒருவருக்கு கௌரவ முனைவர் பட்டம் கொடுக்காததற்கு காரணம் என்ன? சொல்லச் சொல்லுங்கள். அதைச் சொல்வதற்கு அவருக்கு தைரியம் இல்லை.

நான் உங்கள் மூலமாகவே அவருக்கு வேண்டுகோள் விடுத்தேன். இரண்டாவது முறையாகவும் வேண்டுகோள் விடுத்தேன். ஆனால் எதையும் அவருடைய செவிகளில் ஏற்கவில்லை. அவருக்கு எதுவும் தெரியாத காரணத்தினால், அவர் தமிழக வரலாற்றைப் புரிந்து கொள்ளாமல்,

சங்கரய்யா அவர்களுக்கு கொடுக்கவிருந்த இந்த கௌரவ முனைவர் பட்டம் கொடுப்பதற்கு அவர் மறுக்கிறார். இவரைப்போல உண்மையிலேயே சுதந்திரப் போராட்டத்திற்கு எதிரிகள் இருக்க முடியாது. காரணம் என்னவென்றால், அவர் அந்த காலத்திலிருந்து ஆர்.எஸ்.எஸ்.ஸில் இருந்தவர். அவர்களுக்கு சுதந்திரப் போராட்ட வீரர்கள் மீதெல்லாம் மதிப்பு கொடுப்பது கிடையாது. அவர் ஆர்.எஸ்.எஸ். பி.ஜே.பி. அரசாங்கத்தினுடைய ஏஜெண்ட், அதுவும் அவர்கள் சொல்லி இவர் செய்கிறாரா? இவரா செய்கிறாரா என்பது தெரியவில்லை, இருந்தாலும் அவர் செய்வதெல்லாம் பி.ஜே.பி. க்கும், அதேபோல, ஆர்.எஸ்.எஸ். க்கும் ஆதரவாகத்தான் இதையெல்லாம் செய்கிறார் என்பது மிகத் தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது.

அந்த அடிப்படையில்தான் அவர் தினமும் பொய் சொல்வதையே தன்னுடைய தொழிலாகக் கொண்டிருக்கிறார். ஆளுநர் வீட்டிற்கு எதிரே நடந்தது என்ன மாதிரி என்று உங்களுக்கே தெரியும், காவல்துறையினர் மிகச் சிறப்பாக எல்லா மக்களுக்கும் தெரியும் வகையில், புரிகின்ற வகையில் வெளியிட்டதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அதுபோல நடந்து கொண்டிருக்கிற பொழுது, அவர் உடனே என்ன சொல்கிறார், கவர்னர் மாளிகைக்குள் வந்தார்கள், வீசினார்கள், போனார்கள், இதற்கு ஒரு அளவு இல்லையா? ஒரு ஆளுநர் என்றால் யார்? நான் அடிக்கடி சொல்வதுண்டு, He is only a nominal Exe cutive பெயரளவுக்கு தான் நிர்வாகி.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அமைச்சரவையில் இருப்பவர்கள் தான் real executive அதுதான் உண்மை. அந்த Real executive இருக்கின்றவர்கள் சொல்வதை கையெழுத்து போடுவது தான் அவருடைய வேலை. அதற்கு தான் உச்ச நீதிமன்றத்துக்கு நாங்கள் சென்றிருக்கிறோம். உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றதற்கு காரணம், பல்வேறு கோப்புகளில் கையெழுத்துப் போடாமல் வைத்திருக்கிறார். அடித்தட்டு மக்களுக்கு உதவ வேண்டிய அவசியம் இருக்கின்ற இந்த காலகட்டத்தில், இவ்வளவு நிதி நெருக்கடி இருக்கின்ற நேரத்தில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடித்தட்டு மக்களுக்கு எவ்வளவு செய்து கொண்டிருக்கிறார் என்பது உங்களுக்குத் தெரியும். ஆகவே நீங்கள் குறிப்பாக அவருக்கு சொல்ல வேண்டியது இது தான். ஆளுநர் அவர்களே, முதலில் நான் சொன்ன மாதிரி, You are not a real executive. நீங்கள் உண்மையிலேயே நம்முடைய தமிழகத்தினுடைய அமைச்சரவை என்ன சொல்லுகிறதோ அதை செய்ய வேண்டியவர்.

**ஆளுநருக்கு தைரியம் உண்டா?**

நீங்கள் நியமிக்கப்பட்டு இருக்கலாம், ஆனால், நீங்கள் அவர்கள் சொல்லுவதைக் கேட்டு, இந்த ஆட்சி நடத்த வேண்டும் என்பது இல்லை, அது தெளிவாக அரசியலமைப்புச் சட்டத்திலேயே இருக்கிறது. அமெரிக்காவில் கவர்னர் இருக்கிறார் என்றால், He is elected, அது உண்மையான federation. இந்தியாவிலேயே இருப்பது Quasi federation. இந்திய நாட்டில் மாநில உரிமைகளைப் பறிக்கும் வகையில் ஒரு மாநில ஆளுநர் செயல்படுகிறார் என்று சொன்னால் அது மிகவும் கண்டிக்கத்தக்கது. ஆளுநர் அவர்களே, நீங்கள் வேண்டுமென்றால், தேர்தலில் நின்று, ஜெயித்து வாருங்கள். வந்த பிறகு, உங்கள் ஆர்.எஸ்.எஸ்., பி.ஜே.பி. கருத்துக்களை எல்லாம் பேசுங்கள். அதற்கு அவருக்கு தைரியம் கிடையாது.

அப்படி இருக்கின்ற ஒருவர், நியமிக்கப்பட்ட ஒரு ஆளுநராக இருந்து கொண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுடைய பிரதிநிதியாக இருக்கின்ற இந்த அமைச்சரவை கூடுகின்ற சட்டங்களில் கையெழுத்திட மறுக்கிறார் என்று சொன்னால், இதை விட மோசமான ஆளுநர் இதுவரை இருந்ததில்லை. நானும் ரொம்ப நாளாக மாணவ பருவத்திலிருந்து ஆளுநர்களை எல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் இவரைப்போல தவறு செய்பவர்கள் யாரும் இருக்க முடியாது. இவரை போல பொய் பேசுபவர்கள் யாரும் இருக்கமுடியாது. உண்மைக்கு புறம்பான பல்வேறு செய்திகளை எடுத்து வைத்து இந்த ஆட்சியின் மீது எப்படியாவது ஒரு களங்கத்தை கற்பிக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் ஆளுநர் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார் என்பதை நாட்டு மக்கள் மிகத் தெளிவாக புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

**பட்டமளிப்பு விழாவை புறக்கணிக்க முடிவு!**

ஆகவேதான் சங்கரய்யா அவர்களுக்கு, பல்கலைக் கழகம் கௌரவ முனைவர் பட்டம் கொடுப்பதை நாங்கள் வரவேற்றோம். அதை செய்யவேண்டும் என்று சொன்னோம். ஆளவை மன்றம், ஆட்சிமன்றம் கொண்டு வந்த தீர்மானம் எல்லாம் நிறைவேறியது. ஆனால் ஆளுநர் அவர்கள் அதற்கு மறுத்திருக்கிறார். அதனால்தான் நாளை மதுரையில் நடைபெறவிருக்கின்ற பட்டமளிப்பு விழாவில் நான் கலந்து கொள்வதாக இல்லை. இன்றைக்கும் ஆசிரியர் சங்கத்திலிருந்தும் ஒரு அறிக்கையை கொடுத்திருக்கிறார்கள். இவ்வளவு பேர் சொல்லியும், இவர் கேட்கமாட்டேன் என்று சொல்கிறார் என்றால், இவர் எந்த எண்ணத்தில் செயல்படுகிறார் என்பதை பத்திரிகையாளர்களாக இருக்கின்ற நீங்கள்தான் தெளிவாக புரிந்து கொள்ளவேண்டும். ஆகவே, ஆளுநர் அவர்களை பொறுத்தவரையில், நாளைக்கு அவர் நடத்தவிருக்கின்ற பட்டமளிப்பு விழாவில் நாங்கள் கலந்து கொள்ளாமல் புறக்கணிக்கிறோம் என்பதை உங்கள் மூலமாக தெரிவித்துக் கொள்கிறேன்.

**கேள்வி :** *நீங்கள் அமைச்சர், ஒரு நியமன ஆளுநர் சொல்வதற்காக நீங்கள் ஏன் போகாமல் இருக்கிறீர்கள்?*

**அமைச்சர் க.பொன்முடி:** அவர்தான் அதை நடத்துகிறார். முன்பு பட்டமளிப்பு விழா நடத்தும்போது இணை வேந்தர், வேந்தர், Chief guestம் பேசுவார்கள். இப்போது, என்னையும் பேசவிடுவதில்லை, அவரும் பேசுவதில்லை, Chief guest மட்டும் பேசினால் போதும் என்று பட்டமளிப்பு விழா நடத்துவதை எங்கேயாவது பார்த்திருக்கிறீர்களா? இவர்தான் அதை செய்கிறார். அவருக்கு வேந்தர் என்ற பதவியை பயன்படுத்திக்கொண்டு, எது வேண்டுமானாலும் செய்யலாம் என்றுதான் நினைக்கிறார். அதனால்தான் வேந்தருக்கு எதிர்ப்பு தெரிவிக்கவேண்டும் என்ற கட்டாயம் எனக்கு இருக்கிறது. அந்த அடிப்படையில்தான், நாங்கள் இந்த பட்டமளிப்பு விழாவை புறக்கணிக்கிறோம்.

**கேள்வி:** *கடிதம் ஏதாவது அவரிடமிருந்து வந்திருக்கிறதா?*

**அமைச்சர் க.பொன்முடி:** இங்கே எந்த கடிதமும் வந்ததுபோல தெரியவில்லை. இன்னும் சொல்லவேண்டும் என்று சொன்னால், இங்கிருந்து அங்கே உள்ள செயலாளரிடம் பேசியிருக்கிறார்கள். துணை வேந்தர் மற்றும் பதிவாளர் நேரடியாக பேசியிருக்கிறார்கள். அவர்கள் பேசியதையும் அவர் ஏற்றுக் கொள்ளவில்லை.

**கேள்வி :** *காரணம் சொல்லவில்லையா?*

**அமைச்சர் க.பொன்முடி:** அவர்கள் நேரடியாகவே சென்று ஆளுநரிடம் இதை கொடுக்கவேண்டும் என்ற வேண்டுகோள் வைத்திருக்கிறார்கள். அப்படி வைத்தும் அவர் கேட்கவில்லை. மேலும், அவர் RSS, பிஜேபியை சேர்ந்தவர். பொருளாதார சமத்துவம், சமூகநீதி பேசுகின்ற திராவிட இயக்கத்தை சேர்ந்தவர்கள் மற்றும் அதற்கு பாடுபட்டவர்கள், சுதந்திர போராட்ட வீரர்களை அவர் புறக்கணிக்க வேண்டும் என்று நினைக்கிறார். அதுதான் இதற்கு காரணமாக இருக்கமுடியும்.

**துணைவேந்தர் நியமனம்!**

**கேள்வி :** *ஏற்கனவே, 12 மசோதாக்கள் தொடர்பாக வழக்கு போட்டிருக்கிறீர்கள். அது எந்த நிலைமையில் உள்ளது? மாநில அரசு பல்கலைக்கழக துணை வேந்தர்களை நியமிக்கும் அதிகாரம் பற்றி...*

**அமைச்சர் க.பொன்முடி:** மாநில அரசு நியமிக்கும் அதிகாரம் ஒன்று. சென்னைப் பல்கலைக்கழகத்தில் துணை வேந்தர் பணியிடம் காலியாக இருக்கிறது. அதேபோல திறந்தவெளி பல்கலைக் கழகத்தில் பணியிடம் காலியாக இருக்கிறது. அங்கெல்லாம், துணை வேந்தர்களை நியமிப்பதற்கு ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கும். அந்த குழுவை யாரால் நியமிக்கப்பட வேண்டும் என்பதற்கு அந்த பல்கலைக் கழக விதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த விதியில் அவர்கள் சொல்லப்பட்டிருப்பதைத் தவிர, ஆளுநர் அவர்கள் என்ன செய்கிறார் என்றால், இரண்டு பேரை அதில் சேர்க்கவேண்டும் என்று நினைக்கிறார். எனவே சட்டமன்றத்தில் ஒருமனதாக நிறைவேறி இருப்பது துணை வேந்தரை நியமிக்கின்ற அதிகாரம் தமிழ்நாடு அரசுக்கு கொடுக்கவேண்டும் என்று நாங்கள் கேட்டிருக்கிறோம்.

**கேள்வி :** *அரசு ஆணை இருக்கிறதே...*

**அமைச்சர் க.பொன்முடி:** பதில் : அரசு ஆணை இருக்கிறது. அதில் இன்னொருவரை சேர்த்து அவர் நியமிக்கிறார்.

**வட இந்திய ஆட்களைத் திணிக்கிறார்கள்!**

**கேள்வி :-** *UGC தன்னுடைய விதியில் nominee இருக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அது பற்றி....*

**அமைச்சர் க.பொன்முடி :** இது தவறான செய்தி. UGC நீதிமன்றத்தில் சொல்லும்போது it will depends upon the will of the states மாநிலங்களின் விருப்பத்தை பொறுத்து அவர்கள் சொன்னால், நியமிக்கலாமே தவிர, நியமித்தே ஆகவேண்டும் என்று எங்கேயும் சொல்லவில்லை. UGCக்கு அந்த அதிகாரம் கிடையாது. எதற்கு ஆளவை மன்றம், ஆட்சிமன்றம் எல்லாம் பல்கலைக் கழகத்தில் இருக்கிறது. அவர்களுக்கு அதிகாரம் இருக்க வேண்டாமா? அவர்கள் ஒரு முறைக்கு இரண்டு முறையாக நிறைவேற்றி அனுப்பிய தீர்மானத்திற்கு ஒரு கௌரவ முனைவர் பட்டம் கொடுக்க மாட்டேன் என்று சொல்கிறார். மூன்று பேர் கொண்ட குழுவால் ஆளவை மன்றம், ஆட்சிமன்றம் கொண்டு வந்த தீர்மானம் நிறைவேற்றியது. அந்த குழுவையும் ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்று சொல்கிறார்கள். இன்னொருவரை நியமியுங்கள் என்று அவர்களுடைய ஆட்களை கொண்டு வந்து திணிக்கிறார்கள்.

வட இந்தியாவில் உள்ள ஆட்களை கொண்டு திணிக்கிறார்கள். இதையெல்லாம் நாம் பார்க்கின்றபோது, நிச்சயமாக இந்த திராவிட மாடல் என்றாலே அவருக்கு கசப்பாக இருக்கிறது. ஆகவே தான் இந்த வேலைகள் எல்லாம் செய்து கொண்டிருக்கிறார் என்பது நடைமுறையில் மக்கள் தெளிவாக புரிந்து கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டை பொறுத்தவரையில் திராவிடத்தை யாராலும் அசைக்க முடியாது, அது உண்மை.

இவ்வாறு அமைச்சர் க.பொன்முடி பேட்டியளித்தார்.


## தமிழினத் தலைவர்

# கலைஞர் நூற்றாண்டு சிறப்பிதழ் (6)

**இன்று (நவம்பர் 3 வெள்ளிக்கிழமை) வெளிவருகிறது!**

**தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினையொட்டி, ஒவ்வொரு மாதமும் 3 ஆம் தேதியன்று “முரசொலி சிறப்பிதழ்” வெளிவரும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.**



**அந்த அறிவிப்பிற்கு ஏற்ப, இன்று (நவம்பர் 3 - வெள்ளிக்கிழமை) முரசொலி சிறப்பிதழ், “கவிஞர்களின் உரை நடையில் கலைஞர்” என்ற தலைப்பில், முரசொலியின் இணைப்பாக வெளிவருகிறது.**

**- ஆசிரியர்.**

## சித்தாந்த ரீதியாக

# மாநில உரிமைகளுக்காகப் பேசக்கூடிய ஒரே முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்!

## "நியூஸ் ஃபோக்கஸ் தமிழ்" இணையதளத் தொலைக்காட்சியில் மூத்த பத்திரிகையாளர் மணி ஆணித்தரமான வாதம்!

**சென்னை,நவ.3-**

**"சித்தாந்த ரீதியாக மாநில உரிமைகளுக்காகப் பேசக் கூடிய ஒரே முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தான்" என்று மூத்த பத்திரிகையாளர் மணி 'நியூஸ் ஃபோக்கஸ் தமிழ்' இணையதளத் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் ஆணித்தரமாகக் கூறியுள்ளார்.**

'நியூஸ் ஃபோக்கஸ் தமிழ்'(news focus tamil) இணைய தள தொலைக்காட்சியில் மூத்த பத்திரிகையாளர் மணி அளித்த பேட்டி வருமாறு

**நெறியாளர் அன்பழகன்:** Spaking for India டைட்டிலில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடர்ச்சியாக பேசிக் கொண்டு இருக்கிறார். இரண்டாவது எபிசோட்டில் சி.ஏ.ஜி. அறிக்கை பற்றி பேசிஇருந்தார். இன்றைக்கு மூன்றாவது எபிசோட் ரிலீஸ் ஆகி இருக்கிறது. இதில் மாநில சுயாட்சி விஷயத்தை பிரதானமாக போக்கஸ் செய்து பேசி இருக்கிறார். அந்த வீடியோவை நீங்கள் பார்த்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன். முதல் கட்டமாக அந்த வீடியோ பற்றி உங்கள் கருத்தை பதிவு செய்யுங்கள்.

**மூத்த பத்திரிகையாளர் மணி:** ஆமாம், மிகவும் நல்ல உரையாடலாகத்தான் நான் பார்க்குறேன். அவர் மாநில சுயாட்சி குறித்து பேசி இருக்கிறார். நரேந்திர மோடி அவர்கள் முதலமைச்சராக இருந்த போது பேசிய பேச்சுக்கும், இப்போது உள்ள பேச்சுக்கும் இடையில் உள்ள முரண்பாடுகளை நன்றாக தோலுரித்துக் காட்டியிருக்கிறார். இந்தியாவிற்கான வளர்ச்சி என்பது மாநிலங்களில் தீர்க்கப்படும் என்று மோடி முதலமைச்சராக இருந்த போது சொன்னது பிரதமரானவுடன் டெல்லிக்கு எல்லா முதலமைச்சர்களும் காவடி தூக்கக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டது என்று சொல்லி இருக்கிறார். நிதி அயோக் குறித்து பேசி இருக்கிறார். அதே போல் கடந்த ஆட்சியில் மோடி பேசிய பல விஷயங்கள் இன்றைக்கு எப்படி தலைகீழாக மாறிப்போய் இருக்கின்றன என்பதையும் அவர் குறிப்பிட்டு பேசி இருக்கிறார்.

12 வது நிதிக்குழு அறிக்கைகளைப் பற்றி தெளிவாகப் பேசி இருக்கிறார். மாநிலங்களுக்குக் கொடுக்க வேண்டிய நிலுவைத்தொகை 19 ஆண்டுகளாக நிலுவையில் இருக்கிறது என்று சொல்லி இருக்கிறார். மத்திய அரசாங்கத்தின் பாரா முகத்தால் மாநிலங்களின் நிதி நிலை என்பது ஐ.சி.யு.வில் இருக்கிறது என்று சொல்லிக் கொண்டு இருக்கிறார்.

இத்தனை இடர்பாடுகளுக்கு மத்தியிலும் தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் நலத்திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றன. இதனை சுட்டிக் காட்டிய முதலமைச்சர் ஒரு வேளை நல்ல அரசு அமைந்திருந்தால் நம்மால் இன்னும் அதிகமாக சாதித்திருக்க முடியும் என்பதையும் மக்களுக்கு நினைவூட்டி இருக்கிறார். ஒரு மிக நல்ல உரையாகத்தான் நான் இதனை பார்க்கிறேன்.

கண்டிப்பாக பா.ஜ.க.வுக்கு இது வயிற்றில் புளியைக் கரைக்கும். ஏன் என்றால் இந்தியாவிலேயே மிக சரியாக மாநில உரிமைகளுக்காக சித்தாந்த ரீதியிலும், தரவுகளின் அடிப்படையிலும் பேசக்கூடிய ஒரே முதலமைச்சராக தமிழக முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தான் இருக்கிறார்.

இந்த உரை என்பது மிகவும் நல்ல உரை என்று நான் பார்க்கிறேன்.

**நெறியாளர் :** ஏற்கனவே சி.ஏ.ஜி. அறிக்கை பற்றி பேசி இருக்கிறார். அதனுடைய ரியாக்ஷனாக சி.ஏ.ஜி. அதிகாரிகள் மாற்றப்பட்டனர் என்று முகப்பிலே சொல்கிறார். இப்போது நான் மாநில சுயாட்சி பற்றி பேசப்போறேன் என்று சொல்கிறார். இதன் ரியாக்ஷன் பா.ஜ.க.விடமிருந்து எப்படி இருக்கும் என்று நீங்கள் பார்க்கிறீர்கள்.?

**மூத்த பத்திரிகையாளர் மணி:** அதில் சி.ஏ.ஜி. ரிப்போர்ட் அதிகாரிகளை மாற்றினார்



கள். இன்னும் மாநில உரிமைகளை பறிப்பார்கள் அதனை நியாயப்படுத்துவார்கள். இந்தியாவின் அரசியல் அமைப்பு சாசன அமைப்பால் உருவாக்கப்பட்ட அனைத்து அங்கங்களையும் சிதைப்பார்கள். ஒரு அழகான நந்தவனம், இன்றைக்கு கிடைக்கக் கூடாதவர்களின் கையில் கிடைத்ததால் சிதைந்து சின்னாபின்னமாகிக் கொண்டிருக்கிறது.

ஆகவே இந்த உரைக்குப் பிறகும் அவர்கள் ஒன்றும் திருந்தப் போவதுகிடையாது. அவர்கள் மேலும் கூட்டாட்சித் தத்துவத்தின் மீதான தாக்குதல்களை அதிகரிப்பார்கள். இன்றைக்கு தன்னுடைய உரையில் முதலமைச்சர் சொல்லி இருப்பதைப் போல அவர்கள் மாநிலங்களைக் கலைத்து விட்டு எல்லாவற்றையும் ஒரு நகராட்சியைப் போல உருவாக்கத்தான் விரும்புகிறார்கள்.

### மக்கள் 2024-இல் ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வருவார்கள்!

ஆர்.எஸ்.எஸ்.சின் எண்ணம் பண்முகத் தன்மை கொண்ட இந்தியா அல்ல,இதனை அழித்து ஒற்றைத் தன்மை கொண்ட இந்தியாவாக உருவாக்க வேண்டும், மாநிலங்களை அழிக்க வேண்டும் நகராட்சிகளாக ஆக்க வேண்டும். மண்ணடலங்களாப் பிரித்து ஸ்பெஷல் ஆபிஸர்களைப் போட்டு இந்தியாவை நடத்த வேண்டும். இது தான் அவர்களின் நோக்கம். ஆர்.எஸ்.எஸ்.தான் இன்றைக்கு இந்தியாவை வழி நடத்திக் கொண்டிருக்கிறது. இந்தப்போக்கு தொடர்ந்தால் 2024 இல் மோடி வெற்றி பெற்றால், இந்தியா சவக்குழிக்குப் போகும் என்பதை தன்னுடைய உரையில் மறைமுகமாக முதலமைச்சர் சுட்டிக் காட்டியிருக்கிறார். நிச்சயம் மக்கள் 2024 இல் ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வருவார்கள். கவலை வேண்டாம்.

## மோடியின் இரட்டை வேடம்!

### பெட்ரோல் பங்கில் மோடி படம் எதற்கு!

**நெறியாளர்:** முக்கியமாக ஒரு விஷயத்தைக் குறிப்பிடுகிறார். திட்டங்களுக்கு மோடியின் படத்தை வைக்காவிடில் நாங்கள் நிதியை கட் செய்வோம் என்று ஒரு மினிஸ்டர் ஒருவர் கூறி இருக்கிறார். அது குறித்து முதல்வர் கருத்து தெரிவித்து இருக்கிறார்.

**மூத்த பத்திரிகையாளர் மணி:** உண்மைதான் நாம் பெட்ரோல் பங்கில் கூட பார்க்கிறோம் மக்கள் அன்றாடும் புழங்கக் கூடிய இடத்தில் மோடியின் படம் இருக்கிறது. பெட்ரோல் பங்கில் மோடியின் படம் எதற்கு? மன்மோகன் சிங் படமோ, வாஜ் பாய் படமோ, நரசிம்மராவ் படமோ, தேவகௌடா படமோ, ஐ.கே. குஜ்ரால் படமோ, சந்திரசேகர் படமோ வி.பி.சிங் படமோ, ராஜீவ் காந்தி படமோ , இந்திரா காந்தி படமோ, ஜவஹர்லால் நேரு படமோ, மொராஜ் தேசாய் படமோ, சரண்சிங் படமோ இருந்ததா , இவர் என்ன வானத்தில் இருந்து வந்து குதித்த பிரதமர் மாதிரி, பெட்ரோல் பங்கில் எதற்கு படம்?

ஒற்றைத் தன்மையில் நாடு நகர்கிறது. நகர்த்த முயற்சிக்கப்படுகிறது. இது நடந்தால் கண்டிப்பாக அதிபர் ஆட்சி முறை வரும். மோடி 2024இல் வெற்றி பெற்றால் இந்தியா சர்வாதிகாரப் பாதையில் பயணிக்கும். ஆகவே மோடிப்படத்தைப் போட்டு நீங்கள் விளம்பரம் செய்யுங்கள், நிதி இல்லாவிட்டால் திட்டங்களுக்கு அனுமதிக்க மாட்டோம் என்பது எல்லாம் அயோக்கியத் தனம். மாநிலஅரசு கொடுக்கக் கூடியது ஆயிரம் கோடி மத்திய அரசு ஒரு கோடி கொடுக்கிறது என்றால் மோடி படத்தை எதற்காக போட வேண்டும்? மத்திய அரசு பணமும், மாநில அரசுப் பணமும் அது மக்கள் பணம். இதில் எதற்கு மோடி படம். இது சர்வாதிகாரத்துக்கான அறிகுறி. இப்படித் தான் நாம் புரிந்து கொள்ளவேண்டும். இவை எல்லாம் சர்வாதிகாரத்தை நோக்கி நாட்டை நகர்த்துவதற்கான அறிகுறிகள். இந்திய மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்.

**நெறியாளர்:** இந்த விஷயத்தில் பிரதமர் நரேந்திர மோடி சி.எம். ஆக இருக்கும் போது அப்போது அவருடைய நிலைப்பாடு வேறாக இருந்தது. குறிப்பாக மாநிலங்களின் சுயாட்சி பற்றி அவர் நிறைய பேசி இருக்கிறார். ஆனால், இன்றைக்கு பிரதமரானவுடன் அவர் முதலில் ஒரு விஷயத்தை செய்திருக்கிறார் அரசியல் சட்டத்தின் முதல் வரியை அவர் கடுமையாக எதிர்க்கிறார்.

இதை அவர் எப்படி பார்க்கிறார் என்றால் அரசியல் அமைப்பின் முதல்வர் "India, that is Bharat, shall be a Union of States!" இந்தியா என்கிற பெயரை எடுத்துட்டு பாரத் என்கிற பெயரையே நிறுவப் பார்க்கிறார். பல இடங்களில் பார்த்துட்டோம். பிறகு யூனியன் ஆப் ஸ்டேட்ஸ் என்பதை காலி செய்துட்டு ஸ்டேட்ஸ்கான எந்தவிதமான முக்கியத்துவமும் பார்க்க முடியாமல் அதனை மாற்றி வைத்து இருக்கிறார். இந்த விஷயத்தை அவர் பதிவு செய்து இருக்கிறாரே இதனை எப்படி பார்க்குறீங்கள்?

> ஆர்.எஸ்.எஸ்.சின் எண்ணம் பண்முகத் தன்மை கொண்ட இந்தியா அல்ல,இதனை அழித்து ஒற்றைத் தன்மை கொண்ட இந்தியாவாக உருவாக்க வேண்டும், மாநிலங்களை அழிக்க வேண்டும் நகராட்சிகளாக ஆக்க வேண்டும். மண்ணடலங்களாப் பிரித்து ஸ்பெஷல் ஆபிஸர்களைப் போட்டு இந்தியாவை நடத்த வேண்டும். இது தான் அவர்களின் நோக்கம். ஆர்.எஸ்.எஸ்.தான் இன்றைக்கு இந்தியாவை வழி நடத்திக் கொண்டிருக்கிறது. இந்தப்போக்கு தொடர்ந்தால் 2024 இல் மோடி வெற்றி பெற்றால், இந்தியா சவக்குழிக்குப் போகும் என்பதை தன்னுடைய உரையில் மறைமுகமாக முதலமைச்சர் சுட்டிக் காட்டியிருக்கிறார். நிச்சயம் மக்கள் 2024 இல் ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வருவார்கள். கவலை வேண்டாம்.

### பா.ஜ.க. எண்ணம் நிறைவேறாது!

**மூத்த பத்திரிகையாளர் மணி :** ஆமாம், சரியான இடத்தை முதலமைச்சர் தொட்டு இருக்கிறார். மாநிலங்களின் கூட்டமைப்பையே மோடி மறுக்கிறார். இந்தியா என்பது ஒரு நாடு கிடையாது. இந்தியா என்பது மாநிலங்களின் கூட்டமைப்பு தான். "India, that is Bharat, shall be a Union of States!" மாநிலங்கள் இல்லை என்றால் இந்தியா இல்லை, இது தான் அரசியல் அமைப்பு சாசனத்தின் அடிப்படை. ஆனால் இதனை பா.ஜ.க. எப்படி திரிக்கிறது என்றால் இந்தியாதான் மாநிலங்களை உருவாக்கியது. உனக்கு தனித்தன்மை கிடையாது. நான் சொல்வதைக் கேள், போட்டதை தின்னுட்டு வேலை செய். இதுதான் பி.ஜே.பி.யின். ஆர்.எஸ்.எஸ்.சின் குறிக்கோள்.

அதனைத் தான் முதலமைச்சர் எதிர்க்கிறார். அதனைத்தான் இடது சாரிகள் எதிர்க்கிறார்கள். அதனைத்தான் காங்கிரஸ் எதிர்க்கிறது. எல்லா மாநிலக் கட்சிகளும் அதனை எதிர்க்கின்றன.

சரியான இடத்தை முதலமைச்சர் பிடித்து இருக்கிறார். இந்திய அரசியலமைப்பு சாசனத்தை ஏன் தலைகீழாக மாற்ற மோடி அரசும் முயற்சி செய்து கொண்டிருக்கிறது.

"India, that is Bharat, shall be a Union of States!" என்று ராகுல் காந்தி சொன்னதை திரித்து எப்படி விஷமப்பிரச்சாரம் செய்தார்கள்




அன்பழகன் நெறியாளர்

மணி மூத்த பத்திரிகையாளர்

என்பதை நாடு அறியும். இந்த முறை அந்தப் பருப்பு வேகாது. மாநிலங்கள் இல்லை என்றால் இந்தியா இல்லை. இதை இந்திய மக்கள் உணர்ந்து கொள்வார்கள். ஆகவே ஒற்றைத் தன்மையுடன் இந்த நாட்டை உருவாக்க, கட்டமைக்க முயற்சிக்கிற இந்தியாவை நிர்மாணிக்க விரும்புகிற ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க.வின் குறிக்கோள் ஒருபோதும் நிறைவேறாது.

**நெறியாளர்:** அதாவது பிரதமர் நரேந்திர மோடி மாநிலங்களை புறக்கணிக்கிறார். மாநிலக் கட்சிகளை புறக்கணிக்கிறார். அவர்களுடைய உரிமைகளை புறக்கணிக்கிறார். ஆனால் அவர்களுடைய பண்பாட்டை மட்டும் எடுத்துக் கொள்கிறார். எங்களுடைய பண்ட் மட்டும் உங்களுக்குத் தேவைப்படுகிறது.

எங்களுக்கான நிதி எதுவும் திரும்ப கிடைக்க மாட்டேன் என்கிறது என்பதை பதிவு செய்து இருக்கிறார் அதனை எப்படி பார்க்குறீங்க?

**மூத்த பத்திரிகையாளர் மணி:** ஆமாம், உண்மைதான். மாநிலங்களை சுரண்டி மத்திய அரசு வாழ்ந்து கொண்டிருக்கிறது. தமிழ்நாடு மட்டுமல்ல எல்லா மாநிலங்களையும் மத்திய அரசு சுரண்டித்தான் கொழுத்துக்கொண்டிருக்கிறது.

இவர்களுக்கு கிடைக்கக் கூடிய பணம் எல்லாம் நம்முடைய பணம். ஆனால் நமக்கு பட்டை நாமம் போடப்படுகிறது. அதைத்தான் முதலமைச்சர் சுட்டிக் காட்டி இருக்கிறார் ஆட்சி மாற்றம் தான் இதற்கு ஒரு நிரந்தரத் தீர்வு.

**நெறியாளர்:** இன்னொரு முக்கியமான பொருளாதாரக் கருத்தை பதிவு செய்கிறார். இனி வரக்கூடிய காலக்கட்டங்களில் ஆண்டுக்கு பத்தாயிரம் கோடி ரூபாய் இழப்பு ஏற்படும் என்று குறிப்பிடுகிறார். அந்த இழப்பு எல்லாம் எப்படி பேஸ் செய்ய முடியும். ஏன் என்றால், அரசியல் கட்சிகள் பல தேர்தல் வாக்குறுதிகளை கொடுக்குறாங்க. அதையெல்லாம் நிதியைச் சார்ந்து தான் இருக்கு. இந்த மாதிரி இழப்புகளை சந்திக்கின்ற விஷயங்கள் இருந்தால் மக்களுக்கான வளர்ச்சித் திட்டம் என்பதோ அல்லது கடன் வாங்குவது அதிகமாவதோஇந்த விஷயங்களை எல்லாம் எப்படி பேஸ் செய்வது?

**மூத்த பத்திரிகையாளர் மணி:** கஷ்டம் தான் முதலமைச்சர் சரியான பாயிண்டைத் தான் பிடித்து இருக்கிறார்..பத்தாயிரம் கோடி ரூபாய் இழப்பு வருதுன்னு. ஜி.எஸ்.டி.யில் பெரிய அளவில் எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள். மாநிலங்களுக்கான வருவாய் என்பது மதுபான விற்பனையும், ரிஜிஸ்டேசன்? மட்டும் தான் வேறு எதுவும் கிடையாது. இந்த நிலை மாற வில்லை என்றால் கடினமானதுதான். அதே நேரத்தில் எல்லா கட்சிகளும் தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் வாக்குறுதிகளை வாரி வழங்குகின்றன. பணம் எங்கே இருந்து வரும் என்று தெரியவில்லை. ஆகவே இவை மிகவும் சிக்கலான பிரச்சினை. அதனையும் நாம் கவனத்தில் கொள்ளத்தான் வேண்டும்.

### மகாத்மா காந்தி வேலை வாய்ப்புத் திட்டத்தில் தேக்க நிலை!

**நெறியாளர்:** கிராமத்தில் இருக்கின்ற ஏழை மக்கள் பயன் படக் கூடிய வகையில் பெண்களுக்கு கொடுக்கக் கூடிய வகையில் நூறு நாள் வேலைத்திட்டம் இருந்தது. அந்த நூறு நாள் வேலைத்திட்டத்திற்கான பண்ட் கிட்டத்தட்ட 2600 கோடி ரூபாய் ஒதுக்காமல் இருக்கிறார்கள். இப்போது அதனால் 14 மாதம் சம்பளம் தரவில்லை என்ற பிரச்சினை இருக்கிறது. மக்களுக்கு கேட்டால் நிதியை இழுத்தடிக்கிறாங்க. அல்லது குறைத்து கொடுக்குறாங்க. இல்லாட்டி இல்லவே இல்லை என்ற கூறுகிறார்கள். திட்டத்திற்கு பிரதமர் மோடி படம் வைக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். இந்த மாதிரி நெருக்கடியை கொடுப்பது என்பது கிராமத்தில் இருக்கின்ற பெண்கள் மத்தியில் அவை எந்தமாதிரியான பிரச்சினையை ஏற்படுத்தும்?

**மூத்த பத்திரிகையாளர் மணி:** ஆமாம் மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தில் பெரிய அளவில்தேக்க நிலை ஏற்பட்டு இருக்கிறது. மத்திய அரசு பண்ட்ஸ் கொடுக்க மாட்டேன் என்கிறது. முதலில் இதனை மோடி அரசு விரும்பவில்லை. இதனை ஒழித்துக் கட்டத்தான் அவர்கள் விரும்புகிறார்கள்.

ஆனால் நேரடியாக ஒழித்துக் கட்டினால் மக்களிடம் பெரிய அளவில் எதிர்ப்பு கிளம்பும் மிகப் பெரிய அளவில் கொந்தளிப்பு ஏற்படும் என்பதால் மெல்ல மெல்ல அதனை சாகடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அதுதான் இந்தப் பிரச்சினையுடைய மூலக்கருத்து. 14 மாத சம்பளம் கொடுக்காபமல் இருக்கிறார்கள் என்றால் இதனைவிட இரக்கமற்ற கேடு கெட்ட அரசு இந்தியாவில், உலக அளவில் இருக்குமா? கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு வாரி வாரி வழங்குகிறார்கள். இது என்ன தமிழ்நாட்டிற்கு இரண்டாயிரம் சொச்ச கோடி, வாராக் கடன் 25இலட்சம் கோடி தள்ளுபடி செய்திருக்கிறது.

### இந்தியாவை விற்றுக் கொண்டிருக்கும் மோடிக்கு ஏழை மக்களைப் பற்றிப் பேச நேரம் இல்லை!

அதுதான் பெரும் முதலாளிகளுக்காக இந்தியாவை விற்றுக் கொண்டிருக்கிற நரேந்திர மோடி அரசுக்கு, ஏழை மக்களைப் பற்றி பேசுவதற்கு எந்தவிதமான நேரம் இல்லை. விருப்பமும் இல்லை. மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்புத்திட்டத்தை ஒழித்துக் கட்ட விரும்புகிறார்கள். அதனை மெல்லமாக சாக அடிக்க விரும்புகிறார்கள். அதனால் தான் 14 மாதமாக சம்பளம் பாக்கி. இது ரொம்ப கொடுமையான ஒரு விஷயம். இதற்காகவாவது ஆட்சி மாற்றம் ஏற்பட வேண்டும். ஏற்படும் என்று நாம் நம்புவோமாக.

இவ்வாறு மூத்த பத்திரிகையாளர் மணி பேட்டியளித்தார்.

---

### நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பு

## எதிர்க்கட்சி தலைவர்களை கைது செய்ய ஒன்றிய பா.ஜ.க. அரசு திட்டம்!

### மேற்குவங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி குற்றச்சாட்டு!

*கொல்கத்தா, நவ.3-*

டெல்லி மதுபான கொள்கை மாற்றம் தொடர்பான வழக்கு விசாரணைக்கு நேரில் ஆஜராகும்படி டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு அமலாக்கத்துறை சம்மன் அனுப்பியிருந்தது. இதுகுறித்து கொல்கத்தாவில் செய்தியாளர்களிடம் பேசிய மம்தா பானர்ஜியிடம் கேள்வியெழுப்பப்பட்டது. அதற்கு பதிலளித்த மம்தா பானர்ஜி, அடுத்த ஆண்டு



நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பு எதிர்க்கட்சிகளின் குரல்களையும் அடக்க ஒன்றியத்தில் ஆளும் பா.ஜ.க. அரசு முயற்சிப்பதாக விமர்சித்தார். நாடாளுமன்றத் தேர்தலில் எளிதில் வெற்றி பெறுவதற்காக, தேர்தலுக்கு முன்பு, எதிர்க்கட்சி தலைவர்களை கைது செய்ய ஒன்றிய பா.ஜ.க. அரசு திட்டமிட்டு இருப்பதாகவும், அதன்பிறகு காலியாக உள்ள நாட்டில் தங்கள் கட்சியினரை மட்டும் வைத்து வாக்களித்து தேர்தலில் வெற்றி பெற பா.ஜ.க.வினர் சதித்திட்டம் தீட்டி வருவதாகவும் மம்தா பானர்ஜி குற்றம்சாட்டினார்.

---

### கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தில் சேர

## 11 லட்சத்து 85 ஆயிரம் பேர் மேல்முறையீடு செய்துள்ளனர்!

### தமிழ்நாடு அரசு தகவல்!

*சென்னை, நவ.3-*

கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்திற்கு அக்டோபர் 25ம் தேதி வரை மேல்முறையீடு செய்யலாம் என தமிழ்நாடு அரசு அறிவித்தது. அதன் அடிப்படையில், அக்டோபர் 25ம் தேதி வரை 11 லட்சத்து 85 ஆயிரம் நபர்கள் மேல்முறையீடு செய்துள்ளனர். இந்நிலையில், மேல்முறையீடு செய்தவர்களின் விண்ணப்பங்களை பரிசீலிக்கும் பணிகள் தொடங்கியுள்ளது. தகுதியானவர்களுக்கு வரும் 25ம் தேதி முதல் குறுஞ்செய்திகள் அனுப்பப்படும் என்று தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது. தகுதியான அனைவருக்கும் மகளிர் உரிமைத் தொகை கிடைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த மாதம் மகளிர் உரிமைத்தொகை குறுஞ்செய்தி அனுப்பப்பட்டு பணம் வராதவர்களுக்கு வருகின்ற பத்தாம் தேதிக்குள் அனுப்பி வைக்கப்படும் என்றும் தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

---

### விருதுநகர் மாவட்டம்

## வெம்பக்கோட்டை வைப்பாற்றில் நடந்த அகழாய்வுப் பணி!

### தங்க அணிகலன்கள் உள்ளிட்ட 4,600 தொல்பொருட்கள் கண்டெடுப்பு!

*வெம்பக்கோட்டை, நவ. 3-*

வெம்பக்கோட்டை வைப்பாற்றில் நடந்த அகழாய்வு பணிகளில் தங்க அணிகலன்கள், தங்க பட்டை, செப்பு காசுகள் உள்ளிட்ட 4 ஆயிரத்து 600 தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை வைப்பாற்றின் வடகரை பகுதியில் கடந்த ஏப்ரல் 6ம் தேதி முதல் 2ம் கட்ட அகழாய்வு பணிகள் நடைபெற்று வந்தது. இந்த அகழாய்வில் தங்க அணிகலன்கள், தங்க பட்டை, செப்பு காசுகள், சுடுமண் முத்திரை, சுடு மண்வாணிபமுத்திரைகள், சுடுமண் ஆண் உருவ பொம்மை, சுடுமண் புகை பிடிப்பான், சங்கு வளையல்கள், கண்ணாடி மணிகள் உள்ளிட்ட 4 ஆயிரத்து 660 தொல் பொருட்கள் கண்டறியப்பட்டுள்ளது. இந்த பொருட்களை ஆவணப்படுத்தும் பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது. ஏற்கனவே நடைபெற்ற முதலாம் கட்ட அகழாய்வில் 3 ஆயிரத்து 254 தொல்லியல் பொருட்கள் கிடைத்துள்ள நிலையில், முதலாம் கட்ட அகழாய்வின் முடிவில் சங்கு வளையல் தயாரிப்பு தொழில்கூடம் இருந்ததற்கான சான்று கிடைக்கப்பெற்றது. இந்நிலையில் 2ம் கட்ட அகழாய்வில் கண்ணாடி மணிகள் தயாரிப்பு கூடம் இருந்ததற்கான சான்று கிடைத்துள்ளதாகவும், கடல் வழியாக வட மாநிலங்களுக்கு வாணிபம் நடந்ததற்கான சான்று கிடைத்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

# தமிழ்நாடு டிஜிட்டல் மயமாக்கல் வியூகம் ஆவணம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!

சென்னை, நவ. 3-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.11.2023) தலைமைச் செயலகத்தில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை சார்பில் தமிழ்நாடு டிஜிட்டல் மயமாக்கல் வியூகம் (Tamil Nadu Digital Transformation Strategy DiTN) ஆவணத்தை வெளியிட்டார்.

2021-22ஆம் ஆண்டிற்கான தகவல் தொழில்நுட்பவியல் துறை மானியக் கோரிக்கையில், விரைவான, கண்காணிக்கக்கூடிய, அணுகக்கூடிய மற்றும் பதிலளிக்கும் வகையிலமைந்த, வெளிப்படையான நிருவாகத்தைக் குடிமக்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டு, மின்னாளுகையைப் படிப்படியாக அரசின் அனைத்து மட்டங்களிலும் புகுத்தி, அதன்மூலம் முழுமையானதொரு அரசாங்கத்தை எய்திடும் வகையில் "டிஜிட்டல் தமிழ்நாடு திட்டம்" செயல்படுத்தப்படும். மக்களுடன் நேரடித் தொடர்பு கொண்ட மற்றும் அவர்களிடம் தாக்கத்தை ஏற்படுத்தும் அரசுத் துறைகளின் செயல்பாடுகள் படிப்படியாக மின்மயமாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

**ஒரு வழிகாட்டியாக பயன்படும்!**

அந்த அறிவிப்பிற்கிணங்க, தமிழ்நாடு அரசின் ஆளுமை மற்றும் நிர்வாகத்தின் செயல்திறனை மேம்படுத்திடவும், டிஜிட்டல் ஆளுமை மற்றும் அரசின் சேவை வழங்கலை மேம்படுத்துவதற்காகவும், தற்போதுள்ள மற்றும் எதிர்கால கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் அமைப்புகளைக் கருத்தில் கொண்டும் தமிழ்நாட்டில் முதல்முறையாக தமிழ்நாடு டிஜிட்டல் மயமாக்கல் வியூகம் (DiTN) வகுக்கப்பட்டுள்ளது. அரசின் துறைகள் தங்களுக்கான டிஜிட்டல் உருமாற்ற வியூகம் உருவாக்குவதற்கும், அதனை செயல்படுத்துவதற்கும் ஒரு வழிகாட்டியாக தமிழ்நாடு டிஜிட்டல் மயமாக்கல் வியூக ஆவணம் பயன்படும்.

அனைத்துத் துறைகளும் தங்களது முக்கிய செயல்திறன் குறிகாட்டிகள் (Key Performance Indicators) மற்றும் பயன்களை (Outcomes) எய்துவதற்கு தமிழ்நாடு டிஜிட்டல் மயமாக்கல் வியூகம் உதவும். மேலும், தமிழ்நாட்டு மக்களுக்கு விரைவான, கண்காணிக்கக்கூடிய, அணுக்கக்கூடிய, பதிலளிக்கக்கூடிய மற்றும் வெளிப்படையான (SMART Swift Monitorable, Accessible, Responsive and Transparent) நிர்வாகத்தை வழங்கும். தமிழ்நாடு டிஜிட்டல் மயமாக்கல் வியூகம், டிஜிட்டல் முதிர்ச்சியை மதிப்பிடுவது முதல் தகவல்தொழில்நுட்ப வியூகத்தைச் செயல்படுத்துவது வரையிலான அனைத்து வழிகாட்டுதல்களையும் வழங்கும்.

தமிழ்நாட்டில் டிஜிட்டல் மயமாக்கும் செயல்முறையை மேலும் வலுப்படுத்துதல், தொலைதூர இடங்கள் உட்பட மாநிலம் முழுவதும் தேவையான டிஜிட்டல் உள்கட்டமைப்பை பொதுமக்களுக்கு குறிப்பாக கிராமப்புற மக்களுக்கு வழங்குதல், மாநிலத்தை புத்தாக்கம் மற்றும் தொழில் முனைவுக்கான மையமாக மாற்றுதல், செயலிகள், வலைத்தளங்கள், கியோஸ்க்குகள் (KIOSK) போன்றவற்றின் மூலம் பொதுமக்களுக்கு அரசு சேவைகள் வசதியாக கிடைப்பதை உறுதி செய்வதன் மூலம் முதல் மற்றும் இரண்டாம் நிலை நகரங்களுடன் டிஜிட்டல் இணைப்புகளை மேம்படுத்துதல் போன்றவை தமிழ்நாடு டிஜிட்டல் மயமாக்கல் வியூகத்தின் முக்கிய அம்சங்கள் ஆகும்.

இந்த நிகழ்ச்சியில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை முதன்மைச் செயலாளர் தீரஜ்குமார், தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் இணை தலைமை நிர்வாக அலுவலர் திருமதி. பெ.ரமண சரஸ்வதி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### பண்டிகையை முன்னிட்டு நவம்பர் 5ஆம் தேதிக்குள் 35,941 நியாய விலைக் கடைகளிலும்

# அரிசி உட்பட இதர பொது விநியோகத் திட்ட பொருட்கள் இருப்பு வைத்திட வேண்டும்!

## ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் அர.சக்கரபாணி அறிவுரை!

சென்னை, நவ.3-

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க 31.10.2023 அன்று உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி மற்றும் கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே.கோபால் தலைமையிலான துறை அலுவலர்களின் ஆய்வுக் கூட்டம் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

ஆய்வுக் கூட்டத்தின் தொடக்கத்தில் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அனைவரையும் வரவேற்று பேசினார்கள். தொடர்ந்து தலைமையுரையாற்றிய அமைச்சர், வரும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு அரிசி உட்பட அனைத்து பொது விநியோகத் திட்ட பொருட்களும் குடும்ப அட்டைதாரர்களுக்கு உரிய நேரத்தில் கிடைத்திட ஏதுவாக தீபாவளி வரை அனைத்து நாட்களிலும் நியாய விலைக்கடை கள் திறக்கப் பட்டு பொருட்கள் விநியோகம் செய்வது உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் இதற்கான நகர்வு பணிகள் அனைத்தும் நவம்பர் 5ம் தேதிக்குள் முடிக்கப்பட வேண்டும் என்றும் அறிவுரை வழங்கினார்கள். அதனைத் தொடர்ந்து தற்போது வடகிழக்கு பருவ மழைக்காலம் தொடங்கி உள்ளதால் பொருட்கள் இருப்பு வைக்க பயன்படுத்தக் கூடிய அனைத்து சேமிப்புக் கிடங்குகளிலும் மழை நீர் கசிவு ஆகியவற்றால் பொருட்கள் சேதமாவது முற்றிலும் தவிர்க்கப்படுதல் வேண்டும் என்றும் வலியுறுத்தினார்கள். கொள்முதல் செய்யப்படும் நெல்லும் மழையினால் நனைந்து சேதமடையாமல் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்கள்.

கூடுதல் தலைமைச் செயலாளர் துறைவாரியான ஆய்வின்பொழுது, உணவுப் பொருள் வழங்கல் துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக அலுவலர்கள் ஆகியோர் ஒருங்கிணைந்து செயலாற்றி, சேமிப்பு கிடங்கு கட்டுமான பணிகளில் ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யப்பட்ட இனங்களின் பணிகள் துரிதப்படுத்தப் படுதல் வேண்டும் என்றும் மலைப் பிரதேசங்களில் பயன்பாட்டிலுள்ள நியாய விலைக் கடைகள் வன விலங்குகள் மூலம் தாக்கப்படுவதை தடுக்க முன் கதவுகளுக்கு இரட்டை அடுக்கு பாதுகாப்பு அமைத்திட பரிசீலித்திட வேண்டும் என்றும் இரண்டாயிரம் குடும்ப அட்டைகளுக்கு மேல் உள்ள நியாய விலைக் கடைகளை துரித அடிப்படையில் உடனடியாக பிரிக்கப்படுதல் வேண்டும் என்றும் அரிசி கடத்தல் தடுப்பு நடவடிக்கையினைத் தீவிரப்படுத்து தல் வேண்டும் எனவும் அறிவுரை வழங்கினார்.

ஆய்வுக் கூட்டத்தில் துறைத் தலைவர்கள் தங்கள் துறையின் செயல்பாடுகள் குறித்து எடுத்துரைத்தனர். ஆய்வுக் கூட்டத்தில் முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் ஹர் சகாய் மீனா, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவன நிர்வாக இயக்குநர் சு. பழனிச்சாமி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் ஆ. அண்ணாதுரை மற்றும் குடிமைப் பொருள் வழங்கல் குற்ற புலனாய்வுத் துறையின் காவல் தலைவர் கே.ஜோஷி நிர்மல் குமார் மற்றும் துறையின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில்

# டெல்டா பகுதியில் சம்பா சாகுபடி தொடர்பான ஆலோசனைக் கூட்டம்!

சென்னை, நவ. 3 -

தலைமைச் செயலகத்தில் வேளாண்மை உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் டெல்டா பகுதியில் சம்பா சாகுபடி தொடர்பான ஆலோசனைக் கூட்டம் 31.10.2023 அன்று நடைபெற்றது,

இக்கூட்டத்தில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் செல்வி. அபூர்வா, வேளாண்மைத் துறை ஆணையர் முனைவர் இல.சுப்பிரமணியன், வேளாண்மை கூடுதல் இயக்குநர் திருமதி ஸ்ரேயா பி.சிங்., தலைமைப் பொறியாளர் (வே. பொ.) ஆர்.முருகேசன் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி கீழ்க்கண்டவாறு டெல்டா விவசாயிகளுக்கு சம்பா சாகுபடிக்கான ஆலோசனைகள் வழங்கப்படுகிறது.

நவம்பர் 15 ஆம் தேதிக்கு முன்பு மழை பொழிவு பெறப்படின், குறுகிய கால நெற்பயிர் இரகங்களான ஆடுதுறை 45, 53, 56, 57, கோ 51. அம்பை 16 போன்ற இரகங்களை நேரடி விதைப்பு முறையில் பயிரிடலாம். பருவமழை பொய்த்தால், குறுகியகாலப் பயிர்களான பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் சிறுதானியங்களை, மார்கழிப் பின் பட்டத்தில் சாகுபடி செய்யலாம்.

தற்போது, நடவு செய்யப்பட்ட சம்பா பயிர்களில் வறட்சி ஏற்படும் பட்சத்தில் வறட்சியைத் தாங்கும் தன்மையை ஏற்படுத்தும். பிங்க் பிக்மெண்ட்டட் ஃபேக்கல்டேடிவ் மெத்தைலோட்ரோஃப் என்ற உயிரினக் காரணியை ஒரு லிட்டருக்கு ஒரு மில்லி என்ற வீதத்தில் கலந்து கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

நிலத்தடி நீரை (கிணறுகள், உறைக் கிணறுகள், ஆழ்துளை குழாய்க் கிணறுகள்) தேவைக்கேற்றவாறு, சிக்கனமாக விவசாயிகள் பயன்படுத்திட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

சம்பா பருவத்தில் பயிர் காப்பீடு செய்ய அறிவிக்கை செய்யப்பட்டுள்ள கிராமங்களில் உள்ள அனைத்து விவசாயிகளும் 15.11.2023 க்குள் பயிர் காப்பீடு செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

# தென்காசி வடக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. அறிவிப்பு!



தென்காசி.நவ.3-

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி தென்காசி வடக்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் இன்று (03.11.2023 - வெள்ளிக்கிழமை) மாலை 4 மணி அளவில் சங்கரன் கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது என தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது.

தென்காசி வடக்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் சங்கரன் கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் வைத்து இன்று (3ந் தேதி) மாலை 400 மணி அளவில் மாவட்ட அவை தலைவர் பத்மநாபன் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மாநில, மாவட்ட, கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர,பேரூர், கழக செயலாளர்கள், தவறாது கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



சென்னையில் மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் மீனவர் மற்றும் மீனவ மகளிர்களுக்கு மீன்பிடி குறைவு காலங்களில் நிவாரணத் தொகையை நேற்று முன்தினம் (01.11.2023) வழங்கினார். உடன் மீன்வளம் – மீனவர் நலத்துறை ஆணையர் மற்றும் மீனவர் நலவாரிய உறுப்பினர் செயலர் டாக்டர். கே.சு.பழனிசாமி ஆகியோர் உள்ளனர்.

---

# தாயுமானவராக இருக்கிறார்; நமது முதல்வர்!

## 'கணையாழி' தலையங்கம்!



மாணவர்களிடம் விழிப்புணர்வையும்
மக்களிடம் சுயமரியாதையையும்
தூண்டி வளர்க்க
வைக்கம் போராட்டத்தின்
நூற்றாண்டைக் கொண்டாடத்
தமிழக முதல்வர்
சட்டமன்றத்தில் அறிவித்திருக்கிறார்!

வைக்கம் போராட்டம்
விடுதலை வேண்டி நின்ற
இந்தியாவில்
சத்தியாகிரக முறையில் நடந்த
போராட்டத்திற்கும் வெற்றிக்கும்
வரலாறு காட்டும் முன் உதாரணம்!

கடவுள் சாதி ஆதிக்கத்திற்கு எதிராகக்
காந்தியின் ஆதரவுடன் களத்தில் இறங்கிய
கதர்ச் சட்டை ஈ.வே.ரா நாயக்கரைக்
கருப்புச் சட்டைப் பெரியாராக
மாற்றிய நிகழ்வுகளின்
முதல் புள்ளி, வைக்கம்!

பேராசிரியர் மு.இராமசாமியின்
"வைக்கம் என்பது நாயக்கர் கதையல்ல
ஈ.வே.ரா நாயகர் ஆன கதை" நாடகத்தை
மாணவர்களைக் கொண்டு அரங்கேற்றி
மதுரை
காமராசர் பல்கலைக்கழகக் கல்லூரி
முதல்வரும் துணை முதல்வரும் வைக்கம்
போராட்ட நூற்றாண்டைக்
கொண்டாடி இருக்கிறார்கள்!

வழக்கம் போல பேராசிரியரின்
நெறியாளுகையும் நடிப்பும்
பார்வையாளர்களையும்
பங்கேற்க வைத்திருக்கின்றன!.

மாணவர்கள்
கதை மாந்தர்களாக மட்டுமின்றிக்
களப் போராளிகளாகவும்
உணர்ச்சி பொங்கப் போராட்டத்தை
மதுரையில் நிகழ்த்திக் காட்டியுள்ளனர்!

யானையை எதிர்த்துப் போரிட்டுக்
களத்தில் இறந்தவருக்கான
நடுகல் தவிர
நெல் தூவி வணங்கும் தெய்வமும் இலவே!
என்று சங்க காலத்திலேயே
தமிழர்களின்
தெய்வக் கொள்கையை அறிவித்தவர்
மதுரைக் காஞ்சி தந்த மாங்குடி மருதனார்!

தெய்வமும் உண்டுகொல் –
கடவுள் இருக்கிறதா? என்று
கணவனை இழந்த கண்ணகி
புலம்பி நின்ற இடமும் மதுரைதான்!

அர்த்த மண்டபத்துக்கு வெளியே
பொதுமக்களைக் கொண்டு
இராமநாதன் நடத்திய வழிபாட்டுக்காக
அர்த்த ராத்திரி வரை அவர்கள்
அடைக்கப்பட்ட கோயில் மதுரையில்தான்.

கக்கன் உட்படப் பலரை
அழைத்துக்கொண்டு வைத்தியநாத ஐயர்
ஆலயப் பிரவேசம் நடத்திய இடமும்
மதுரைதான்!

தாழ்த்தப்பட்டோர் உள்ளே வந்ததால்
கோபித்துக்கொண்டு கடவுள்
கோயிலை விட்டு வெளியேறி
நடேச ஐயர் வீட்டுக்குச் சென்று விட்டதாகக்
கதை விட்ட இடமும் மதுரைதான்!

நந்தனார் வழிபட
திருப்புன்கூர் நந்தி, விலகி வழிவிட்டது!
ஆனால் தீக்குள் இறக்கியது
தில்லை!

ஒரே மதத்தைச் சேர்ந்தவர்களைப்
பிறப்பின் அடிப்படையில் பிரித்து வைப்பதை
பண்பாட்டின் உச்சம் எனும்
பித்தம் தெளிய மருந்தொன்றைச் சொல்கிறது
வைக்கம் நாடகம்!

மற்ற இடங்களில்
கோயிலுக்குள் நுழைய
போராட்டங்கள் நடந்தன!
வைக்கத்தில் கோயில் உள்ள
தெருவில் நுழையவே போராட்டம்!

மதுரை மீனாட்சி கோயிலில்
ஆலயப் பிரவேசம் சென்ற
கக்கன் உட்பட்ட பலருக்கும்
வைத்தியநாத ஐயர்
பூணூல் போட்டுதான்
அழைத்துச் சென்றிருக்கிறார்.

பெரியார் நடத்திய
வைக்கம் போராட்டத்தில்
பூணூல் இல்லை!

பேராசிரியர் மு.இராமசாமியின் நாடகம்
இந்தியாவைப் பாரத் ஆக்கவோ
இந்து நாடு ஆக்கவோ
பக்தி வளர்க்கவோ முயற்சிக்கவில்லை!

பார்க்கும் எல்லோருக்கும்
பூணூல் போடவில்லை.
மாறாக
நாடகத்தில் பங்கேற்றவர்கள் மட்டுமின்றி
பார்வையாளர்களின்
கைகளிலும் மனங்களிலும் இருந்த
சாதி ஏற்றத்தாழ்வுக் கட்டுமானங்களை
உடைத்தெறிய முயன்றிருக்கிறது.

கடவுளைக் காப்பாற்றவும்
ஆட்சியைக் காக்கவும்
வளர்க்கும் யாகங்கள்
கொரோனோ காலத்துக்கும் முன்பே
பயனற்றுப் போயிருக்கின்றன வைக்கத்தில்!

இப்போதும் மக்களிடம்
காலாவதியான நம்பிக்கைகளை
விதைக்க முயலும் அதிகார மையத்தைக்
கேள்வி கேட்க வைத்திருக்கிறது
வைக்கம் நாடகம்!
தொட்டால் தீட்டு என்பவர்களுக்கும்
தொடுவது தோழமை என்பவர்களுக்கும்
மனிதர்களைப் பிறப்பால்
வேறுபடுத்துகிறவர்களுக்கும்
யாவரும் கேளிர் என்பவர்களுக்கும்
இடையே இப்போதும் தொடரும்
சித்தாந்தப் போராட்டத் தொடர்ச்சியின்
ஒரு கண்ணியைக் காட்சிப்படுத்தி
நவீன 'இந்தியா'வைக்
கட்டமைக்கத் தூண்டுகிறது
வைக்கம் நாடகம்!
கடவுளைச் சொல்லி மக்களைப் பிரிக்கும்
கயமையிலிருந்தும் விடுதலைபெற
பாரதி பாடினார்!
பறையருக்கும் இங்கு தீய
புலையருக்கும் விடுதலை"
பாரதி கனவை நிறைவேற்றிய
வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டைக்
கொண்டாட ஆணையிட்டிருக்கிறார்
தமிழக முதல்வர்!
ஆம்
வைக்கம் என்பது…
ஊரின் பெயர் மட்டுமில்லை
அது ஓர் அடையாளம்!



ம.ரா.

– நன்றி
கணையாழி



நெல்லை வண்ணார்பேட்டை ஹோட்டல் அஃப்னா பார்க்கில் நெல்லை, குமரி, தென்காசி, விருதுநகர், தேனி மாவட்டங்களை உள்ளடக்கிய தென் மண்டல மாவட்ட அளவிலான அமைப்பு சாரா ஓட்டுநர் அணியின் ஆலோசனைக் கூட்டம் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாநில அமைப்பு சாரா ஓட்டுநர் அணி செயலாளர் முன்னாள் எம்.எல்.ஏ.டி. செங்குட்டுவன் பங்கேற்று ஆலோசனை வழங்கி உரையாற்றினார். நிகழ்வில் மாநில அமைப்புசாரா ஓட்டுநர் அணி துணைச் செயலாளர் அம்பை தொகுதி பார்வையாளர் எம்.சிவராஜ், மாநில விவசாயத் தொழிலாளர் அணி துணைச் செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் ஜெ.செல்வ சூடாமணி உள்பட மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

### மூத்த தலைவர் என்.சங்கரய்யாவுக்கு டாக்டர் பட்டம் வழங்க மறுப்பதா?

# ஆளுநரைக் கண்டித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம்!

## மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன் அறிவிப்பு!

சென்னை, நவ. 3 -

“மூத்த தலைவர் என்.சங்கரய்யாவுக்கு டாக்டர் பட்டம் வழங்க மறுக்கும் ஆளுநரை கண்டித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது” என்று மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன் அறிவித்துள்ளார்.



இது குறித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

விடுதலைப் போராட்ட வீரர் என்.சங்கரய்யாவிற்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கும் கோப்புகளில் கையெழுத்திட ஆளுநர் ஆர்.என்.ரவி அடாவடியாக மறுத்துள்ளார். இந்தப் போக்கினை கண்டித்து, பட்டமளிப்பு விழாவில் பங்கேற்பதில்லை என உயர் கல்வித் துறை அமைச்சர் எடுத்துள்ள முடிவினை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) மாநில செயற்குழு வரவேற்கிறது.

முதுபெரும் விடுதலைப் போராட்ட வீரரும், நூற்றாண்டினைக் கடந்த மக்கள் தலைவருமான தோழர் என்.சங்கரய்யா, நாட்டுக்காக பட்டப்படிப்பை துறந்தவர். அவருக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்க வேண்டும் என பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்தனர். இப்பரிந்துரையை ஏற்று மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் செனட் மற்றும் சிண்டிகேட் தீர்மானம் நிறைவேற்றி கௌரவ டாக்டர் பட்டம் வழங்க முடிவு செய்தது. இந்த முடிவினை ஏற்க மறுத்து ஆளுநர் ஆர்.என். ரவி அந்த கோப்பில் கையெழுத்திட மறுத்தார்.

**ஆளுநரின் அடாவடித்தனம்!**

கௌரவ டாக்டர் பட்டம் வழங்குவது பல்கலைக் கழகத்தின் முடிவு என்பதை பலமுறை வலியுறுத்தியும் அதனை ஏற்காத ஆளுநருக்கு தமிழ்நாடு முழுவதும் கண்டனக் குரல்கள் எழுந்தன. இதனைத் தொடர்ந்து மதுரை காமராசர் பல்கலை கழகத்தின் தீர்மானம் மீண்டும் ஒருமுறை ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது. ஆனால், அதில் கையெழுத்திடுவதை மீண்டும் அடாவடியாக மறுத்துள்ளார் ஆளுநர் ஆர்.என்.ரவி.

அரசமைப்புச் சட்டத்தின் படி செயல்பட வேண்டிய ஆளுநர், ஆர்.எஸ்.எஸ் திட்டத்தை மட்டுமே தனது முழு மூச்சாக முன்னெடுத்து வருவதுதான் இந்த மோசமான நிலைக்கு காரணமாகும். என்.சங்கரய்யாவின் தியாகத்தை ஆளுநர் அறிந்திருக்கவில்லை என ஆர்.எஸ்.எஸ். சார்பு ஊடகங்கள் சமாளிப்பாக எழுதி வந்தன. ஆனால், வேண்டுமென்றே இந்த அராஜகத்தில் அவர் ஈடுபட்டு வருவது வெளிப்படையாக தெரிகிறது.

**அமைச்சர் பொன்முடி அறிவிப்பு வரவேற்கத்தக்கது!**

இந்திய கூட்டாட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தை மீறிய அதிகாரம் எந்தவொரு தனி நபருக்கும் கிடையாது. எனவே பட்டமளிப்பு விழாவினை புறக்கணிப்பதாக உயர்கல்வித்துறை அமைச்சர் அறிவித்துள்ள, அரசின் கடுமையான கண்டனச் செய்தியை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) மாநில செயற்குழு இந்த முடிவினை வரவேற்கிறது.

**கருப்புக்கொடி ஆர்ப்பாட்டம்:**

தமிழ்நாடு அரசின் முடிவுகளுக்கு முட்டுக்கட்டை போட்டுவரும் ஆளுநர், மதுரை காமராசர் பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாவில் பங்கேற்கச் செல்வது அவமானகரமான ஒன்றாகும். எனவே அவருக்கு கண்டனம் தெரிவிக்கும் விதத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) தோழர்கள் கருப்புக் கொடியேந்தி கண்டனம் முழங்குவார்கள். தமிழ்நாட்டு மக்கள்இந்த போராட்டத்திற்கு பேராதரவு வழங்கிட வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு கே.பாலகிருஷ்ணன் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### ஊதிய உயர்வு நிலுவைத் தொகை - போனஸ் - அகவிலைப்படி உயர்வு வழங்கிய

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு மின் கழக தொ.மு.ச. நன்றி!

## சங்கப் பொதுச் செயலாளர் பா.மணிமாறன் அறிக்கை!

சென்னை, நவ. 3-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா பரிசாக ஊதிய உயர்வு நிலுவைத் தொகை, போனஸ், அகவிலைப்படி உயர்வு தமிழ்நாடு மின்வாரியத் தொழிலாளர்களுக்கு வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்த தமிழ்நாடு மின் கழகத் தொமுச பொதுச் செயலாளர் பா.மணிமாறன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.



அவரது அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள், பொறியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு ஏராளமான சலுகைகள் வழங்கி அவர்களின் வாழ்வாதாரம் உயர்த்திய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை போற்றும் விதமாக, 01.12.2019 முதல் புதிய ஊதிய உயர்வு, கருணைத் தொகையுடன் கூடிய 20 சதவிகிதம் போனஸ், 4 சதவிகிதம் அகவிலைப்படி உயர்வு வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஊதிய உயர்வின் சிறப்புகள்**

6 சதவிகிதம் ஊதிய உயர்வு, 12/2019 முதல் 03/2022 வரை 28 மாதங்களுக்கு ரூ.500/-, ஊதிய உயர்வு நிலுவைத்தொகை 01.04.2022 முதல் 31.05.2023 வரை, பத்து வருடங்கள் பணி முடித்தவர்களுக்கு சர்வீஸ் வெயிட்டேஜ் 3 சதவிகிதம் என அனைவரும் மனம் மகிழும் வண்ணம் ஜுன் மாதம் வழங்கினோர்.

தற்போது முதல் தவணையாக ஊதிய உயர்வு நிலுவைத் தொகையும், மின்வாரியத் தொழிலாளர்கள், பொறியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

கருணைத்தொகையுடன்போனஸ் மின்வாரியத் தொழிலாளர்களுக்கு கருணைத் தொகையுடன் போனஸ் 20 சதவிகிதம் என அதிகபட்சமாக ரூ. 16,800/ வழங்கியவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். பிறகு வந்த அ.தி.மு.க. ஆட்சியில் இது 10 சதவிகிதமாக குறைத்து வழங்கினார்கள். அதை மீண்டும் 20 சதவிகிதமாக உயர்த்தி, தொழிலாளர்கள் மனம் மகிழும் வண்ணம் உத்தரவு வழங்கியுள்ள முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**அகவிலைப்படி உயர்வு**

முதலமைச்சர் அவர்கள் பொறுப்பு ஏற்றவுடன் மின்வாரியத்தில் பணிபுரிகிறவர்களுக்கு அகவிலைப்படி உயர்வை உடனுக்குடன்வழங்கி வருகிறார்கள்.

01.07.2023 முதல் 4 சதவிகிதம் முன்தேதியிட்டு அகவிலைப்படி உயர்வை 42 சதவிகிதத்திலிருந்து 46 சதவிகிதமாக உயர்த்தி வழங்கியுள்ளார்கள்.

இதனால் மின்வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள், பொறியாளர்கள் மற்றும் அலுவலர்கள் என சுமார் 85,000 பணியாளர்களும், மின்வாரியத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்களும் என சுமார் 1,00,000க்கு மேற்பட்டவர்களும் பயன் பெறுவார்கள்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் கடும் நிதி சுமையிலும், தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள், பொறியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு ஊதிய உயர்வு நிலுவைத்தொகை, கருணைத் தொகையுடன் போனஸ் 20 சதவிகிதம் மற்றும் 4 சதவிகிதம் அகவிலைப்படி உயர்வை, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா பரிசாக வழங்கிய தொழிலாளர்களின் நலன் பாதுகாக்கும், மக்கள் நலன் பாதுகாக்கும், திராவிட மாடல் அரசின் முதலமைச்சர் அவர்களுக்கு எங்களது வாழ்நாள் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இவ்வாறு பா.மணிமாறன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




திருவண்ணாமலை நகர தி.மு.க. முன்னாள் செயலாளர் டி.என்.பாபு அவர்களின் 20ஆம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு அவரது நினைவிடத்தில் சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார். உடன் த.வேணுகோபால், டாக்டர் எ.வ.வே.கம்பன், இரா.ஸ்ரீதரன், எஸ்.பன்னீர்செல்வம், ப.கார்த்திவேல்மாறன், ப்ரியா விஜயரங்கன், சு.ராஜாங்கம், ஏ.ஏ.ஆறுமுகம், டப்ளயூ.சர்தார். டி.என்.மனோகர், பா.வினோத்குமார் உட்பட பலர் உள்ளனர்.

### வடகிழக்குப் பருவமழை - வெள்ளத்தை அரசு

# திறம்பட எதிர்கொள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்!

## அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் ஆய்வு!

சென்னை, நவ.3-

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை - முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமசந்திரன் மாவட்ட அவசரகால செயல்பாட்டு மையத்தில் ஆய்வு மேற்கொண்டார்.

வடகிழக்கு பருவமழை 21.10.2023 அன்று தொடங்கியதிலிருந்து, தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் பரவலாக மழை பெய்து வருகிறது.

தமிழ்நாட்டில், 01.10.2023 முதல் 01.11.2023 வரை 101.8 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. இது இயல்பான மழையளவைக் காட்டிலும் 43 விழுக்காடு குறைவு ஆகும். வடகிழக்கு பருவமழைக் காலத்தில் 01.11.2023 முடிய, 1 மாவட்டத்தில் அதிகமான மழைப் பொழிவும், 32 மாவட்டங்களில் குறைவான மழைப் பொழிவும், 5 மாவட்டங்களில் இயல்பான மழைப் பொழிவும் ஏற்பட்டுள்ளது.

நேற்று (02.11.2023) காலை 8.30 மணி முடிய 33 மாவட்டங்களில் 8.74 மி.மீ. மழை பெய்துள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் அதிகபட்சமாக 37.03 மி.மீட்டரும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் குறைந்தபட்சமாக 0.06 மி.மீட்டரும் மழை பதிவாகியுள்ளது.

முதலமைச்சர் அவர்கள் கடந்த 19.09.2023 அன்று ஆய்வுக் கூட்டம் நடத்தி வடகிழக்குப் பருவமழைக்கென மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அனைத்துத் துறை அரசு அலுவலர்களுக்கும் அறிவுரை வழங்கினார்கள்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் பேரிடர் காலங்களில் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளார்கள்.

தலைமைச் செயலாளர் 14.09.2023 அன்று அனைத்துத் துறை அலுவலர்கள், முப்படை மற்றும் ஒன்றிய அரசு அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடத்தி வடகிழக்கு பருவமழையினை திறம்பட எதிர்கொள்ளத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள அறிவுரை வழங்கினார்.

வடகிழக்குப் பருவமழை காலத்தில் கனமழை மற்றும் வெள்ளம் காரணமாக ஏற்படும் பாதிப்புகளை தவிர்த்திட தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், பாதிப்பு ஏற்படக்கூடிய இடங்களில் ஜே.சி.பி. இயந்திரங்கள், மரம் அறுப்பான்கள் உள்ளிட்ட உபகரணங்களுடன், பல்துறை மண்டல குழுக்களையும், மீட்புக் குழுக்களையும், நிவாரண முகாம்களையும் தயார் நிலையில் வைத்திடுமாறும் மாவட்ட ஆட்சியர்களுக்கு 25.09.2023 அன்று சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

பேரிடர் காலங்களில் தங்குதடையின்றி எரிபொருள் கிடைக்கவும், தொலைத்தொடர்பு சேவைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், எண்ணெய் / தொலைத்தொடர்பு நிறுவனங்களுடன் கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் அவர்கள் 05.10.2023 அன்று ஆய்வுக் கூட்டம் நடத்தி அறிவுரை வழங்கினார்.

25.10.2023 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் அனைத்து மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் அவர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அறிவுரை வழங்கப்பட்டது.

அனைத்து மாவட்டங்களுக்கும், பெருநகர சென்னை மாநகராட்சியின் 15 மண்டலங்களுக்கும், கண்காணிப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு அரசு மேற்கொண்ட பல்வேறு வெள்ளத் தணிப்பு பணிகளின் காரணமாக 4399 ஆக இருந்த பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகள், தற்போது 3770ஆக குறைந்துள்ளது. வெள்ளத் தணிப்பு பணிகளுக்காக 2022-23 மற்றும் 2023-24 ஆண்டுகளில் சென்னை மாநகராட்சி, நகராட்சி நிருவாகம் மற்றும் நீர்வள ஆதாரத் துறை ஆகிய துறைகளுக்கு 819.50 கோடி நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களது அறிவுரையின் பேரில் வடகிழக்கு பருவமழையை திறம்பட எதிர்கொள்ள பின்வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாநில / மாவட்ட அவசர கால செயல்பாட்டு மையங்கள் 24 மணி நேரமும் முறையே 1070 மற்றும் 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசிகளுடனும், கூடுதலான அலுவலர்களுடனும் இயங்கி வருகின்றன.

பொதுமக்கள், Whatsapp எண்.94458 69848 மூலம் புகார்களை பதிவு செய்யலாம்.

424 கடலோரப் பகுதிகளில் நிறுவப்பட்டுள்ள முன் எச்சரிக்கை அமைப்புகள் மூலம் சைரன் ஒலி, நேரடி ஒளிபரப்பு மூலம் எச்சரிக்கைகள் மற்றும் பதிவு செய்யப்பட்ட எச்சரிக்கை செய்திகள் பரப்பப்படுகின்றன.



பொதுவான முன்னெச்சரிக்கை நடைமுறை மூலம் பொதுமக்களுக்கு புயல், வெள்ள அபாய எச்சரிக்கை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஆழ்கடலில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு புயல், கனமழை மற்றும் காற்றின் வேகம் குறித்து நவீன தொலைத்தொடர்பு சாதனங்கள் மூலமாக முன்னெச்சரிக்கை வழங்கப்பட்டு அவர்களது பாதுகாப்பு உறுதிசெய்யப்படுகிறது.

TNSMART செயலி மூலமாகவும், அச்சு, மின்னணு மற்றும் சமூக ஊடகங்கள் வாயிலாகவும் பொதுமக்களுக்கு உரிய காலத்தில் வானிலை முன்னறிவிப்பு, வெள்ள அபாய எச்சரிக்கை மற்றும் மின்னல் எச்சரிக்கை வழங்கப்படுகிறது.

14 கடலோர மாவட்டங்கள் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் 65,000 முதல் நிலை மீட்பாளர்களுக்கு பேரிடர் மேலாண்மையில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதோடு, 16 மாவட்டங்களில் ஆப்த மித்ரா திட்டத்தின் கீழ் 5500 தன்னார்வலர்களுக்கான பயிற்சி அளிக்கப்பட்டு அனைவரும் தயார் நிலையில் உள்ளனர்.

அனைத்து மாவட்டங்களிலும், தேடல், மீட்பு உபகரணங்கள் மற்றும் நிவாரணப் பொருட்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

கடலோர மாவட்டங்களில் 1.13 இலட்சம் நபர்கள் தங்கும் வகையில் 121 பல்நோக்கு பாதுகாப்பு மையங்கள் தயார் நிலையில் உள்ளன.

பள்ளிகள், கல்லூரிகள், சமூகக் கூடங்கள் மற்றும் திருமண மண்டபங்கள் என மொத்தம் 4967 நிவாரண முகாம்கள் தயாராக வைக்கப்பட்டுள்ளன.

பெருநகர சென்னை மாநகராட்சி பொறுத்தமட்டில் 169 நிவாரண முகாம்கள் உள்ளதோடு, மழைநீரை வெளியேற்ற 260 பம்புகள் தயாராக வைக்கப்பட்டுள்ளன.

பேரிடர் காலங்களில் தேடல், மீட்பு பணிகளை துரிதமாக மேற்கொள்ளும் பொருட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள பழனி, திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மணிமுத்தாறு, கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் தமிழ்நாடு பேரிடர் மீட்பு படையின் 400 வீரர்கள் கொண்ட 12 குழுக்கள் நிலை நிறுத்தப்பட்டுள்ளன.

மேலும், தேசிய பேரிடர் மீட்புப்படையின் குழுக்கள் அரக்கோணத்திலும், சென்னையிலும் தயார் நிலையில் உள்ளன.

மாவட்ட ஆட்சியர்களுக்கான அறிவுரை

பாதிப்பிற்குள்ளாகக் கூடிய பகுதிகளுக்கென பல்துறை மண்டலக் குழுக்கள் அமைத்து கண்காணிக்கவும்;

பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளில் உள்ள பொதுமக்களை வெளியேற்றும் போது மாற்றுதிறனாளிகள், கர்ப்பிணி பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு முன்னுரிமை அளிக்கவும்;

நிவாரண முகாம்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர், மருத்துவ வசதி, மின்சாரம் மற்றும் இதர அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கவும்;

பேரிடர் காலங்களில் பொதுமக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் கிடைக்கவும்;

மின்கசிவினால் ஏற்படும் விபத்துகளை தவிர்க்கவும்;

பள்ளி மாணவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திடவும்;

நோய்த்தொற்று ஏற்படாமல் இருக்கவும்; நோய்த்தொற்று பரவலைத் தடுக்கவும்; மருத்துவமனைகளில் போதுமான மருந்து இருப்பு வைக்கவும்;

பலவீனமான மற்றும் சேதமடைந்த கட்டடங்களை பொதுமக்கள் பயன்படுத்தாத வகையில் தடுப்பு ஏற்படுத்தி, பாதுகாப்பாக இடித்து அப்புறப்படுத்தவும்;

பலவீனமான மரக்கிளைகள், விழும் நிலையில் உள்ள மரங்களை அப்புறப்படுத்தவும் மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

மனித உயிரிழப்பு, கால்நடை இறப்பு மற்றும் சேதமடைந்த குடிசை/ வீடுகளுக்கு உடனடியாக நிவாரணம் வழங்கவும் மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

பேரிடர் காலங்களில் தேவையான அலுவலர்களை தொடர்பு கொள்ளும் வகையில் தமிழ்நாடு பேரிடர் அபாயக் குறைப்பு முகமையால் தயாரிக்கப்பட்ட தொலைபேசி கையேட்டை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் வெளியிட்டார்கள்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களது ஆய்வின் போது கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் எஸ்.கே. பிரபாகர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை செயலாளர் வே. ராஜாராமன், பேரிடர் மேலாண்மை இயக்குநர், சி.அ.ராமன் ஆகிய அலுவலர்கள் உடன் இருந்தனர்.

### காரைக்குடியில் சிவகங்கை மாவட்ட

# ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி நிர்வாகிகள் நேர்காணல்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் துவக்கி வைத்தார்!

சிவகங்கை, நவ. 3 -

சிவகங்கை மாவட்ட இளைஞரணி ஒன்றிய நகர, பேரூர், கழக அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நேர்காணல் காரைக்குடி ராஜேஸ்வரி மகாலில் மாவட்டக் கழகச் செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான கேஆர். பெரியகருப்பன் தலைமையேற்று துவக்கி வைத்தார். முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் முன்னிலை வகித்தார். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார் வரவேற்றுப் பேசினார். கூட்டத்தில் மாநில இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஜோயல் இன்பாரகு, இளையராஜா, அப்துல் மாலிக், பிரகாஷ், பிரபு, சீனிவாசன், பிரகாஷ்ராஜ், ஆனந்தகுமார், ராஜா, ஆகிய 9 பேர் கலந்து கொண்டார்கள். இவர்கள் சிவகங்கை மாவட்டத்திலுள்ள 25 ஒன்றியங்கள், நான்கு நகராட்சிகள், 11 பேரூராட்சிகள் ஆகியவற்றிற்கான அமைப்பாளர்கள் துணைஅமைப்பாளர்களிடம் நேர்காணலை நடத்தினார்கள் இந்த நிகழ்ச்சியில் மாவட்டம் முழுவதிலுமிருந்து 200க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கலந்துகொண்டார்கள். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கள் சேதுபதிராஜா, கே.எம். பொற்கோ, கார்த்தி, எஸ்.எம்.மதிவாணன், மகாவீர் தலைமைச் செயற்குழு உறுப்பினர் எஸ்.முத்துதுரை, காரைக்குடி நகர்கழக செயலாளர் என்.குணசேகரன் ஆகியோர் கலந்து கொண்டார்கள். நேர்காணல் நிகழ்ச்சி ஏற்பாடுகளை மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில் குமார் செய்திருந்தார்.

### திருவண்ணாமலை நகர தி.மு.க. முன்னாள் செயலாளர்

# டி.என்.பாபு 20 ஆம் ஆண்டு நினைவுநாள்!

## சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி தலைமையில் நடைபெற்றது!

திருவண்ணாமலை, நவ. 3 -

திருவண்ணாமலை நகர தி.மு.க. முன்னாள் செயலாளர் டி.என்.பாபு அவர்களின் 20 ஆம் ஆண்டு நினைவுநாள் அமைதி ஊர்வலம் நடைபெற்றது. சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி தலைமையில் நடைபெற்ற அமைதி ஊர்வலத்தில் த.வேணுகோபால், டாக்டர் எ.வ.வே.கம்பன் உட்பட கழக முன்னோடிகள் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்.

2.11.2023 வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில், திருவண்ணாமலை நகர தி.மு.க. சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் சிலை அருகில் இருந்து, திருவண்ணாமலை நகர தி.மு.க. முன்னாள் செயலாளர் டி.என்.பாபு அவர்களின் 20 ஆம் ஆண்டு நினைவு நாள் அமைதி ஊர்வலம் நடைபெற்றது.

அமைதி ஊர்வலத்திற்கு சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி தலைமை வகித்தார்.

மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்டதுணைச்செயலாளர் ப்ரியா.விஜயரங்கன், நகர நிர்வாகிகள் மு.கருணாமூர்த்தி, ந.சீனுவாசன், அ.கண்ணன், கோல்டு எஸ்.பிரபு, ஹக்கீம் சேட் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அமைதி ஊர்வலம் கலைஞர் சிலையில் இருந்து தொடங்கி, ஈசான்யத்தில் உள்ள டி.என்.பாபு நினைவிடத்தை சென்றடைந்தது. நினைவிடத்தில் சட்டப்பேரவை துணைத்தலைவர் கு. பிச்சாண்டி, மாவட்ட அவைத் தலைவர் த.வேணுகோபால், கழக மருத்துவர் அணி துணைத்தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன் மற்றும் கழக முன்னோடிகள் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினர்.

முன்னதாக டி.என்.பாபு நினைவுநாளை முன்னிட்டு 500 பேருக்கு சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, த.வேணுகோபால், டாக்டர் எ.வ.வே.கம்பன் ஆகியோர் உணவு பொட்டலங்களை வழங்கினர். நிகழ்ச்சி ஏற்பாட்டினை நகர செயலாளர் ப.கார்த்தி வேல்மாறன் செய்திருந்தனர்.

நிகழ்ச்சியில் மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம். நேரு, ஏ.ஏ.ஆறுமுகம், டாக்டர் பிரவீன்ஸ்ரீதரன், பாலமுரளிகிருஷ்ணா, எஸ்.டி.ஆர். பாபு, ஏ.டபல்யூ.சர்தார், கற்பகம்சரவணன், உ.நித்யா ஒன்றிய செயலாளர் பா.ராமஜெயம், பொதுக்குழு உறுப்பினர் மோட்டூர்பாலு, பேரூராட்சி தலைவர் செல்வபாரதி மனோஜ்குமார், நகரமன்ற துணைத்தலைவர் சு. ராஜாங்கம், வழக்கறிஞர் எஸ்.கண்ணதாசன் துரை.வெங்கட் மாவட்ட துணை அமைப்பாளர்கள் இரா.மின்னல்கமல், அய்யம்பாளையம் திருநாவுக்கரசு, ஜவுளி தினகரன், இல. மின்னல்பாபு, கே.கந்தன், எஸ்.சமயராஜ், இரா.ராஜசேகர், ஆ.தே.முருகையன், மு. அம்பேத்கர், டி.என்.பி. வினோத்குமார், டி.எம்.வெங்கடேசன், ஏ.மோகன்ராஜ், பென்ராபர்ட். ஏ.எம்.பாஷா, ரைஸ்ராஜசேகர், பா.அரி கிருஷ்ணன், லக்கி அரவிந்த், ஆர்.வெங்கடேஷ், மலைவாசன், பச்சையம்மாள்யேசு, தீபலட்சுமி, இராஜேஸ்வரிகலியமூர்த்தி, காமாட்சிபாண்டியன், முர்பத், வட்ட செயலாளர்கள் அ.கோவிந்தன், எஸ். எழில்மாறன், வி.எஸ்.ரவீந்திரன், பா.வினோத்குமார், எஸ். கே.டி.வீரா, டி.என்.மனோகர், கி.சரவணக்குமார், க.பிரகாஷ், கோபிசங்கர், ஏ.டி.குப்புசாமி நாடிமுத்து, சி.கே. சசிகுமார், ராயர்பிரகாஷ், ஆ.கஜேந்திரன், குணாளன், பா.ஜெயபால், பழனி, டி.ஏ. முருகன், கு.ஞானவேல், க. தனபால், எம்.சூரியபிரகாஷ், அருண்குமார், லால்ஜவகர், சாந்தி, ரேவதி குப்பன் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# கவித்துவமாகவே வாழ்ந்த இலக்கிய வேந்தர் தலைவர் கலைஞர்!

**(தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினையொட்டி ஒவ்வொரு மாதமும் 3ஆம் தேதியன்று பல்வேறு தலைப்புகளில் 'முரசொலி' சிறப்பிதழ் வெளியிட்டு வருகிறது.**
**இதனையொட்டி இம்மாதம் (நவம்பர்) 'கவிஞர்களின் உரைநடையில் கலைஞர்' என்ற தலைப்பில் சிறப்பிதழ் வெளிவருகிறது.**
**இச்சிறப்பிதழுக்காக கவிச்சுடர் கவிதைப் பித்தன் எழுதிய "கவித்துவமாகவே வாழ்ந்த இலக்கிய வேந்தர் தலைவர் கலைஞர்" எனும் கட்டுரையை இங்கே வெளியிட்டுள்ளோம்.)**

தலைவர் கலைஞர் அவர்கள்
நின்றால் பொதுக் கூட்டம்,
நடந்தால் ஊர்வலம்,
பேசினால் மாநாடு! என்று
மதிப்பிற்குரிய அண்ணன் துரைமுருகன் அவர்கள் அடிக்கடி குறிப்பிடுவார்கள்.
தலைவர் கலைஞர் அவர்கள்
உதிர்த்தால் பொன்மொழி,
உரையாடினால் கவிதை,
உரையாற்றினால் காவியம்! என்று முப்பது ஆண்டுகளுக்கு முன்பே நான் முரசொலியில் எழுதினேன்.

உண்ணும்போதும், உலவும்போதும், உறங்கும்போதும், எண்ணும்போதும், எழுதும்போதும், இயங்கும்போதும்,
"தமிழ்! தமிழ்" என்றே வாழ்ந்த தலைவர் கலைஞர் அவர்கள்,
கவியரங்குகளில் மட்டுமல்ல!
சகஜமாக மற்றவர்களுடன் உரையாடும் போதும்,
மேடைகளில், சட்டமன்றில், மணவிழா உள்ளிட்ட குடும்ப நிகழ்வுகளில் உரையாற்றும் போதும்,
நாடகம், திரைப்படங்களில் வசனம் எழுதும் போதும், கதை, கட்டுரைகள் வரையும்போதும், முரசொலியில் கடிதங்கள் தீட்டும்போதும்,
ஊடகவியலாளர்களின் உள்நோக்கம் நிறைந்த வினாகணைகளின் முனைமுறிந்துப் போகும் வண்ணம் பதில் சொல்லும்போதும்,
அவரிடம் வெளிப்படும் வார்த்தைகளும், வாசகங்களும் கவித்துவம் நிறைந்ததாகவே விளங்கும்.

கவிதை என்ற பெயரில் பலர், உரைநடை எழுதிக்கொண்டிருந்த நேரத்தில், உரைநடையையும் கவித்துவமாக எழுதிக் குவித்தவர் தலைவர் கலைஞர். அதனால்தான் கலைஞரின் உரைநடைக்குக்
"கவிவசனம்" என்று பெயர்சூட்டினார் கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்கள்.

18.11. 1983 அன்று, புதுக்கோட்டை மாவட்ட முன்னாள் தி.மு.க.செயலாளர், அண்ணன் க.சிதம்பரம் அவர்களின் புதல்வி மாதவி திருமணத்தைக் காலையில் தலைமைதாங்கி நடத்தி முடித்து, மாலையில் பட்டுக்கோட்டை கம்பன் விழாவுக்காகத் தலைவர் கலைஞர் புறப்பட்டுக் கொண்டிருந்தார்.
ஐயா மன்னை அவர்களும், அண்ணன் கோ.சி.மணி அவர்களும் வரவேற்று அழைத்துச்செல்லக் காத்திருந்தனர். மாவட்டச் செயலாளர் அண்ணன் பெரியண்ணன், அண்ணன் க.வீரையா, அண்ணன் கீரை. ஆ.தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட புதுக்கோட்டை மாவட்ட நிர்வாகிகள் தலைவர் அவர்களை வழியனுப்பத்தயாராக
நின்றுகொண்டிருந்தோம். கார் அருகில் வந்த தலைவர் கலைஞர் அவர்கள்,
இருதரப்பினரையும் பார்த்து, அழகிய புன்சிரிப்பை உதிர்த்தவாறே,
"வருபவர்கள் உடன்வரலாம்!
வராதவர்கள் விடைதரலாம்!" என்று
கணீர் என்ற தனது காந்தக்குரலில் வெளிப்படுத்திய வாசகத்தைக் கேட்டு,
சுற்றியிருந்த தோழர்கள் கொட்டி எழுப்பிய கைத்தட்டல் ஓசையும், மகிழ்ச்சி ஆரவார ஒலி முழக்கமும் வானைப்பிளந்தது.

1989 சட்டமன்றத் தேர்தலில் புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதியின் கழக வேட்பாளர் நான்.
தலைவர் அவர்கள் முதற்கட்டத் தேர்தல் பிரச்சாரத்தை முடித்துவிட்டுத் திருச்சியிலிருந்து சென்னை செல்லப் புறப்படும் வேளையில், தொடர்வண்டியில் அமர்ந்திருந்த தலைவர் அருகில் பணிவுடன் சென்று நின்றேன்.
என்னைப் பார்த்து "எவ்வளவு செலவு செய்வாய் தேர்தலில்?"என்று தலைவர் அவர்கள் கேட்டதும்,
"முடிஞ்சவரைக்கும் செய்யுறேன் ஐயா" என்றேன்.. அதாவது செலவு செய்யும் அளவுக்கு வசதி இல்லை என்னும் பொருளில்.
அப்படியே நான் சொன்ன பதிலுக்கு நேர் எதிர்மறைப் பொருளைத் தரும்வண்ணம்,
"அப்படி எவ்வளவுயா முடிஞ்சு வச்சிருக்கே?"
என்று தலைவர் அவர்கள் கேட்டதும், அருகில் இருந்த ஐயா அன்பிலார், அருமை அண்ணன் நேரு அவர்கள் உள்ளிட்ட அனைவரும் சிரித்த சிரிப்பில் அந்த இரயில் பெட்டியே சற்றுக் குலுங்கி நின்றது.



கழக முப்பெரும் விழாக் கவியரங்கம் சென்னையில், கலைவாணர் அரங்கில், தலைவர் கலைஞர் தலைமையில். கவிஞர்களின் கவிதைப் பார்வையனைத்தும், தலைவர் அவர்களின் தலை வழுக்கையிலேயே மையம் கொண்டிருந்தது அந்தக் கவியரங்கில்.
நானும் இப்படிக் கவிதை பொழிந்தேன்.

"நிலைவழுக்கிப் போகாத
தலைவ னே, நீ
நேர்மைக்குச் சிறகடிக்கும்
வானம் பாடி!
தலைவழுக்கை அல்ல!
இது
தினமும் வந்து
தமிழன்னை முகம்பார்க்கும்
நிலைக்கண் ணாடி!"
என்று பாடி முடித்ததும்
பலத்த கரவொலி எழுந்தது.
தலைமை தாங்கியிருந்த தலைவர் அவர்கள், நான் கவிபொழிந்து முடித்த மறுகணமே ஒலி பெருக்கியைப் பிடித்து,

" வண்ணக் கவிஞன்
கவிதைப் பித்தன்
வழுக்கையைப் படம்பிடித்தான்! என்



**கவிச்சுடர்**
**கவிதைப் பித்தன்**


மனதில் இடம் பிடித்தான்!
அன்புத் தம்பி
கவிதைப் பித்தா,
அங்கென்ன வாழ்கிறது?.. உனக்கு
வழுக்கை ஏன்வந்தது?
எண்ணத் தால்,நான்
இளமையோ டுள்ளேன்!
இளநீர் வழுக்கைஇது!
ஏறட்டும் உனக்கும்அது!"
என்று பொழிந்து முடித்ததும், கலைவாணர் அரங்கமே அதிர்ந்துபோகும் வண்ணம் கைத்தட்டல் ஒலியும், சிரிப்பொலியும் கைகோத்துக் கொண்டதை அன்று கண்டு கேட்டு மகிழ்ந்தவர்கள் இன்றும் மறக்க முடியாது.

1996 ஆம் ஆண்டு கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்த நேரம்.
ஜெயின் கமிஷன் அறிக்கையில் வரும் சில வாசகங்களை ஆயுதமாகப் பயன் படுத்திக் கொண்டு, இனப்பகைவர்கள், அன்றைக்கு ஓர் அம்மையாரின் தலைமையில், கழக ஆட்சியைக் கவிழ்க்கும் சதியில் ஈடுபட்டிருந்தனர்.
எந்த நேரமும் கழக ஆட்சி கவிழும் என்று சில ஏடு களும் ஜோசியம் சொல்லிக் கொண்டிருந்த அந்த நேரத்தில், கலைவாணர் அரங்கில் கவியரங்கம்.

தன்னேரில்லாத் தமிழ்ப் பெருங்கவிஞர் அண்ணன் மு.மேத்தா அவர்கள் கவிபாட வந்து,

"ஓ..ஜெயின்!
உம்மால் தமிழன்னை நெஞ்சில் பெயின்!
அவள் கண்ணில் ரெயின்!"

என்பன போன்ற வரிகளை வழங்கிச் சென்றார். அடுத்து வந்த நான்,

ஆத்தா நினைத்தவுடன்
அவசரமாய் கலைக்க,இது
கூத்தா நல்லூரா?

கருப்பை என்றால்
கலைத்து விடலாம்! கலைஞர் என்னும்
நெருப்பைக் கலைக்கஒரு
நீர்க்குமிழி துள்ளுவதா?
தருப்பைப் புல்ஒன்று
இமயத்தைத் தள்ளுவதா?
செருப்பைத் தமிழ்மக்கள்
சேகரித்து வைத்துள்ளார்!.. அவர்
விருப்பத்தில் கைவைத்தால்
விபரீதம் உண்டாகும்!"

என்று கனல்கக்கும் கவிபொழிந்து முடித்தேன்.
கவியரங்கம் முடிந்ததும் கவிஞர்கள் அனைவரும் தலைவர் கலைஞர் அருகில் சென்று நின்றோம்.

" கூத்தாநல்லூர் ஆத்தா பற்றிக்
கவிபாடிய கவிதைப் பித்தா!
எங்கே கவிஞர் மேத்தா?" என்றார் தலைவர்.
பின்னால் நின்றுகொண்டிருந்த அண்ணன் மேத்தா, தலைவர் முன்னால் வந்து நின்றார்.

"மேத்தா! உங்கள் கவிதை இன்று fine !
ஆங்கில வார்த்தைகளைக் கவிதையில் அதிகம் பயன்படுத்தியதால்
உங்கள் மீது போடவேண்டும் fine !" என்று
ஒரு போடு போட்டார். ஒரே ஆங்கில வார்த்தையை இரு பொருள்படத் தலைவர் அவர்கள் கூறியதைக் கேட்ட கவிஞர்கள் மட்டுமல்ல! அருகில் நின்று கொண்டிருந்த அனைவருமே விலாவெடிக்கச் சிரித்து மகிழ்ந்ததை மறக்கவும் முடியுமோ?

ஈழத்தில் இனப்படுகொலை
(Genocide) நடைபெற்ற கொடிய நாட்கள்.
தங்கதுரை, குட்டிமணி, ஜெகன் போன்றவர்களின் கண்களைத் துப்பாக்கிகளின் கத்திமுனைகளால் பிடுங்கி எறிந்து, இந்தக் கண்களால் தானே தமிழ்ஈழத்தைக் காணத் துடிக்கின்றீர்கள் என்று சிங்களக் காடையர்கள் கொக்கரித்த நேரம்.
கடலில், படகில் தப்பித்து வந்த இலங்கைத் தமிழர்களைத் துரத்தி வந்து, கடலிலேயே துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாக்குகின்றன அந்தச் சிங்கள மிருகங்கள்! அந்தக் காட்சியைப் பொதுக்கூட்ட மேடையில் விவரித்துக் கொண்டே வந்த தலைவர் கலைஞர் அவர்கள்,

" படகே அவர்களின்
பாடை ஆனது!
கடலே சுடு காடானது"

என்று சோகம் ததும்பும் நிகழ்வைக் கூட கவிதை நயத்துடன் கூறிய கற்பனை அழகு எவருக்கு வரும்?

1996 தி.மு.க.ஆட்சிப் பொறுப்பில்.அன்றைய தமிழ் மாநிலக் காங்கிரஸ் மூப்பனார் அவர்கள் தலைமையில் கழகக் கூட்டணியில் இடம்பெற்றிருந்த நேரம். கழகத்திற்கும் தமிழ் மாநிலக் காங்கிரசுக்கும் விரிசல் ஏற்படுத்தும் விஷம எண்ணத்துடன் நிருபர் ஒருவர் தலைவர் கலைஞர் அவர்களிடம் பேட்டி ஒன்றில், இப்படிக் கேட்டார்.

"தி மு.க.வுக்கும், த.மா.கா.வுக்கும் இடையில் ஏதோ சிக்கல் இருக்கிறதாமே?"

கண்ணிமைக்கும் கணப்பொழுதில் தலைவர் கலைஞர் சொன்ன பதில் இதோ!

" எனக்குத் தெரிந்து
திருவாரூருக்கும் நாகப்பட்டினத்திற்கும் இடையில்தான்
" சிக்கல்" இருக்கிறது.
தி.மு.க.வுக்கும்
த.மா.கா.வுக்கும் இடையில் இல்லை!

கேள்வி கேட்ட செய்தியாளர் சிரிப்பு அடங்கவே நெடுநேரம் ஆனது.

வீரன் ஒருமுறைதான்
சாகின்றான்.
கோழை செத்துச் செத்துப் பிழைக்கின்றான் என்பீர்கள்!
ஒரு சிறு திருத்தம்...
வீரன் சாவதே இல்லை!
கோழை வாழ்வதே இல்லை! என்று எழுதிய தலைவர் கலைஞர்தான்,
"பிரபாகரன் உயிரோடு இருக்கின்றாரா?
இறந்து விட்டாரா?" என்று பத்திரிகையாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு,
"மாவீரர்களுக்கு
மரணமே கிடையாது!"
என்று உறுதி குலையாத பதிலிறுத்தார்!

வீழ்வது நாமாயினும்
வாழ்வது தமிழாகட்டும்!
என்னும் கலைஞரின் முழக்கம் தமிழ்ப் பெருங்குடி மக்களின் நெஞ்சமெனும் கல்வெட்டில் நிலைத்து விட்ட வரிகள் அல்லவா?

உறவுக்குக் கை கொடுப்போம்!
உரிமைக்குக் குரல்கொடுப்போம்!

என்னும் கவித்துவ முழக்கம்,
திராவிட முன்னேற்றக் கழகத்திற்கே உரிய சித்தாந்த உறுதிப்பாட்டின் தத்துவ விளக்கம் அல்லவா?

விவேகம் என்னும்
வெள்ளி முளைத்து,
சாதிப்பித்து எனும்
சனி தொலைந்தால்தான்
சமத்துவம் என்னும்
ஞாயிறு பூக்கும்!
என்பது சமத்துவபுர வாசகம் மட்டுமா?
சமூக நீதிக் காவியமல்லவா!

அண்ணா வழியில்
அயராதுழைப்போம்!
ஆதிக்கமற்ற சமுதாயம்
அமைத்தே தீருவோம்!
இந்தித் திணிப்பை
என்றும் எதிர்ப்போம்!
வன்முறை தவிர்த்து
வறுமையை வெல்வோம்!
மாநிலத்தில் சுயாட்சி! மத்தியில் கூட்டாட்சி!

கழகத்தின் உயிர்நாடிக் கொள்கைகள் என்று தலைவர் கலைஞர் அவர்கள் நமக்கு வழங்கிச் சென்ற இந்த ஐம்பெரு முழக்கமே
மோனை நயம் குன்றாத முத்தமிழ்க் கவிதை தானே?

கீதாஞ்சலியினும் கீர்த்தி பெற்ற
உயிர்ப்புமிக்க கவிதையல்லவா,
பேரறிஞர் அண்ணாவுக்குத்
தலைவர் கலைஞர் அவர்கள் தன் கண்ணீரை மையாக்கித் தீட்டிய கவிதாஞ்சலி!

ஈடு, இணையில்லாத இலக்கியப் பெருவேந்தர்,
தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா
கொண்டாடப்படும் இந்தத் தருணத்தில் மட்டுமல்ல! இனிவரும் அத்தனை நூற்றாண்டு களிலும் தமிழ்கூறும் நல்லுலகத்தால் அவர் கொண்டாடப்படுவார்!

ஆண்டுகள் ஆயிரம் உருண்டாலும்
அவரை நினைக்கும் மனிதகுலம்!
ஆருயிர்த் தலைவரை வணங்கும் நமக்கு
அறிவா லயம்தான் புனிதத்தலம்!
மீண்டும் ஒருமுறை பிறந்தாலும்
வேண்டிநிற் பேன்ஓர் அன்புவரம்!
மேலும் அவர்க்கே உடன்பிறப்பாய்
பிறக்க வேண்டும்நான் நூறுதரம்!

## கூட்டணி ஆட்சியிலிருந்து கூட்டாட்சிக்கு:

# முதலமைச்சரின் ‘பாட்காஸ்ட்’ உரை குறித்து சில குறிப்புகள்!

### ‘மின்னம்பலம்’ இணையதளத்தில் து.ரவிக்குமார் எம்.பி. சிறப்புக் கட்டுரை!



மாநில சுயாட்சிக்கான இன்றைய தேவை குறித்து தமிழ்நாட்டின் குரல்” என்னும் தலைப்பில் இன்று (30.10.2023) தமிழ்நாடு முதலமைச்சரும் திமுக தலைவருமான மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘பாட்காஸ்ட்டில்’ உரையாற்றியிருக்கிறார். பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் குஜராத் மாநில அமைச்சராக இருந்தபோது மாநில உரிமைகளுக்காகக் குரல் கொடுத்ததையும், அவரே பிரதமராக வந்தபிறகு மாநில உரிமைகளைப் பறிப்பதையும் முதலமைச்சர் சுட்டிக்காட்டியிருக்கிறார். ‘மாநில சுயாட்சி மத்தியிலே கூட்டாட்சி’ என்ற முழக்கத்தின் இன்றைய தேவையை வலியுறுத்தியிருக்கிறார். ‘மாநில சுயாட்சி மத்தியிலே கூட்டாட்சி’ என்ற முழக்கம் 1970ஆம் ஆண்டு திருச்சியில் நடந்த திமுக மாநாட்டில் உருவெடுத்தது. இந்த முழக்கம் தமிழக எல்லையைத் தாண்டி இந்திய அளவில் எதிரொலிகளை எழுப்பியது மட்டுமின்றி, தலைமுறைகளைத் தாண்டி தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. இந்தித் திணிப்பையும், வடவர் ஆதிக்கத்தையும் எதிர்ப்பதாக வெளிப்பட்ட இந்தக் குரல், தமிழுக்கான அங்கீகாரத்தைக் கோருவதாகவும், மாநில அரசுக்குக் கூடுதல் அதிகாரங்களைக் கேட்பதாகவும் அமைந்திருந்தது. அன்று, அதற்குத் தெளிவான கருத்தியல் வடிவத்தை வழங்கியவர் முரசொலி மாறன் ஆவார். அவர் மாநில சுயாட்சி குறித்து எழுதிய நூல் இன்றும் பொருந்தக்கூடியதாகும்.

ஆட்சி அதிகாரத்தை திமுக பிடித்தது முதல், அவசரநிலை அமல்படுத்தப்பட்ட காலம் வரை தமிழ்நாட்டில் இந்த மாநில சுயாட்சி முழக்கம் ஓங்கி ஒலித்ததை நாம் அறிவோம். ராஜமன்னார் குழு பரிந்துரையின் அடிப்படையில் மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் என்று தமிழக சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட 1974ஆம் ஆண்டில்தான், சுதந்திர தினத்தன்று கோட்டையிலே தேசியக் கொடியை ஏற்றிவைத்து இந்திய அளவில் ஒரு முன்னுதாரணத்தை கலைஞர் உருவாக்கினார்.



இப்படி மாநில மக்களின் உணர்வுகள் சனநாயக ரீதியாக வெளிப்பட்டுக் கொண்டிருந்த சூழலில் தான் அவசரநிலை அறிவிக்கப்பட்டது. கட்சியிலும், ஆட்சியிலும் அதிகாரங்களைக் குவித்துக் கொள்ள வேண்டும் என்ற நாட்டம் அன்றைய பிரதமர் இந்திராவின் கண்களை மறைத்தது. மாநில உணர்வுகள் சனநாயக ரீதியாக வெளிப்படுவதற்கு தடை ஏற்படுத்தப்பட்டபோது பிரிவினை முழக்கங்கள் எழுந்தன. பஞ்சாப்பிலும், வடகிழக்கு மாநிலங்களிலும் ரத்த ஆறு பெருக்கெடுக்க அதுவே காரணமாய் அமைந்தது. இந்தியாவின் தேசிய இனப் பிரச்சினையை ஆராய்கிறவர்கள் அதன் வேர் 1947ஐத் தாண்டியும் ஆழ்ந்து செல்வதை அறிவார்கள். மொழியால், இனத்தால் வேறுபட்டுக் கிடக்கும் பல்வேறு தேசிய இனங்களின் கூட்டமைப்பாக விளங்கும் இந்தியாவை நிர்வகிப்பதற்கு பிரிட்டிஷ்காரர்களும், படாதபாடுபட்டதை அவர்கள் புரிந்து கொள்ள முடியும்.

இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கிய அரசியலமைப்புச் சட்ட அவையின் உறுப்பினர்களாக இருந்தவர்கள் தத்தமது மாநிலங்களின் பிரதிநிதிகளாக அதில் பங்கேற்கவில்லை. எனவே மத்திய மாநில உறவுகள் குறித்த ஆழமான விவாதம் அந்த அவையில் நடைபெறவில்லை. நாட்டுப் பிரிவினையின் ரணம் ஆறாமல் இருந்த சூழலில் மாநிலங்களுக்கு வழங்கப்படும் அதிகாரம் பிரிவினைக்கு இட்டுச் சென்றுவிடக்கூடாது என்ற எச்சரிக்கை உணர்வுதான் அன்றைய அரசியல் தலைவர்களிடம் மேலோங்கி இருந்தது. அரசியலமைப்புச் சட்ட உருவாக்கத்தில் முக்கிய பங்காற்றிய அம்பேத்கரும் அதற்கு விதிவிலக்காக இல்லை. அதனால்தான் மாநிலங்களுக்கு அதிகாரங்களை வழங்கினாலும் தேவைப்படும்போது அந்த அதிகாரங்களை மத்தியில் மாற்றிக் கொள்வதற்குத் தோதாக நமது அரசியலமைப்புச் சட்டத்தை அவர் உருவாக்கினார். 1967ஆம் ஆண்டிற்குப் பிறகு மத்தியில் இந்திராகாந்தி அம்மையார் பொறுப்பேற்றதற்குப் பின்னால் காங்கிரஸ் பேரியக்கம் ஒரு சில ஆண்டுகளில் இரண்டாக உடைந்த நிலையை இந்த நாடு பார்த்தது. அப்போதே இந்தியா முழுமைக்கும் ஒரு கட்சி ஆட்சி என்பது ஏற்க முடியாது என்கிற குரல்கள் வலுவாக ஒலித்தன. அதன் விளைவாகத்தான் இந்த நாட்டில் அவசர நிலையைக் கொண்டுவரவேண்டிய நிர்ப்பந்தம் இந்திரா அம்மையாருக்கு ஏற்பட்டது என்பதையும் நாமெல்லாம் அறிவோம். அந்த அவசர நிலை காலத்துக்குப் பிறகு ஜனசங்கம் முதலான கட்சிகள் எல்லாம் ஒன்றிணைந்து ஜனதா என்கிற கூட்டணியை உருவாக்கி இந்திய வரலாற்றில் 1977ஆம் ஆண்டில் முதல் முறையாக காங்கிரஸ் அல்லாத ஓர் ஆட்சியை மத்தியில் அமைத்தார்கள். இரண்டாண்டுக் காலம் நீடித்த அந்த ஆட்சி இந்தியா முழுமைக்கும் பேரதிர்வுகளை ஏற்படுத்தியது. எல்லா இடங்களிலும் மாநில உரிமைகளுக்கான கோரிக்கைகள் தீவிரமடைந்தன.

மாநில உரிமைகளை முன்வைத்த கட்சிகள் ஏராளமாக உருவெடுத்தன. அதனுடைய தொடர்ச்சியாகத்தான் 1989ஆம் ஆண்டில் வி.பி.சிங் தலைமையிலான ஆட்சி. அதற்குப் பிறகு 1996ஆம் ஆண்டில் 16 கட்சிகளின் கூட்டணி ஆட்சி. 1998ஆம் ஆண்டு 18 கட்சிகளைக் கொண்ட கூட்டணி ஆட்சி. 1999ஆம் ஆண்டு 24 கட்சிகளைக் கொண்ட கூட்டணி ஆட்சி என்று மத்தியில் மாநிலக் கட்சிகள் பங்கேற்கின்ற கூட்டணி அரசுகள் உருவெடுத்தன. மத்தியில் ஆளுகின்ற கட்சி ஆளும் மாநிலங்களில் மட்டும்தான் மத்திய அரசின் வளர்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என்கிற நிலை மாறி இந்தக் கூட்டணி ஆட்சிகளின்போதுதான் ஒப்பீட்டளவில் மாநில உரிமைகள் மதிக்கப்பட்டன. வளர்ச்சித் திட்டங்கள் மாநிலங்களுக்கும் வந்து சேர்ந்தன. தமிழ்நாட்டை எடுத்துக்கொண்டால் தமிழ்ச் செம்மொழி ஆனது கூட்டணி ஆட்சியின் விளைவுதான். சேதுக்கால்வாய்த் திட்டம் வந்ததும் கூட்டணி ஆட்சியின் விளைவுதான். தமிழக சாலைகள் மேம்பட்டது கூட்டணி ஆட்சியின் விளைவுதான். 69 விழுக்காடு இடஒதுக்கீட்டுச் சட்டத்தை அரசியலமைப்புச் சட்டத்தினுடைய ஒன்பதாவது அட்டவணையில் சேர்க்கமுடிந்தது என்றால் அது கூட்டணி ஆட்சியின் விளைவுதான். காவிரியில் நடுவர் மன்றம் காண முடிந்தது என்றால் கூட்டணி ஆட்சியால் ஏற்பட்ட விளைவுதான்.




இப்படி கூட்டணி ஆட்சிகளால் தமிழகத்திற்குக் கிடைத்த நன்மைகள் பல. இன்றைக்குத் தமிழ்நாட்டில் ஒரு மத்திய பல்கலைக் கழகம் அமைந்திருக்கிறது, கூடுதலாக ஒரு ஐஐடி வந்திருக்கிறது – இவை எல்லாமே கூட்டணி ஆட்சி வந்ததற்குப் பின்னால் கிடைத்த நன்மைகள் தான். இப்படி ஒவ்வொரு மாநிலத்திலும் நாம் எடுத்துக்காட்டுகளை சொல்லிக் கொண்டே போகலாம். ஆகவே, மாநிலங்கள் வளர்ச்சி பெறவேண்டும் என்றால் மத்தியில் கூட்டணி ஆட்சி அமையவேண்டும், அந்தக் கூட்டணி ஆட்சி கூட்டாட்சியாக வளர்ச்சி பெறவேண்டும் என்பதைப் பற்றி நாம் கவனம் செலுத்த வேண்டும். “ பெரும்பான்மை ஆட்சி நடக்கும் எந்தவொரு நாடுமே அவசரநிலை பிறப்பிக்கப் படுகிற ஆபத்துள்ள நாடுதான்” என சட்ட அறிஞர் ஃபாலி எஸ்.நாரிமன் கூறினார்.

அது மறுக்கமுடியாத உண்மையாகும். 1975 இல் அவசரநிலை பிறப்பிக்கப்படும்போது இந்திரா காந்தி அம்மையாரின் தலைமையில் ஒரு பெரும்பான்மை ஆட்சிதான் நடந்துவந்தது. 1971 பாராளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் 352 இடங்களில் வெற்றிபெற்று தனிப் பெரும்பானமையோடு ஆட்சிநடத்தியது. இப்போதும் மத்தியில் பெரும்பான்மை பலத்தோடு பாஜக ஆட்சி நடத்துகிறது; எல்லா அதிகாரங்களும் பிரதமரின் கையில் குவிக்கப்படுகின்றன, நரேந்திர மோடி என்ற ஒருவரை மையப்படுத்தி துதிபாடும் வேலையில் ஊடகங்கள் யாவும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. பா.ஜ.க. அல்லாத மாநில அரசுகள் ஓரவஞ்சனைக்கும் அச்சுறுத்தலுக்கும் ஆளாகியிருக்கின்றன. இப்போது, அறிவிக்கப்படாத அவசரநிலையே நிலவுகிறது என்பதை அனைவருமே ஒப்புக்கொள்கிறார்கள்.

2024 இல் மீண்டும் பா.ஜ.க. வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்துவிட்டால் அதன் பிறகு இந்தியாவில் தேர்தல் ஜனநாயகமுறையே இருக்காது என்றும் அச்சம் தெரிவிக்கிறார்கள்.

அத்தகைய நிலை ஏற்படாமல் தடுக்க வேண்டுமென்றால் அடுத்து மத்தியில் அமையும் ஆட்சி கூட்டணி ஆட்சியாக இருக்கவேண்டும் என்பதோடு அது கூட்டாட்சியாகவும் இருக்கவேண்டும். அதை உறுதி செய்யவேண்டியது மாநில உரிமைகள் குறித்து அக்கறை கொண்ட கட்சிகளின் பொறுப்பு. இன்று முதலமைச்சரின் ‘போட்காஸ்ட்’ உரை அந்தப் பொறுப்புணர்வின் வெளிப்பாடு. அவருக்குப் பாராட்டுகள்.

**நன்றி**
**மின்னம்பலம் இணையதளம்**
**நவம்பர் 2023**



முனைவர் து.ரவிக்குமார் எம்.பி.
எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர்



சிவகங்கை மாவட்டம் கல்லல் ஒன்றியம் தளக்காவூரில் நடைபெற்ற கிராமசபை கூட்டத்தில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் சிறப்புரை ஆற்றினார். உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித், திட்ட இயக்குனர் சிவராமன், ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி தமிழ்ச்செல்வி ஆகியோர் கலந்து கொண்டனர்.

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக

# இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களுக்கான நேர்காணல்!

### மாவட்டச் செயலாளர் – நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் அறிக்கை !



குமரி, நவ. 3 -

நாகர்கோவில் மாவட்டச் செயலாளர் - நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணிச் செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, 05.11.2023 (ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணிக்கு கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில், ஒழுகினசேரியில் அமைந்துள்ள மாவட்ட தலைமைக் கழக அலுவலகத்தில் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்க் கழக இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர் ஆகிய பொறுப்புகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்காணல் எனது தலைமையில், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வி.அகஸ்தீசன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறவுள்ளது.

இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர்கள் இன்பா ஏ.என்.ரகு, எஸ். ஜோயல், பி.அப்துல் மாலிக், என். இளையராஜா, கே.ஈ. பிரகாஷ், பி.எஸ்.சீனிவாசன், ஜி.பி.ராஜா, கே.பிரபு கஜேந்திரன், சி.ஆனந்த குமார் ஆகிய துணை செயலாளர்கள் இளைஞர் அணி பொறுப்புகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கு நேர்காணலை நடத்துகிறார்கள். எனவே ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்க் கழக இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆகிய பொறுப்புகளுக்கு விண்ணப்பித்தவர்கள் அதற்கான வயது சான்றிதழுடன் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இது தொடர்பான ஏற்பாடுகளை மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வி. அகஸ்தீசன் செய்து வருகிறார். எனவே நேர்காணலுக்கு விண்ணப்பித்தவர்கள் இதுதொடர்பான விபரங்களுக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளரை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### தஞ்சை தெற்கு மாவட்ட

# தி.மு.க. அயலக அணி ஆலோசனைக்கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ. தலைமை!

தஞ்சாவூர், நவ. 3 -

தஞ்சை தெற்கு மாவட்ட அயலக அணியில் ஆலோசனைக் கூட்டம் பட்டுக்கோட்டையில் நாளை (4.011.2023) நடைபெற உள்ளதாக மாவட்ட அமைப்பாளர் சே. ஷாஜகான் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் நாளை (04.11.2023-சனிக்கிழமை) மாலை 04.00 மணியளவில் பட்டுக்கோட்டை, மாவட்டக் கழக அலுவலகத்தில் தஞ்சை தெற்கு மாவட்ட அயலக அணியின் நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம், மாவட்டக் கழகச் செயலாளர் கா.அண்ணா துரை எம்.எல்.ஏ தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாநிலக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகி கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர்ச் செயலாளர்கள் கலந்துகொள்ள உள்ளனர்.

அதுசமயம் அயலக அணி நிர்வாகிகள் அனைவரும் குறித்த நேரத்தில் தவறாது கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டுகிறேன்.


கூட்ட பொருள் :புதிய நிர்வாகிகள் அறிமுகம், 2024 நாடாளுமன்ற தேர்தல் பணிகள், அயலக அணி புதிய உறுப்பினர்கள் சேர்த்தல், அணியின் ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வளவனூர் எ. கிருஷ்ணமூர்த்தி

### நவம்பர் 3 (2012)



**இளம் வயது முதலே கழகக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, தமது பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.**

**விழுப்புரம் வட்டக் கழகச் செயலாளராகவும் – பல ஆண்டுகள் வளவனூர் பேரூர்க் கழகச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**மொப்போர் தியாகியான இவர், 1953–ல் மும்முனைப் போராட்டம் முதல் விலைவாசி உயர்வு எதிர்ப்பு ஆர்ப்பாட்டம், இந்தி எதிர்ப்பு போராட்டம், ஈழத் தமிழர் ஆதரவு போராட்டம் என கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு ஏறக்குறைய 368 நாட்கள் சிறையில் இருந்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## பட்டாம்பூச்சி போல் பறந்து கொண்டிருக்கும் அண்ணன் அமைச்சர் எ.வ.வேலு! ‘விபத்தில்லா தமிழ்நாடு’ எனும்

# முதலமைச்சரின் கனவை நிறைவேற்ற ‘சாலை செயலி’ வெற்றி பெறட்டும்!

## திட்டத்தைத் தொடங்கி வைத்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

**சென்னை, நவ.3-**

**“விபத்தில்லா தமிழ்நாடு எனும் முதலமைச்சரின் கனவை நிறைவேற்ற ‘சாலை செயலி’ திட்டம் வெற்றி பெறட்டும்” என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திட்டத்தை தொடங்கி வைத்து உரையாற்றும் போது கூறினார்.**

திட்டத்தைத் தொடங்கி வைத்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :-

அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் தொடர்ந்து, கழக நிகழ்ச்சிகளுக்காக, அவருடைய மாவட்டத்திற்கு என்னைப் பலமுறை அழைத்துச் சென்றிருக்கிறார்.

பல்வேறு நிகழ்ச்சிகளை என்னை வைத்து நடத்திக் கொண்டிருக்கிறார். ஆனால், அவருடைய துறை சம்பந்தப்பட்ட ஒரு நிகழ்ச்சிக்கு என்னை அழைத்து நடத்துவது இதுவே முதல்முறை. அதற்கு இந்த நேரத்தில் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முதலமைச்சர் அவர்கள் நம்முடைய நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் அவர்களைப் பலமுறை பாராட்டி பேசி இருக்கிறார். அடிக்கடி சொல்வார், `எ.வ.வேலு என்றால் எதிலும் வல்லவர் வேலு’ என்று பெருமையாகக் குறிப்பிடுவார். அதைத் தொடர்ந்து நிரூபிக்கின்ற வகையில் இந்த நிகழ்ச்சியை இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்து, இதிலும் வல்லவர் என்று நிருபித்திருக்கிறார் அண்ணன் வேலு அவர்கள்.

இன்றைக்குத் தொடங்கி வைக்கப்படுகின்ற இந்த இரண்டு சேவைகளும் மிக முக்கியமானவை. சட்டப்பேரவை மானியக் கோரிக்கையின் போது அண்ணன் வேலு அவர்களால் அறிவிக்கப்பட்டது. சொன்னதைச் செய்கின்ற அரசு என்பதற்கு உதாரணமாக, இந்த இரண்டு சேவைகளும் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் அறிவித்தபடி, இன்றைக்கு நடைமுறைக்கு வந்திருக்கின்றது.



சென்னை, கிண்டி, நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில், நேற்று முன்தினம் (1.11.2023) சாலைகளில் ஏற்படும் இடர்ப்பாடுகள் தொடர்பாக பொதுமக்கள் புகார் தெரிவிக்க ”நம்ம சாலை” என்ற புதிய செயலியை, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள்துறை அமைச்சர் எ.வ.வேலு முன்னிலையில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப்யாதவ், தமிழ்நாடு சாலைமேம்பாட்டுத் திட்ட இயக்குநர் எஸ்.பிரபாகர், நெடுஞ்சாலைத்துறை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு தலைமைப் பொறியாளர் இரா.சந்திரசேகர், முதன்மை இயக்குநர் திருமதி ந.சாந்தி, சென்னை கன்னியாகுமரி தொழிற்தட திட்ட தலைமைப் பொறியாளர் எம்.கே.செல்வன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

தொழில்நுட்பத்தின் உதவியுடன் சாலையின் தரத்தை பொறியாளர்களுடைய பணியை எப்படி மேம்படுத்த முடியும் என்ற யோசனைக்குப் பதிலாக, இந்த இரண்டு சேவைகளும் இன்று இங்கு உருவாக்கப்பட்டுள்ளன.

### இந்தியாவில் முதல் முறையாக அறிமுகம்!

இந்திய ஒன்றியத்திலேயே முதன் முறையாக உருவாக்கப்பட்டுள்ள நம்ம `சாலை அப்ளிகேஷனை பொறுத்தவரை, சாலையில் பயணிக்கிற பொழுது ஏதாவது பள்ளமோ அல்லது குழியோ இருந்தால், அதனைப் பொதுமக்களே அரசுக்கு தெரிவிக்கும் வகையில், இந்தச் செயலி இந்தியாவிலேயே முதன் முறையாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பள்ளம், குழி மற்றும் முறையற்ற சாலைகளைப் புகைப்படம் எடுத்து, அந்த செயலில் பொதுமக்கள் அப்லோட் செய்தால், அது நேரடியாக அரசு அதிகாரிகளின் கவனத்திற்கு வரும். அந்தப் புகைப்படத் தின் அடிப்படையில், உடனே பழுதான சாலைகளை அவர்கள் சரிசெய்வார்கள்.

இந்த செயலியின் மூலம் தகவல் தெரிவித்தால், மாநில நெடுஞ்சாலைகள் உள்ள பள்ளங்கள் 24 மணி நேரத்திலும், மாவட்ட முக்கிய சாலையில் மற்றும் மாவட்ட இதர சாலைகளில், 72 மணி நேரத்திலும் அந்தச் சாலைகள் சரிசெய்து தரப்படும்.

சாலை சரிசெய்யப்பட்டதற்கான ஆதாரமாக சம்பந்தப்பட்ட புகைப்படம் இந்தச் செயலில் உடனே பதிவேற்றம் செய்யப்படும். எந்த ஒரு விஷயத்தையும் அரசு மட்டுமே தனித்துச் செயல்படுத்த முடியாது.

பொதுமக்களுடைய ஆதரவும் ஒத்துழைப்பும் இருந்தால்தான், எந்த ஒரு திட்டமும் சிறப்பாகச் செயல்படுத்த முடியும். அந்த வகையில் தான் இந்த `நம்ம சாலை’ செயலி உருவாக்கப்பட்டுள்ளது. இதனைத் தமிழ்நாட்டு மக்கள் சிறப்பாகப் பயன்படுத்திக் கொண்டு, நம்முடைய மாநிலத்தின் சாலைக் கட்டமைப்பை மேம்படுத்த, அரசுக்குத் துணை நிற்குமாறு இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

### நிரந்தர தொலைபேசி எண்!

அதுபோல நெடுஞ்சாலைத்துறை பொறியாளர்களுக்கு நெருக்கமான பயணர் குழு அதாவது போஸ்ட் யூசர் குரூப் CUG எனும் சேவையை இங்கு தொடங்கி வைக்கின்றோம். இந்த சேவை மூலம் நிரந்தர அலைபேசி எண்கள் பொறியாளர்களுக்கு வழங்கப்படுகின்றது. இது மிக மிக முக்கியமான ஒரு முன்னெடுப்பு. சாலை பராமரிப்பு நடவடிக்கைகள் சாலைப் பாதுகாப்புச் சாலையில் ஏற்படும் பழுதுகள், பேரிடர் காலங்கள் போன்றவை குறித்த தகவல் பரிமாற்றங்களுக்கு நெடுஞ்சாலைத்துறைக்குப் பொறியாளர்களைத் தொடர்பு கொள்வதற்கு நிரந்த தொலைபேசி எண் தேவைப்படுகின்றது. அந்தத் தேவையைப் பூர்த்திச் செய்யும்விதமாக இன்று இங்கு தொடங்கப்பட்டுள்ளது.

இந்த நிரந்தரத் தொலைபேசி எண் மூலமாக எந்த ஒரு அலுவலரையும் எளிதில் தொடர்பு கொள்ள முடியும். சாலைகளின் நிலையைத் தெரியப்படுத்தி, உடனுக்குடன் அவற்றைச் சரி செய்ய முடியும். இந்த இரண்டு சேவைகளையும் பொதுமக்களும் நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகளும் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ள நான் உங்களையெல்லாம் வாழ்த்துகின்றேன்.

இங்கு எங்களுக்கெல்லாம் நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. எனக்கு விளையாட்டு சம்பந்தமாக ஒரு நினைவு பரிசு வழங்கினார் நம்முடைய அமைச்சர் அவர்கள். அப்போது அவர் சொன்னார், விளையாட்டுத்துறை அமைச்சர் அதற்காக இந்த நினைவுப் பரிசு என்றார்.

அதேபோல் அவருக்கு ஒரு நினைவுப் பரிசு வழங்கப்பட்டது பட்டாம்பூச்சி சின்னங்கள் பொறிக்கப்பட்ட நினைவுப் பரிசு. அப்போது நான் சொன்னேன் நீங்கள் பட்டாம்பூச்சி போலப் பறந்து கொண்டிருக்கிறீர்கள் அதற்காகத்தான் உங்களுக்கு பட்டாம்பூச்சி நினைவுப் பரிசு என்று சொன்னேன்.

நம்முடைய அரசு செயலாளர் அவர்களுக்கு பேனா சின்னம் நினைவுப் பரிசாகக் கொடுக்கப்பட்டது. நான் அப்போது அமைச்சரிடம் கேட்டேன், எதற்கு பேனா சின்னம் என்று கேட்டேன். உடனே அவர் பதில் சொன்னார், எந்த ஃபைல் கொடுத்தாலும், உடனே கையெழுத்து போட்டுச் சீக்கிரம் அனுப்பி விடுவார் அதனால்தான் அவருக்கு பேனா சின்னம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்.

எனவே, இந்தச் சிறப்பு வாய்ந்த நெடுஞ்சாலைத்துறை நிகழ்ச்சி இவ்வளவு சீரும் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. உங்கள் அத்தனை பேருக்கும் மீண்டும் என்னுடைய வாழ்த்துக்களை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

விபத்தில்லா தமிழ்நாடு எனும் நம்முடைய முதலமைச்சருடைய கனவை நனவாக்கவும், சாலை கட்டமைப்பை மேம்படுத்தவும், நம்முடைய சாலை செயலியை நெடுஞ்சாலைத்துறைப் பொறியாளர்களுக்கான சி.யு.ஜி சேவையும் வெற்றி பெறட்டும்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.



மு.க.ஸ்டாலின்
தமிழ்நாடு முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

27.10.2023

வாழ்த்துச் செய்தி

சிறுபான்மையினத்தைச் சேர்ந்த 111 பேர் சேர்ந்து உருவாக்கியுள்ள “ஸாலிஹீன் கல்வி அறக்கட்டளை” அடித்தட்டு மக்களின் மேம்பாட்டுக்காகப் பல்வேறு சேவைகளைப் புரிந்து வருவதை அறிந்து பெருமிதமும், பேருவகையும் அடைகிறேன்.

நல்லுள்ளம் கொண்டாரால் உருவாக்கப்பட்டுள்ளதன் அடையாளமாக, “நல்லோர்” எனப் பொருள்படும் “ஸாலிஹீன்” என்ற பெயரால் அறக்கட்டளை அமைந்திருப்பது மேலும் பொருத்தமாகும்.

இந்த அறக்கட்டளையால், வேப்பூரில் கட்டப்பட்டுள்ள மருத்துவமனை 04.11.2023 அன்று திறந்து வைக்கப்படுவதை அறிந்து பெரும் மகிழ்வுற்றேன். இந்த மருத்துவமனை மூலம் எளிய மக்கள் பெருமளவு பயனடைவார்கள் என்று நம்புகிறேன். நலவாழ்வில் நிறைவடைந்த சமூகமே, வலுவான செயலூக்கம் மிக்க சமூகமாகவும் திகழும். அத்தகைய நலவாழ்வை நமது சமூகம் பெறுவதற்கு இத்தகைய சேவை அமைப்புகள் தங்களது பங்களிப்பை வழங்க முன்வருவது பெரிதும் வரவேற்கத் தக்கது.

“ஸாலிஹீன் கல்வி அறக்கட்டளை” மேலும் பல சேவைகளைப் புரிந்து, தமது தொண்டறப் பயணத்தில் தொடர்ந்து பீடுநடை போட உளமாரப் பாராட்டி, வாழ்த்துகிறேன்.

அன்புடன்,

(மு.க.ஸ்டாலின்)

# திராவிட சினிமா

30


திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூகநீதிச் சிந்தனைகளைத் திரைத்துறை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தனர் நமது முன்னோடிகள். அந்த வகையில் திரைப்படம் என்கிற நவீன ஊடகத்தின் மூலம் அரசியல் மாற்றத்துக்கான திருப்புமுனைகளை உருவாக்கின, திராவிடம் பேசிய திரைப்படங்கள். அந்த வரலாற்றை மீண்டும் வாசிக்கத் தருகிறது திராவிட சினிமா.

# ‘ரத்தக்கண்ணீர்’: ராதா என்றோர் அபூர்வம்!

■ வீ.மா.ச.சுபகுணராஜன்

படங்கள்-உதவி-:-ஞானம்







திராவிட சினிமாவின் போக்குகளில் ஒரு மாற்றான நிலைப்பாட்டைப் பேசியது **‘ரத்தக்கண்ணீர்’** திரைப்படம். இந்த வகைமையின் மாதிரியாக இருப்பதும் இந்தப் படம் மட்டுமே. அந்த மாற்றுப் போக்கினை பெரும்பாலும் நாடகங்களில் பிரதிநிதித்துவப் படுத்தியது நடிகவேள் எம்.ஆர்.ராதா அவர்களே!

வெகுகாலம் நாடக மேடைகளில் பெரும் வரவேற்புடன் அவர் நடத்தி வந்த **திருவாரூர் தங்கராசு** அவர்கள் எழுதிய ‘ரத்தக்கண்ணீர்’ நாடகம், அதே பெயரில் திரைப்படமாக்கப்பட்டு 1954-ஆம் ஆண்டு வெளிவந்தது. தயாரிப்பாளர் நேஷனல் பிக்சர்ஸ் **பி.ஏ.பெருமாள்**, இயக்குநர்கள் **கிருஷ்ணன்-பஞ்சு** ஆகியோர்.

அதாவது ‘பராசக்தி’ திரைப்படத்தின் மாபெரும் வெற்றி இந்தப் படத்தை எடுக்கத் தூண்டுதலாக இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. எதிர்பார்த்தபடியே ‘ரத்தக்கண்ணீர்‘ படமும் மாபெரும் வெற்றியடைந்தது.

## கள வேறுபாடும், திரை ஒற்றுமையும்

பெரியாரியச் சிந்தனைகளை முழுமையாக ஏற்றுக்கொண்டு திரையுலகில் இயங்கியவர் ராதா அவர்கள். தி.க., தி.மு.க., கருத்து மாறுபாடுகள், முற்றிலும் நேரடியான அரசியல் களச்செயல்பாடுகள் தொடர்பானவை. பெரியாரின் ‘கண்ணீர் துளிகள்’ எனும் சாடல், தினசரி நடவடிக்கை. பெரியாருடனான மோதலிலும் முன்னணியில் இருந்தவர் ‘பெரியார் பெருந்தொண்டர்’ கலைஞர் அவர்களே என்பதுதான் வேடிக்கை.

தி.மு.க.வினர் அரசியல் களச் செயல்பாடாக பெரியாரை விமர்சனம் செய்த போதும், கொள்கை தள மறுதலிப்பை ஒருபோதும் செய்ததில்லை. அவர்கள் எப்போதும் ‘பெரியாருக்காக’ தலைமையையே நிரப்பப்படாமல் வைத்திருந்தவர்கள் ஆயிற்றே!

கள அளவிலும் நேரடியான திராவிடர் கழக நிர்வாகிகள் தவிர்த்த **‘திராவிட’** ஆதரவாளர்கள், தி.மு.க.வுடன் பகை பாராட்டியதில்லை. கலைத்துறையில், குறிப்பாக திரைத்துறையில் இந்த இணக்கம் கூடுதலாகவே இருந்தது.

## பெரியாரிய கற்பு நெறிக்கு எதிர்ப்பு

கலைஞர் போன்ற திரைத்துறையில் மிகப் பிரபலமானவர்கள் தங்களது திரைப்படங்களில் பெரியாரையும், பெரியாரிய பகுத்தறிவுச் சிந்தனைகளையும் போற்றினர். ஆனால், பெரியாரிய கடும்போக்கு, பண்பாட்டு நிலைப்பாடுகளில் அவ்வளவு தீவிரம் காட்ட இயலவில்லை.

‘பராசக்தி’யில் தாலியில்லா திருமணம் நடந்தது, அதுதான் எல்லை. எம்.ஆர்.ராதாவும், ‘ரத்தக்கண்ணீர்’ திரைப்படமும் இன்னும் வெகுதூரம் நகர்ந்து ‘வாழ்வு மறுக்கப்பட்டு வஞ்சிக்கப்பட்ட மனைவிக்கு மறுமணம்’ செய்து வைக்கும் கணவன் என்ற புள்ளி வரை நகர்கிறது.

‘ரத்தக்கண்ணீர்’ திரைப்படமே ஒரு வகையில் பெரியாரிய கற்புநெறி எதிர்ப்பு வாதத்தை முன்வைத்தது. ‘கண்ணகி’, ‘கற்புநெறி’ போன்றவை பெரியாரியச் சிந்தனையில் உவப்பானவை இல்லை. திரைப்படத்தின் மிக முக்கியமான காட்சி, கைவிடப்பட்டு நிராதரவாக விடப்பட்ட மனைவி சந்திராவின் மனசாட்சியின் உரைதான்.

“பைத்தியக்காரி சித்திரம் வரைய முடியவில்லையே என்பதற்காக சுவரையே இடித்து விடுவதா? ... மாலையிட்ட கணவர் மாற்றாள் இல்லத்தில் சுகம் தேடித் திரிவதற்காக, நீ ஆலையிட்ட கரும்பாய் அல்லல்பட வேண்டுமா?... காதல் கணை தொடுக்காத உயிர்களும் இருக்கிறதா? ஏன் நீ உன்னையே ஏமாற்றிக் கொள்கிறாய்... உன் ஏங்கும் இதயத்தில் இன்பமழை பொழியச் செய்யும் ஒரு இளைஞனுடன் இணைந்து விடு. இது ஒன்றும் புதுமையானதல்ல. ......நீயும் நினைத்தால் பரத்தையர் போல வாழலாம். அந்த உலுத்துப் போன பாதையைக் காட்ட நான் வரவில்லை. அடிமைப் பெண்ணே புதுமையைக் காண வா... அஞ்சுவதும் நாணுவதும், ஆண்களிடம் கெஞ்சுவதுமாக வாழப் பழகிய பெண்கள் சமுதாயம்... இன்று அடிமைத்தளை அகற்றுவதும் அடக்குவதும் சமூகத்தை சாடுவதுமாகிவிட்டது”.

## பெண் விடுதலை பேசிய முதல்வி

ஆனால், சந்திராவின் தேர்வான ‘ஜீவகாருண்ய’ பாலு (மோகனின் நண்பன்), ‘இன்பத்தையும் துன்பத்தையும் ஒன்றாகக் கருத வேண்டியதே உன் போன்ற உத்தமிகளின் லட்சணம்’ என்பதோடு, மலரைப் பார் கொடியைப் பார், என்று சொல்லி விட்டு, ‘கவலைகள் உள்ளத்தைக் கவ்வும்போது கண்ணில்லாத குருடர்களுக்கு கல்வி போதி. அனாதைச் சிறுவர்களுக்கு அன்பு காட்டு’ என அறிவுரை வழங்குகிறான்.

அவளோ கொதித்து, ‘தவழும் கொடிகளும், தாவும் கிள்ளைகளும் துணை வேண்டுமென்றுதான் எனக்குச் சொல்கின்றன’ என்று சொல்லி, ‘பாலு நீங்கள் சம்மதித்தால் நாம் மணம் செய்து கொண்டு இணைந்து வாழலாம்’ எனப் பொட்டிலறைந்தது போல பேசுகிறாள். தமிழ்த் திரைப் படத்தில் இந்த ரீதியில் கருத்தியல் சார்ந்து ‘பெண் விடுதலை’ பேசிய முதல் பெண், சந்திரா மட்டுமே. அதையே மெய்யாக்குகிறான், திரைப்படத்தின் இறுதிக் காட்சியில் மோகனசுந்தரம்.

**மாலையிட்ட கணவர் மாற்றாள் இல்லத்தில் சுகம் தேடித் திரிவதற்காக, நீ ஆலையிட்ட கரும்பாய் அல்லல்பட வேண்டுமா?**

## ஆணாதிக்க மனத்தின் வெளிப்பாடு

ஆனால், திரைப்படத்தில் ஒரு தீவிரமான உள்முரண் இயக்கம் ஒன்று உள்ளது, என்பதை மறுப்பதற்கில்லை. விலைமகளிர் குறித்த கடுமையான சொற்கள் காந்தா மீது பலமுறை வீசப்படுகிறது. இத்தனைக்கும் காந்தா, மோகனசுந்தரத்திடம் முற்றிலும் இரக்கம் காட்டாதவள் இல்லை. பெருநோய் கண்ட பிறகும் ஆணாதிக்க மேலாதிக்கமும், காதலுறவும் கொள்ள முனைபவனையே அவள் வெளியே துரத்த நிர்பந்திக்கப்படுகிறாள். அதுவரை தன் தாயிடம் அவனுக்காகப் பரிந்து பேசவே செய்கிறாள். அவனைப் பராமரிக்கவும் முன் வரவே செய்கிறாள்.

சிலப்பதிகாரக் காதையை மாற்றிப் பேச முனைந்த படத்தில் காந்தாவைப் பழிக்க ‘நீ என்ன மாதவி என உன்னை நினைத்துக் கொண்டாயா? தனது வாழ்வை புத்த பிரானின் பணிக்கு அர்ப்பணித்த மாதவி எங்கே... நீ எங்கே..?‘ எனச் சாடுகிறது. அதாவது சிலம்பின் மீதான விமர்சனப் பார்வையில் கண்ணகி, மாதவி எனும் ஆளுமைகளைச் சாடாமல், பெண்ணின் மீது சுமத்தப்பட்ட கற்புநெறி என்ற புள்ளியில் நிறுத்துகிறது. ஆனாலும், காந்தா மீது பொழியப்படும் வசைமாரிகள் உள்ளே ஒளிந்து கொண்டுள்ள ஆணாதிக்க மனத்தின் வெளிப்பாடாகவே தெரி கின்றன. கூடுதலாக, தன் போக்கில் பெரியாரியக் கருத்தியலைக் கையாண்ட எம்.ஆர். ராதா அவர்களின் செதுக்கப்படாத ஆளுமையின் விளைவு எனவும் கருத வாய்ப்புள்ளது.

எம்.ஆர்.ராதா எனும் நடிப்பாளுமை, தமிழ்த் திரையில் முன்மாதிரிகள் அற்ற தனித்துவமானது. அவரது பாத்திரப் படைப்புகளே சவாலானவை. அவரது மிகை நடிப்பும் (EXTREME STYLISED ACTING) வசன உச்சரிப்பு முறையும் (அவரது கட்டுப்பாட்டில் இயங்காத) அவரது பாத்திரத்தின் சாத்தியங்களை எல்லையற்று விரித்தது என்பேன். எதிர்மறைப் பாத்திரமாகப் பேசப்படும் சுயமரியாதைச் சிந்தனையும், பகுத்தறிவுவாதமும் அவரது மேற்கண்ட இரு குணாம்சங்களால், அவற்றின் நோக்கத்தை நிறைவேற்ற உதவியது என்பது என் பார்வை.

ஒரு பெரும் பணக்காரராக, ‘ஏண்டி, உன் மகள் அந்த ஜமீந்தாரக் காதலிப்பான்னு பார்த்தா, கேவலம் ஜமீந்தார் டிரைவரோட சுத்துறாளாமே! ஜமீந்தார்ன்னா என்ன ஜாதின்னாலும் பரவாயில்ல. கூலிக்கார குப்பத்துப் பயலுக என்ன ஜாதியோ’ என்பார். ஆத்திகராக, ‘பொழைக்கத் தெரியாத பிச்சைக்காரப் பயல்க சாமியில்ல, பூதமில்லன்னு ஒலறுவானுங்க. நமக்குத் தெரியாதா அது. நாம கோவிலில் செய்யிற ஃப்ராடுதனத்த தினமும் வேடிக்கை பாக்குதே சாமி‘ என்று அம்பலப்படுத்துவார். அதுதான் எம்.ஆர்.ராதா எனும் அபூர்வம்.

...படம் விரியும்

---

## தகவல் திருட்டு-கவலைப்படாத ஒன்றிய அரசு!

**81.5** கோடி இந்தியர்களின் பாஸ்போர்ட், ஆதார், தொலைபேசி எண், நிரந்தர மற்றும் தற்காலிக முகவரி உள்ளிட்ட விவரங்கள் திருடப் பட்டுள்ளன. இது இந்தியர்களுக்கு மாபெரும் ஆபத்தாக முடியும். இது நாட்டையே கைப்பற்றியது போன்ற ஒரு நிகழ்வு. இந்தத் திருட்டு எப்படி நடந்துள்ளது எனில், கொரோனா காலகட்டத்தில் ஐ.சி.எம்.ஆர் (ICMR - Indian council for medical and research) என்ற அமைப்பு இந்தியர்களின் தகவல்களைத் திரட்டியது. அந்த அமைப்பின் தகவல் சேமிப்பு மையத்தில் இருந்து, இந்தத் திருட்டு நடந்துள்ளது. இதனைக் கூடக் காப்பாற்ற முடியாமல் மோடி தலைமையிலான அரசு என்ன செய்கிறது என்று தெரியவில்லை.

இந்தத் திருட்டு ஒவ்வொரு தனிமனிதனிடமிருந்து நடத்தப்படவில்லை. மனிதர்களிடமிருந்து ஒட்டு மொத்தமாகச் சேகரிக்கப்பட்டு திருடர்களுக்கு வசதியாக வைத்திருந்திருக்கிறது ஒன்றிய அரசு. எல்லாவற்றிலும் மௌனம் சாதிப்பது போல் இதிலும் மௌனம் சாதிக்கிறது மோடி அரசு. இந்தக் கவனக்குறைவான நடவடிக்கைக்கு வழக்கம் போல் யாரும் பொறுப்பேற்கவில்லை. பிரதமர் மோடியும் இதைப் பற்றிக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. எங்கே போகும் இந்தப் பாதை?

**-பத்திரிகையாளர்**
**லோகநாதன் தங்கசாமி பதிவு**

---

## ஃப்ளாஷ்பேக்



### நவம்பர்-3 !

1966-ஆம் ஆண்டில், சென்னை பச்சையப்பன் கல்லூரியின் தி.மு.க செயலாளராக இருந்தவர் கே.ஏ.நடராசன். பொருளாதாரத்தில் முதுகலை படித்து முடித்த பின், மாநிலக் கல்லூரியில் துணைப் பேராசிரியராக 1973-இல் இணைந்தார். 1977-ஆம் ஆண்டில் கலைஞர், அண்ணா நகர் தொகுதியில் போட்டியிட்டபோது, தி.மு.க. சார்புடைய கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள் இணைந்து கலைஞரின் வெற்றிக்காக 45 நாட்கள் பணியாற்றினோம். எங்களோடு நடராசன் இணைந்து தேர்தல் பணியாற்றினார். 1980-ஆம் ஆண்டு தேர்தலிலும் கலைஞருக்காக கல்வியாளர்கள், மாணவர்கள் தேர்தலில் பணிபுரிந்தோம். அந்த ஆண்டில் நடராசன் அவர்களின் தம்பி முருகானந்தத்தின் திருமண நிகழ்வினை ஈரோட்டில், தலைமையேற்று நடத்தி வைக்க, கலைஞரைக் கேட்டிருந்தோம். அவர் அளித்த தேதியின்படி, நவம்பர்-3 இல் சுயமரியாதைத் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. இதில் மறைந்த தி.மு.க.வின் பொருளாளர் சாதிக் பாட்சா, ஆசிரியர் வீரமணி, 1980-ஆம் ஆண்டில் அ.தி.மு.க.விலிருந்து விலகி, நாஞ்சிலாருடன் தி.மு.க.வில் இணைந்த சுப்புலட்சுமி ஜெகதீசன் ஆகியோருடன் நானும் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினேன். அண்மையில் பேராசிரியர் நடராசன் மறைந்தார். அவரது குடும்பத்தினர் வழங்கிய புகைப்படம் இது.



நாகநாதன்

**-பேராசிரியர். மு.நாகநாதன், தமிழ்நாடு மாநிலத் திட்டக்குழு முன்னாள் துணைத் தலைவர், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண்: 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

---

## கருவூலம்


### கழகப் படிப்பகங்கள்!

**1957-ஆம் ஆண்டு தேர்தலில் கழக முன்னோடிகள் அனைவரும் போட்டியிட்டனர். தங்களின் தேர்தல் பிரச்சாரத்தையும் கவனித்துக் கொண்டு, இதர தொகுதிகளுக்கும் சுற்றுப்பயணம் செய்து பிரச்சாரம் செய்தனர். கழகத்தின் படிப்பகங்கள் தேர்தல் பிரச்சார மையங்களாகத் திகழ்ந்தன. கழகத்தின் படிப்பகங்கள் மக்களிடம் தொடர்பு கொள்ள மிக எளிதாகப் பயன்பட்டன.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம்

289




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli




கலைஞர் 100 1924 - 2023

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 85– திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஐப்பசி 17 – வெள்ளிக்கிழமை 03 நவம்பர் 2023 – சென்னை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 85 : Thiruvalluvar Year - 2054 - Ippasi - 17 - Friday 03 November 2023 - Chennai 8 Pages சிறப்பிதழ்

# காலத்தை வெல்லும் கருத்தோவியம் கலைஞர் கவிதைகள்



முத்தமிழ் அறிஞர் கலைஞரைப் போல், உலக அரங்கில் பன்முக ஆற்றல் வாய்ந்த தலைவராக வேறு எவரையும் குறிப்பிடுவது அரிதாகும். அரசியல் மேதை - கலைக்குரிசில் - இலக்கிய வித்தகர் - சமூகநீதிக் காவலர் - என இப்படிப் பல்திறனும் வாய்க்கப் பெற்றவர். கலைஞர் இலக்கியத்திலும், நாவல், சிறுகதை, பாடலாசிரியர், பேச்சாளர், இதழாசிரியர், வசனம் - கட்டுரை - கவிதை என அனைத்துத் துறைகளிலும் உச்சம் தொட்ட படைப்பாளியாகத் திகழ்பவர் கலைஞர்!

தன்னலம் கருதாது, பிறர் நலம் பொதுநலமே நாடி, தன் படைப்புகளிலெல்லாம் மக்கள் மேம்பாடு, வாழ்வியல் முன்னேற்றத்திற்கான கருத்துகளை வாரி வழங்கியஆளுமைபடைத்தவர்கலைஞர். இந்த ஆளுமை அவரின் கவிதைகளில் கொடிகட்டிப் பறக்கின்றது.

கலைஞர் தன் பதினாறாம் அகவையில் ஏழாம் வகுப்புப் படித்தபோதே இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு தமிழ்க் கொடியைக் கையில் பிடித்து,

**“ஓடிவந்த இந்திப் பெண்ணே கேள் - நீ**
**தேடி வந்த கோழையுள்ள நாடு இதல்லவே”**

என்று முழக்கமிட்ட தமிழ்ப்போராளி, கவி ஆழி கலைஞர்!

சீரிளமைத் திறமும், பெருவளமும் மிக்க தமிழ்மொழிக்கு கலைஞர் தம் கைவண்ணக் கவிதைகள் செழுமை ஊட்டி உள்ளன.

கவிதை என்பது,

**துடித்தெழும் உணர்ச்சியில்**
**வெடித்தெழும் ஊற்று!**
**கலையெழில் வழிந்திட முளைக்கும் நாற்று**
**கன்னல் மொழியில் மணக்கும் காற்று!**

என்று கவிதைக்கு இலக்கணம் கூறுகிறார் கலைஞர்.

இசைஞானி இளையராசா கலைஞரின் கவிதையைப் பற்றிக் கூறும்போது,

**தானே எழுத்தாகி தானே சொல்லாகி**
**தானே பொருளாகி தானே யாப்புமாகி**
**தானே அணியுமாகி மொழியாய் மொழிவளமாய்**
**கவிதையாய் தன்னைத் தானே**
**எழுதிக் கொண்ட**
**அழகான கவிதை கலைஞர்**

என்கிறார். ஆக, கலைஞர் ஒரு பிறவிக் கவிஞர். கவிதையின் ஊற்றுக்கண்கள் கருவிலே திரு என் பார்களே அப்படி ஒரு வரலாறு கலைஞர் கவித்துவம்!

கலைஞரின் கவிதைகள் கோடிக்கணக்கான மக்களின் இதயத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் வல்லமை வாய்ந்தன. அவரின் இசைப்பாடல்கள் தமிழ் அறிந்தவர்களை கட்டிப் போடும் தகுதியன.

**“காகித ஓடம் கடல் அலை மீது**
**போவது போல மூவரும் போவோம்”**

**“வாழ்க்கை என்னும் ஓடம் வழங்குகின்ற பாடம்**
**“மானுடரின் மனதினிலே மறக்கவொண்ணா வேதம்”**

**“என்னருமை கண்ணுகுட்டி”**

போன்ற பாடல்கள் காலம் கடந்தும் ஒலிக்கும்.

கலைஞரின் கவிதைகள் பல மாயம் புரிந்து மயக்கவல்லன. கலைஞரின் கவிதைகளில் உவமை உருவகங்கள் தானே வந்து விழும்.

**உழவனோர் மன்னன்**
**நாற்று முடியிருக்கும் அவன் தலையில்**
**உழவன் ஓர்வீரன் என்றும்**
**போர் இருக்கும் அவன் களத்தில் வைக்கோல்போர்**
**உழவனோர் ஓவியன்**
**வயல்கள் அனைத்தும் அவன் வரைந்த சித்திரம்**
**உழவனோர் தெய்வம்**
**உயிர்களைக் காப்பதால்**

உழவரை வைத்து உருவகமாக கலைஞர் வடித்த சொல்லோவியம்.

கணவனை இழந்த கைம்பெண்களைப் பற்றி கலைஞர் பாடும்போது,

**கண்ணுக்குள் பாவைபோல**
**உருண்டிடும் உள்ளம் கைம்**
**பெண்ணுக்கு இருக்கும்**

என்ற உவமை வளம் கொழிக்கின்றது.

பேரறிஞர் அண்ணாவைப் பற்றி பாடாத கவிஞர்கள் இருக்க முடியாது. ஆனால் 09.02.1969 அன்று சென்னை வானொலியில் **“இதயம் தந்திடு அண்ணா”** என்ற தலைப்பில் எதையும் தாங்கும் இதயம் படைத்த அண்ணாவைப் பற்றி பாடிய கவிதை வீர வணக்கத்திற்கு நிகராக வேறு எந்தக் கவிதையையும் சொல்ல முடியாது.

**“அண்ணனுக்கோர் சிலை**
**சென்னையிலே வைத்தபோது**
**ஆட்காட்டி விரல் மட்டும் காட்டி நின்றார்**
**ஆணையிடுகிறார் எம்அண்ணா என்றிருந்தோம்**
**அய்யகோ; இன்னும்**
**ஓராண்டே வாழப் போகிறேன் என்று அவர்**
**ஓர்விரல் காட்டியது இன்றன்றோ புரிகிறது!**
**எம்அண்ணா இதய மன்னா...**
**படைக் கஞ்சாத்தம்பி உண்டென்று**
**பகர்ந்தாயே;**
**எமை விடுத்துப் பெரும்பயணத்தை**
**ஏன் தொடர்ந்தாய்?”**

என்று உணர்ச்சி பொங்கப் பொங்கக் கவிதைக் கண்ணீர் கலைஞர் வடிக்கிறார்.

நிறைவாக **“இரவலாக உன் இதயத்தைத் தந்திடண்ணா, நான் வரும்போது கையோடு கொணர்ந்து அதை உன் காலடியில் வைப்பேன் அண்ணா”** என்று பாடும்போது கல்நெஞ்சமும் கரைந்து விடுகிறது.

கலைஞரின் கவிதைகளில் வாழ்வியல் சிந்தனைகள், சமுதாயச் சிந்தனைகள், செம்மொழிச் சிந்தனைகள் அனைத்தும் ஆர்ப்பாட்டம் செய்யும். இனிமை, எளிமை, தெளிவு, சுவை, நையாண்டி எல்லாம் துள்ளி விளையாடும்.

தமிழ்நாட்டின் நூற்றாண்டுக்கால அரசியல், கலை, இலக்கியத்தின் உன்னதம் தொட்ட கலைஞர் நாடகம், படத்துறை வசனம், உரைநடையில் கூடக் கவிதை நடைகள் நாட்டியமாடும். கவித்துவமே உருவான கலைஞர் காலம் கடந்தும் வாழ்வார் அவர் கவித்திறத்தால்.



பெருங்கவிக்கோ
வா.மு.சேதுராமன்

மக்களாட்சியின் உயிர்த்துடிப்பான பொதுவுடைமை பற்றி கலைஞர் விளக்குகிறார்.

**“இனிய நாட்டில் இல்லார் இல்லை**
**நல்லார் மீது பாய்கின்ற**
**வல்லார் இல்லை**
**எங்கும் புதுமை எதிலும் புதுமை**
**அனைத்தும் பொதுவுடைமை”**

எனப் பாடுகிறார். மேலும்,

**“ஏழையர் சிரிப்பே இமயம் என்பேன்**
**எல்லார்க்கும் எல்லாம் கிடைத்திட உழைப்போம்**
**வையம் தழைக்க வறுமை தொலைப்போம்”**

என்று சமநீதி முழக்கமிடுகிறார்.

சமநீதிக் காவலர் **முதன்மை முதல்வர் முத்து வேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்களின் இன்றைய ஆட்சி கலைஞர் கவிதைப் பாதையில் **“எல்லோர்க்கும் எல்லாம்”** எனத் தடை பல கடந்து தந்தை அடிச்சுவட்டில் இன்று வெற்றி நடை போடுகிறது.

கலைஞர் கவியரங்குகளுக்குத் தலைமை தாங்கிப் பாடும்போது கவிஞர்களை அறிமுகம் செய்து அவர்கள் பாட்டுத்திறத்தை உயர்த்திப் பாடும் பாங்கே தனித்த பேற்றுடைத்தாகும். பழம்பெரும் **கவிஞர் கொத்தமங்கலம் சுப்பு** அவர்கள், கலைஞர் தலைமையில் பாடும்போது,

**“கொத்தமல்லிக் கொப்பு குழம்பிலே மணக்கும்**
**கொத்தமங்கலம் சுப்பு குழம்பாமலே மணக்கும்”**

எனப் பாடிச் சிறப்பித்தார் கலைஞர். கவியரசர் கண்ணதாசனை,

**“கழித்தல் கணக்கில் இருந்த கண்ணதாசன் - இன்று**
**கூட்டல் கணக்கில் இணைந்து விட்டார் நம்மோடு”**

என்று பாடி தன்னோடு மீண்டும் இணைந்தமைக்கு மகிழ்வூட்டினார் கலைஞர்.

கலைஞர் தலைமையில் பாடிய கவிக்கோ அப்துல் இரகுமான், கவிப்பேரரசு வைரமுத்து உள்ளிட்ட அனைத்துக் கவிஞர்களையும் பாடிப் பாராட்டியுள்ளார்.

என்னையும் ஒரு கவி அரங்கில் அறிமுகப் பாப் பாடி அழைத்தார். அக்கவிதை :

**பெருங்கவிக்கோ சேதுராமன்**
**கவிமழை பொழிய வருகிறார்**
**வெளிநாட்டைச் சுற்றிச்சுற்றி**
**தமிழின் ஒளிகாட்டும் தமிழன்!**
**இன்னும் ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு**
**ஒரு தமிழ்க்குழந்தை சொல்லும்**
**இவரைப் பார்த்துத்தான்**
**இராவணன் மீசைவைத்துக்**
**கொண்டான் என்று.**

கலைஞரின் கவிதைகள் காலம் சொல்லும் கவிதைகள் - காலம் கடந்து வாழும் கவிதைகள் - காலத்தை வெல்லும் கருத்தோவியம்! ஊழி பெயரினும் தான்பெயராத் தனித்துவமாக, தனித்தவமாக வாழும் - மணம் கமழும் காப்பியக் கவிஞர் கலைஞர்!



## மக்களாட்சி!

மக்களாட்சித் தத்துவம்; மத பேத பித்துக் கொண்ட மதோன்மத்தர்களிடம், சர்வாதிகார வெறி பிடித்தோரிடம் சிக்கிக் கொண்டால், அதை அந்தக் கொடியவர்களிடமிருந்து விடுவிக்கும் வரையில் “ஜனநாயகத்துக்கு சுதந்திரம் கிடையாது” என்ற உண்மையை ஒவ்வொரு குடிமகனும் உணர்ந்தால்தான், ஜனநாயகம் உயிர் பெற்றே இருக்க முடியும்! இல்லையேல் அதன் உடலைத்தான் நாறிப்போக விடுத்து நாம் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும்.

**- கலைஞர்**



## வாக்குச் சீட்டின் வலிமை !

மக்கள், தங்களை வெறும் வாக்காளர்களாக மட்டும் கருதிக் கொள்ளாமல்; இந்த நாட்டின் சிற்பிகள், சமுதாயத்தின் காவலர்கள், எதிர்காலத்தை நிர்ணயிக்கும் ஏந்தல்கள் சுருக்கமாகச் சொன்னால், பாரதிமொழிப்படி “எல்லாரும் இந்நாட்டு மன்னர்” என்பதை நிலைநாட்ட வேண்டும், நிலைநாட்டியே தீர வேண்டும்.

அப்போதுதான், பழுதுபட்டுக் கொண்டிருக்கும் ஜனநாயகம், ஆழ உழுது விளைந்த கதிர் குலுங்கும் கழனியாக மாறும்!

**- கலைஞர்**

# பேச்சுக் கலையின் பிதாமகன்!



கவிப்பேரரசு
வைரமுத்து

என் ஒவ்வொரு வெளியீட்டு விழாவுக்கும் கலைஞரையே நான் அழைத்தது அவர் முதலமைச்சர் என்ற செங்கோலுக்காக அல்ல. என்றும் தாழாத அவர் எழுதுகோலுக்காக. என் விழாக்களுக்கு அவரை அழைக்கும்போது அவர் முதல்வராக இருந்ததும் இல்லாதிருந்ததும் வெறும் கால வித்தியாசமே தவிர வேறல்ல. 1990 இல் மதுரையில் நடைபெற்ற என் 5 நூல்களின் வெளியீட்டு விழாவுக்கு அவரை நான் அழைத்தபோது 'விழா நாளில் நான் முதலமைச்சராக இருக்க மாட்டேனே' என்றார்.

'நான் தேதி கேட்பது முதலமைச்சரிடம் அல்ல; கலைஞரிடம்' என்றேன். சிறிதாய்ச் சிரித்தார். என் பள்ளி நாட்களில் நானும் ஒரு படைப்பாளியாய் மலர்வதற்கு எனக்கிருந்த முதல் உந்து சக்தி அவர் என்ற நன்றியும் தமிழ் இன மீட்டெடுப்புப் போராளி அவர் என்ற பெருமையும் நிபந்தனையற்ற 30 ஆண்டுகாலப் பாசமும்தாம் நான் அவரைச் சிரமப்படுத்தியதற்கும் அவர் என்னைப் பெருமைப்படுத்தியதற்குமான காரணங்கள்.

கலைஞரின் பேச்சுக்கலை ஆய்வாளர்களின் ஆழ்ந்த கவனத்திற்கு உள்ளாக வேண்டியது.

•அவர் குரலில் கவிந்திருக்கும் கரகரப்பான காந்தம் ஒருநாளில் இருநாளில் உண்டானதல்ல. அரை நூற்றாண்டுக்கும் மேலாகத் தமிழ்நாட்டு மக்களின் காதுகளில் கூட்டுவித்த மின்சாரம் அது.

•ஒரு மேடையில் தான் தயாரித்த தமிழைப் பரிமாறுவதற்கு முன்பாக, சார்ந்திருக்கும் சபையின் மீது கண்ணும் காதும் கவனமும் செலுத்தி உடனடி நகைச்சுவை உற்பத்தி செய்வார்.

•மேடையிலும் முன்வரிசையிலும் அரங்கிலும் அமர்ந்திருக்கும் பெரியவர்கள் - நண்பர்கள் - எத்தனை பேரானாலும் அவர்களை அவர் விளிப்பதற்குச் சலித்ததில்லை.

•தனது ஒவ்வொரு பேச்சுக்கும் அவர் ஓர் உச்சம் தயாரிப்பார். சபை, தளர்ந்த சபையாக இருந்தால் அந்த உச்சத்திலிருந்து தொடங்குவார். ஆர்வம் பொங்கும் சபையாக இருந்தால் அந்த உச்சத்தில் சென்று முடிப்பார்.

•பேச்சைத் தொடங்கிய மூன்றாவது நிமிடத்தில் அவர் மடியில் விழும் மன்றம், அவர் வணக்கம் சொல்லும் வரை தன்னோடு இணக்கமாக இருக்குமாறு பார்த்துக் கொள்வார்.

**•தன் கொள்கைக்கும் அனுபவத்திற்கும் அருகில்வரும் மேற்கோள்களை மட்டும் வளைத்துப் பயன்படுத்துவார். சில நேரங்களில் கூட்டு வாக்கியங்கள் முடியாமல் முற்றுப் புள்ளி தேடி அலையும்போது, வாக்கியம் சரியாக முடிக்கப்படுமா என்ற சஞ்சலத்தில் சபையைத் தத்தளிக்க விடுவார். ஆனால் தொடங்கும்போதே மூளையில் முடிந்து வைத்திருந்த எழுவாயை மறக்காமல் சரியான வினைமுடிவு செய்து வியப்பூட்டுவார்.**

•'கேள்விகளை நேசிப்பவனே பேச்சாளன்' என்ற இலக்கிய மொழிக்கேற்ப ஏற்கெனவே எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு விடைவிரிப்பார் அல்லது விரும்பும் விடைகளுக்கேற்ற வினாக்களை அவரே எழுப்பிக் கொள்வார்.

•எந்தப் பேச்சாளனும் தன் பேச்சின் மையப் பகுதியில் தொய்வைச் சந்திப்பான். சபை எங்கு தொய்கிறதோ அங்கு ஒரு நகைச்சுவை தெளித்து சபையை உலுக்கிச் சரிசெய்து மீண்டும் தன் கருத்துக்குப் பக்கத்தில் காதுகளை வசூலித்து வைத்துக் கொள்வார்.

•ஒரு நதியை உயிரோட்டமாக வைத்திருப்பது புதிய தண்ணீர். ஒரு பேச்சாளனை உயிர்ப்பாக வைத்திருப்பது வாசிப்பு. தான் சமகால வாசகன் என்பதற்கு எந்த



மேடையிலும் அவர் தவறாமல் சான்றளித்திருக்கிறார். உற்சாகத்தை விதைத்துக் கொண்டே ஓர் அரங்கில் நுழைவார். இதயங்களை அறுவடை செய்து கொண்டு வெளியேறுவார். மேலைநாடுகளில் பேச்சு என்பது கருத்துக்களை மட்டுமே வெளிப்படுத்தும் ஒரு சொற்கூட்டம். தமிழ்நாட்டு மரபில் பேச்சு என்பது உண்மையை மீறாத நாடகம்.

உணர்ச்சிக்கும் கருத்துக்கும் ஏற்ப எண்வகை மெய்ப்பாடுகளையும்தன்மேனியில்வெளிப்படுத்தும்உடல்மொழி உடையவன் பல்வேறு பாத்திரங்களின் தேவையை ஒருவனாகவே நிறைவு செய்து காட்டுகிறான்.

காட்சிகள் மாறும் திரைப்படத்திற்கு ஒரு மணி நேரம் உட்கார முடியாத மக்களைக் கூட உண்மையும் உணர்ச்சியும் மோகனமொழியும் மிக்க ஒரு பேச்சாளன் நூறு நிமிடங்கள் வரையில் கட்டிப்போட்டு விடுகிறான்.

ஆரவாரமில்லாத ஆனால் அழுத்தமான மெய்ப்பாடுகளால் தன் ஒலிக்கூட்டத்திற்குக் காட்சி வடிவம் கொடுத்துவிடுவார் கலைஞர்.

மேடையில் உணர்ச்சிமயமான சில தருணங்களில் அவர் அழுத பொழுதுகளை அடுத்த நாற்காலியிலிருந்து உற்று நோக்கி உருகியிருக்கிறேன். ஒருவன் செயற்கையாய்ச் சிரிக்க முடியும்; செயற்கையாய் அழ முடியாது.

•மேடைக்கென்று அவர் இலக்கண மொழியையே எடுத்தாளுவார். தேவை கருதி மட்டுமே அரிதாக வட்டார வழக்குக்கு வருவார்.

•தனது பேச்சின் நாளையத் தலைப்புச் செய்தி என்ன என்பதை ஊடகங்களுக்குத் தன் குரலின் அழுத்தத்தால் கோடிட்டுக் காட்டி விடுவார்.

• இலக்கிய மேடையில் அரசியலையும், அரசியல் மேடையில் இலக்கியத்தையும் சொக்கத்தங்கத்தில் செம்புகலக்கும் பொறுப்புள்ள பொற்கொல்லரைப் போல அளவாக ஆனால் அழகாகக் கலப்பார்.

•அவரது சொற்பொழிவுக்குப் பிறகு மறு வாசிப்புக்கு உள்ளாகும் எனது கவிதைகளில் சில புதுப் பொருள் பெற்றுப் பொலிவதை உணர்ந்திருக்கிறேன். மலையில் மழைபெய்து பொங்கிவரும் புதுவெள்ளம் செந்நீராய் ஓடுவதைச் சட்டையும் கால் சட்டையும் நனைய நனையக் கரையோரம் நின்று ரசித்திருக்கிறேன்.

'ஒரு நதியின் விதி' என்ற கவிதையில்,

**"மலைக் கிழவி போட்டுத் துப்பிய**
**தாம்பூலச் சாறுபோல**
**செஞ்சாந்துக் குழம்பாய்ச்**
**சிவப்பாய் ஓடியது"** என்று எழுதியிருந்தேன்.

'தமிழுக்கு நிறம் உண்டு' வெளியீட்டு விழாவில் இந்தக் கவிதைக்கு நான் எண்ணாத உரை ஒன்று எழுதினார்.

**"மலைக்கிழவி போட்டுத் துப்பிய தாம்பூலச் சாறாம் ... ஏன் 'மலைக்கிழவி' என்கிறார்...? 'மலைக்குமரி' என்று ஏன் சொல்லவில்லை தெரியுமா...? மலைக்குமரி தாம்பூலம் மாற்றிக் கொள்வதாக இருக்கும். எவ்வளவு எச்சரிக்கையாகச் சொல்கிறார் பாருங்கள்...."** என்று அவர் பேசிய போது இவர், 'மகாப் பொல்லாத ஆள்' என்று மனதுக்குள் சொல்லி மகிழ்ந்து கொண்டேன்.

கலைஞர் எத்தனையோ கவிஞர்களை அடையாளம் காட்டியிருக்கிறார். வளர்த்திருக்கிறார். ஆனால், பலகவிஞர்களோடு அவருக்கு நேர்ந்த அனுபவம் பதிவு செய்யும்படியாக இல்லை. ஆனால் எனக்கு அப்படி எதுவும் நேரவில்லை. ஒரு மெல்லிய ஊடலில் ஒருவாரம் பேசாமலிருந்ததைத் தவிர எனக்கும் அவருக்கும் எந்தக் கசப்பும் இருந்ததில்லை.

காரணம், என் சுதந்திரத்தில் சுயமரியாதையில் அவர் தலையிட்டதில்லை. அவர் உயரம் எவ்வளவு என்று ஏணி வைத்துப் பார்க்க நான் என்றும் முயன்றதில்லை. அதனால்தான் என் தமிழை மனந்திறந்து பாராட்ட அவர் தயங்கியதே இல்லை.

தமிழ்நாட்டில் ஒரு படைப்பாளி இன்னொரு படைப்பாளியை மிச்சமில்லாமல் பாராட்டுவதில்லை. கலைஞரையும் என்னையும் பொறுத்தவரை அந்தப் பழி எங்கள் இருவர் மீதும் இருந்ததில்லை.

"யானை போல் இருந்து - அதன் வால்போல் இளைத்த நதி" என்ற வரியை மேற்கோள் காட்டி 'அபாரமான கற்பனை' என்று பாராட்டியதோடு முடித்துவிடாமல் 'நீங்கள் ஐந்து நிமிடம் கைதட்டலாம்' என்றார்.

அப்படியே அரங்கம் கைதட்டியது. **பாறைபோல் உறுதியான புகழுடையவன் மட்டுமே இப்படிப் பாராட்டுவான். என் எல்லாப் படைப்புகளுமே உயர்ந்தவை என்று சொல்ல மாட்டேன். ஆனால் உயர்ந்த படைப்புகளும் உண்டு என்பேன். அந்த உயரம் மேலும் மேலும் உயரம் பெற்றதற்குக் கலைஞரின் உரைகள் பெருங்காரணம் என்று நான் நம்புகிறேன்.** கர்ப்பிணியின் முதுகுத் தண்டில் சில்லென்ற தண்ணீர் தெளிக்கப்படும் போது அவள் சிலிர்க்கும் சிலிர்ப்பில் உள்ளிருக்கும் குழந்தை உதறிப் புரளுமாமே.... அப்படித்தான் படைப்பாளியின் மீது விழும் பாராட்டு படைப்பை நகர்த்துகிறது.

கலைஞரின் பாராட்டு அப்படி என்னை உந்தி எழவைத்து முந்தி ஓட வைத்திருக்கிறது.



## உயிரினும் மேலான மானம் !

மண்ணையிழந்தான், மாளிகையிழந்தான், மாட்டிக் கொண்டான் சிறைச் சாலையில் என்ற நிலையிலும், தவித்த வாய்க்குத் தாகம் தீர்த்திடத் தண்ணீர், தக்க நேரத்தில் சிறையில் தந்திடவில்லை என்பதற்காகத் தனது மானமே போயிற்றென்று செத்துப் போனானே 'சேரமான் கணைக்கால் இரும்பொறை' என்ற தமிழன்; எளிதில் உச்சரிக்க முடியாத அந்தப் பெயரை இன்னமும் நினைவில் வைத்துக்கொண்டு அவனைப் போற்றுவதற்குக் காரணம்; தோல்வியினால் அவன் துவண்டுவிட வில்லை என்பதும், மானத்தை உயிரினும் மேலாக மதித்தான் என்பதும்தானே !

- கலைஞர்




## அறிவைப் பறி கொடுப்பதா?

இராமனுக்கு முடிசூட்டு விழா நடத்த நல்ல நாள், நல்ல நேரம் எது என்று பார்த்துக் கணித்துக் கொடுத்தவர் சாதாரணமானவர் அல்ல. சாத்திரங்களைக் கரைத்துக் குடித்த சகலகலா வல்லவர்.

வசிஷ்டர் அவர் குறித்த நாளில், நாடாளச் செங்கோல் ஏந்த வேண்டிய இராமன்; மரவுரி தரித்து மனையாள் சீதையுடனும், இளையோன் இலக்குவனுடனும் காடேக நேரிட்டதே என்பதை இராமாயண இதிகாசத்தில் படித்த பிறகும், ஆரூடம், சோதிடம், நாள் நட்சத்திரம், சித்த யோகம், அமிர்த யோகம், மரண யோகம் என்று பஞ்சாங்க நம்பிக்கையில் அறிவைப் பறி கொடுத்துவிட்டு அலைகின்ற மானுடர் இருக்கத்தான் செய்கின்றனர்.

- கலைஞர்

## குருகுலம்!



பெரியார், அண்ணா என கொள்கை போதிக்கும் குருமார்களின் மாற்றத்தை என்னால் ஏற்படுத்திக் கொள்ள முடிந்தது. இருவரும் ஒரே விதமான பகுத்தறிவு மற்றும் இனமான உணர்வு, பாடத்தைத்தான் போதித்தார்கள். ஆனால் அவற்றை நான் ஆசிரியனாக இருந்து கற்பிக்கும் வாய்ப்பு ஏற்படின் அப்போது கடைப்பிடிக்க வேண்டிய வழியை இருவரும் இருவிதமாகச் சொல்லிக் கொடுத்தார்கள்.

நோய் போக்கிட ஒரே மருந்து - தேனில் குழைத்துத் தந்திடும் முறையை அண்ணாவும் -

எதிலும் குழைக்க வேண்டாம்; அப்படியே சூரணத்தை விழுங்கிடுக
என்று பெரியாரும் சொல்லிக் கொடுத்தார்கள்.
இரண்டு முறைகளுமே குருகுலத்துடன் நெருங்கியிருந்து
கற்றுக் கொண்டது; மருந்து செய்வது ஒரே முறைதான் !

அதை அருந்தும் முறைகள்தான் இருவகை ! எனவே 'குருகுலம்' என்பது பழைய பாணி எனத் தோன்றினாலும்; நம்மை

'அறிவாயுத பாணி'களாக ஆக்கவல்ல சிறப்புப் பயிற்சி தரக் கூடியதாகும்; என் அனுபவத்தில் கண்ட உண்மை இது !

- கலைஞர்

## கலைஞரின் கவிதையில்

# ஒரு காவியப் பரிமாணம்

கவிப்பேரருவி
ஈரோடு தமிழன்பன்



‘அது என்ன என்று என்னைக் கேட்காதபோது, அது என்ன என்று எனக்குத் தெரிகிறது. அது என்ன என்று என்னைக் கேட்கும்போது, அது என்ன என்று எனக்குத் தெரியாமற் போகிறது’ என்று தூய அகஸ்டின் வேறு எதற்கோ காட்டியதைக் கவிதைக்கு விளக்கமாகச் சொல்ல முற்பட்டு, எடுத்துக் காட்டிய இலக்கியத் திறனாய்வாளர் வில்லியம் ஹென்றி அட்சன் முதல், ‘கவிஞனால் செய்யப்படுவது எதுவோ அதுவே கவிதை’ என்று கூறிய நோபல் பரிசு பெற்ற அமெரிக்கக் கவிஞன் இராபர்ட் ஃபிராஸ்ட் வரை எத்தனையோ பேர் வரைவிலக்கணங்களை வரையறுத்துப் பார்த்தும் வரம்புகளுக்கப்பால் கவிதை வளர்ந்து கொண்டே இருக்கிறது.

யாப்பிலக்கணமும், கவிதை இலக்கணமும் ஒன்றெனக் கருதி மயங்கி இருப்பவர்க்கு மட்டுமே கலைஞர் கவிஞரா இல்லையா என்கிற ஐயம் எழக் கூடும். யாப்பிலக்கணம்கூட நெகிழ்ச்சி உடையது, ஒவ்வொரு வரையறைக்கும் புறனடை வழங்கித் தனது தாராள மனத்தைக் காட்டுவது என்பதை உணர்கிறவர்களுக்கு ‘யாப்பிலக்கண அடிப்படையில் கலைஞர் ஒரு கவிஞரென நிறுவப்பட இயலாதவராகி விட்டார்’ என்ற எண்ணம் ஏற்படாது.

கவிதை இலக்கணம் தெரிந்தவர்களுக்கு கலைஞரைக் கவிஞராகக் காண்பதில் இடர்ப்பாடும் இல்லை; ஏமாற்றமும் இல்லை.

இயக்கத் தலைவன், அரசியல் அறிஞன், ஆட்சித் திறனாளி, கதை வசனப் படைப்பாளி, நாடக, கதை ஆசிரியர் என கலைஞருக்குள் இருந்து பிறந்த பலரும், ஒரு கவிஞனைப் பங்கு போட்டுக் கொண்டனர். சமூகச் சூழலும் அவருடைய வாழ்க்கைச் சூழலும் இத்தகைய ‘வேதியியல் மாற்றத்தை’ விளைவித்த போதிலும், இம்மாற்றம் காட்டும் பரிமாணங்களையெல்லாம் அவருள் பொலியும் பளிச்சிடச் செய்து கொண்டிருப்பவன் கவிஞன்தான் என்பேன் மீண்டும்.

**‘எதுகை மோனை எதையும் பற்றி**
**எழுதாத கவிஞனை வருக என்றே**
**புதுவை வானொலி அழைத்தது புதிரே’**

**கலைஞர் கவிதைகள் ப. 295**

என்று தனக்கு யாப்புப் புலமை இல்லை என்று கலைஞர் குறிப்பிடுகிறார். ஆனால், இங்கு வியப்பு என்னவெனில், எதுகை மோனைகளை, இலக்கண முறைமைகளில் பயன்படுத்தியபடியே இக்கருத்தைக் கூறுகிறார்.

**‘இலக்கணம் என்னும் தாய்ப்பால் அருந்தாமல்**
**பசி எடுத்த போதெலாம்**
**புதுக் கவிதைப் புட்டிப்பால்**
**குடித்திடும் குழந்தை நான்.’**

**கலைஞர் கவிதைகள் ப.316**

இப்படிச் செய்யுள் இலக்கணத் தாய்ப்பால் அருந்தாத தம் நிலைமையைக் குறிப்பிடும் கலைஞர் ‘புதுக் கவிதைப் புட்டிப்பாலை’ தாம் பசியெடுத்த போதெல்லாம் குடிப்பதாகக் கூறுகிறார். செய்யுள் இலக்கணத்தைப் பருகியவர்கள் பலரும் கவிஞர்களாக வளர்ந்ததில்லை என்பதை உணர்ந்து, கவிதையையே பருகித் தாம் கவிஞரான கதையை இங்குச் சுருக்கமாகச் சொல்லி விடுகிறார். புதுக் கவிதைக்கு இலக்கண வரையறை என ஒன்றில்லை. ஒவ்வொரு கவிதையும் தனது இலக்கணத்தைத் தானே வகுத்துக் கொண்டு பிறந்து விடுகிறது என்பதையும் கலைஞரின் மேற்குறித்த வரிகளுக்குள் போய் நாம் காண முடிகிறது.

இங்கு ரூபென் டாரியோ (Ruben Dario) என்ற நிகாரகுவா நாட்டுக் கவிஞனின் ஒரு வடிவத்தைத் தேடுகிறேன்’ என்ற தலைப்பிலுள்ள கவிதையில் வரும்,

‘I seek a form that my style cannot discover,
a bud of thought that
wants to be a rose’

**Twentieth Century Latin American Poetry. P.33**

இவ்வரிகளை நான் நினைத்துக் கொள்கிறேன்.

‘என் நடை கண்டுபிடிக்க முடியாத ஒரு வடிவத்தை என் கவிதைக்கு நான் தேடுகிறேன்’ என்கிறான் இலத்தீன் அமெரிக்க நாட்டு கவிஞன் வால்ட் விட்மன் ரூபன் டாரியோ. ஆனால், கலைஞரின் கவிதை நடை தனக்கென ஒரு வடிவத்தைக் கண்டுபிடித்து, அவரை வெற்றியோடு அதில் வார்த்தெடுத்து வளர்த்துள்ளது. அவ்வடிவம் மரபு வழி இசைப் பாங்கோடும், உத்திகளோடும் புதிய வழித் தாக்கங்களை உள்வாங்கிய தன்மையோடும் அமைந்தது என்று நாம் கூற முடியும். யாப்புத் தேவைகளை நிறைவு செய்திருந்தால் மரபு வடிவமாகவும் மரபுத் தாக்கங்களைத் தவிர்த்திருந்தால் கட்டற்ற கவிதை (Free Verse) வார்ப்பாகவும் கலைஞரின் கவிதைகள், வரையறை செய்யத் துடிப்பவர்களுக்கு வாய்ப்பை ஏற்படுத்தித் தந்திருக்கும்.

காதலியின் புன்னகையை அவள் உதடுகளின் அகல நீளங்கள் தீர்மானிப்பதில்லை. அவளுடைய உள்ளமும் உணர்வும், ஊற்றெடுக்கும் காதலுமே தீர்மானிக்கின்றன. கலைஞரின் கவிதைகளை அவருடைய உள்ளமும், உணர்வும் ஊற்றெடுக்கும் கவித்துவ வெள்ளமுமே முடிவு செய்கின்றன. ஒருவேளை கலைஞருக்கு நேரமும், நினைவும், சூழ்நிலையும் ஒத்துழைத்திருந்தால் யாப்புக் குதிரையை அடக்கி ஆள அவருக்கு அதிக நாள்கள் தேவைப் பட்டிருக்க மாட்டா! அதனாலேயே அவருக்குள் இருந்து புறப்பட ஆவேசம் உற்ற எண்ணங்களும், உணர்வுகளும், அனுபவங்களும் சற்றுக் காத்திருக்கும் கட்டாயம் ஏற்பட்டிருக்கலாம். காலக் கனியில், புரட்சிக் கவிஞருக்கு அருகில் வந்து அமரும் இன்னொரு புரட்சிக் கவிஞர் தமிழுக்குக் கிடைத்தி ருக்கக் கூடும். ஆயின், ஒரு போராளியை, இயக்கத் தலைவனை, அரசியல்வாதியை, ஆட்சியினைத் தமிழ் மக்கள் பெறும் வாய்ப்பைப் பெறாமல் போயிருக்கலாம்.

கலைஞருக்குள், கவிஞனுக்கும், அரசியல்வாதிக்கும் இடையே நிகழும் கடும் போட்டியில் கவிஞனின் வெற்றிக்கும், அரசியல் வாதியின் வெற்றிக்கும் இருபதாம் நூற்றாண்டு சாட்சியம் அளித்துக் கொண்டு இருக்கிறது. அரசியல்வாதியாய், ஆட்சியாளராய் இருக்கும் கலைஞர் வெற்றி பெற்ற போதும், வெற்றி பெறாத போதும், அவருக்குள் இருக்கும் கவிஞன் அவருக்கு மிகவும் தேவையானவனாக இருக்கிறான். அக்கவிஞனிடமிருந்துதான், தம் காயங்களுக்குக் களிம்பு பெறுகிறார். கவிஞன் மடியில் கிடந்து அவன் வருடிவிட வருடிவிட அடுத்த களங்களை, அவருக்குள் இருக்கும் அரசியல்வாதி கணக்கிட்டு வியூகங்களை வகுக்கிறான்.

**‘கவி எழுத நேரம் இல்லை எனினும்**
**கலை உள்ளம் எனை விடுவதில்லை’**

**கலைஞர் கவிதைகள் ப. 214**

**சீட்டெழுதி வருகின்றார் கணக்கற்றோர் மனுக்களுடன்**
**உழல்கின்றேன் அவரிடையே - ஓய்வே இல்லை**
**உருள்கின்றேன் ஊரூராய் உதைபட்ட பந்தைப்போல்!**
**உடல் இளைத்துப் போனாலும் உயிர்மட்டும் இளைக்க வில்லை**
**சுடர் வழங்கத் தமிழருக்குச் சோர்வுதான் மேவிடுமோ?**

**கலைஞர் கவிதைகள் ப. 101**

இக்கவிதை வரிகளில் நாம் காணும் உள்ளியக்கம் மேலே குறித்துள்ள கருத்துகளை உறுதிப்படுத்துகிறது. கலைஞருக்குள் இருக்கும் இயக்கத் தலைவரும், அரசியல் ஞானியும் கலைஞருக்குள் இருக்கும் கவிஞனுக்கு எவ்வகையில் எல்லாம் இப்படிப்பட்ட அன்பை, ஆதரவைத் தருகிறார்கள் என்பது ஆய்வுக்கு உரியது. ஆயினும், கலைஞரின் கவிதைகளில் வெப்பமும், வீறும் கொப்பளிக்கும் இடங்களில் அவ்வியக்கத் தலைவனும், அரசியல் ஞானியும் எழுதுகோலுக்குப் பதிலாக ஈட்டியும், வாளும் அவனிடத்தில் எடுத்துக் கொள்கிறார்கள் என்பதை எளிதாக எவரும் உணர்ந்து கொள்ள முடியும்.

கலைஞரிடத்தில் இருக்கும் கவிதை ஆளுமையை தமிழ்நாட்டு வரலாற்று, சமூகத் தளங்களில் வைத்து மதிப்பீடு செய்ய வாய்ப்பு இருப்பது போலவே தமிழ் இலக்கிய வரலாற்றின் நெடிய தொடர்ச்சியில் வைத்து விளங்கிக் கொள்ளவும் வாய்ப்பு உண்டு.

கலைஞரின் கவிதைகளில் ‘கவித்துவ’த்தைத் தேடிச் செல்பவர்கள் தமிழ்க் கவிதை மரபின் உவமை, உருவகம், சிலேடை முதலிய அணி நயங்களையும் முரண், இயைபு முதலிய தொடை நயங்களையும் கண்டு மகிழ நிறைய வாய்ப்புகள் உண்டு. அவருடைய கவித்துவத் திற்குத் தூண்டுகோலாக இலக்கியங்களில் இருந்த பழந்தமிழ் ‘கலிங்கத்துப் பரணி’ முதலிய இடைக்கால நூல்களில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் வீறார்ந்த கவிதைகளின் தாக்கங்களும் அவர்கள் பார்வையில் உறுதியாகப் பதியவே செய்யும். இவற்றையெல்லாம் விஞ்சி கலைஞருக்குள் இருக்கும் தமிழ்ப் பற்றும், தமிழினப் பற்றும் அவரைக் கவிஞனாக்கி வைக்க, தற்காலத் தமிழக அரசியல், சமூகக் கொந்தளிப்புகளுக்குக் கவிதைகள் மூலம் எதிர் வினையாற்ற அவருடைய கவித்துவம் தனக்கே உரிய தனித்தன்மைகளோடு கனன்று எரிவதை இங்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



இக்கட்டுரையில் கலைஞருடைய கவித்துவ மேன்மையைப் பற்றி மட்டுமே விளக்கிக் காட்ட விரும்புகிறேன். எதுகை மோனை வெறும் அமைப்புகளைப் பயன்படுத்திக் கொண்டே கருத்துரைப்பவராக இருப்பவர் ஒரு போதும் கவிஞராக மாட்டார். அவற்றைப் பயன்படுத்தியோ, பயன்படுத்தாமலோ விழுமிய அகக் காட்சிகளை அர்த்தமும், அழகும் சொட்டக் கொட்டவல்லவரே கவிஞராகும் அடையாளங்களைக் கொண்டவராக இருக்க முடியும்.

உலக நாடக மேதைகளில் முன்னிடத்தில் வைத்துப் போற்றப்படும் சேக்சுபியர், ‘ஜூலியஸ் சீசர்’ நாடகத்தில் சீசரின் கொலைக் காட்சியை நம் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிறார். ஒரு காவியப் பரிமாணம் அந்தக் காட்சி ஒன்றிலேயே உயிர் பெற்றுச் சுடர் விடுகிறது! ஆம்! சீசர் இறக்கிறான்! அக்காட்சியோ உயிர் பெறுகிறது நாடகத்தில்!

புரூட்டசின் கட்டாரி தனது மார்பில் பாய்ந்ததும் கலங்கிப் போன சீசர், ‘நீயுமா புரூட்டஸ்?’ என்று கேட்பதை இலக்கிய வல்லுநர்கள், விதந்து பேசுவதை அறியாதவர்கள் இருக்க முடியாது. புரூட்டஸ் பாய்ச்சிய கட்டாரியைத் தனது மார்பிலே இருந்து அவன் பிடுங்கியதும், சீசர் அதிர்ச்சி அடையவில்லை. அவனுக்குப் பதிலாகக் காயத்திலிருந்து பாய்ந்த இரத்தம் பேசாமல் பேசுகிறது.

புரூட்டசா கட்டாரி பாய்ச்சினான்? சீசருக்கு ஐயம் தெளிந்தால் போதாது. சீசரின் இரத்தம் நம்ப வேண்டும்! உடலுக்கு உள்ளே ஓடிக் கொண்டிருக்கிற இரத்தம் வெளியே வந்து பார்த்துத் தீர்மானிக்க வேண்டும்! நட்பு என்பது முகங்களோடு முறுவல்களோடு, வாய்கள் பயிர் செய்யும் வார்த்தைகளோடு, கை குலுக்கல்களோடு, கட்டித் தழுவல்களோடு எல்லை வகுத்த சம்பந்தங்களில் வெளிப்பட்டு முடிந்து விடுவதில்லை. அது இரத்த பந்தம் உடையது! இரத்தத்திலிருந்து உதறிவிட முடியாத நட்பு சீசருக்கும் புரூட்டசுக்கும் இடையேயான நட்பு.

சீசரின் மார்பில் பாய்ச்சிய கட்டாரியைப் புரூட்டஸ் பிடுங்கி எடுக்கப் பீறிட்டுப் பாய்கின்றன இரத்தமும், சேக்சுபியரின் கவிதை வெள்ளமும். கட்டாரி மீது மட்டுமே சேக்சுபியர் களங்கத்தைக் கற்பிக்கிறார் இரத்தம் முடிவு செய்யுமுன், பழிகார, பாவப்பட்ட, விதிவசப்பட்ட என்று அடைமொழிகளை நாம் சேர்த்துக் கொள்ள அனுமதிக்கும் சொல்லை, சேக்சுபியர் கட்டாரியோடு சேர்த்து வைக்கிறார். தெருவில் ஏதோ சம்பவம் நடப்பதைக் கதவைத் திறந்து கொண்டு ஓடிவந்து பார்க்கும் நம் மக்களின் பழக்கத்தை இரத்த வழக்காகக் கவிஞர் மாற்றி வைக்கிறார்.

கட்டாரியைச் சீசர் மார்பிலிருந்து புரூட்டஸ் பிடுங்கி எடுத்தவுடன் இரத்தம் வெளியே ஓடிவருகிறது. காயத்தின் வெளிப்பாடாக அன்று; கவலையின் வெளிப்பாடாக. நண்பன், நல்லவன், நம்பிக்கைக்கு உரியவன், நல்லெண்ணங்கள் கொண்டவன் புரூட்டஸ்! அவனா இச்செயலைச் செய்திருப்பான்! இருக்காதே, என்ற பதைப்போடு, ஐயத்தோடு, கவலையோடு ஆசையற்றவனாய், புரூட்டஸ் எப்படி இதைச் செய்திருக்க முடியும்? இரத்தம் வெளியே பாய்கிறது! சீசரின்மேல்அன்பற்றவனாய், ஆசையற்றவனாய், புரூட்டஸ் இப்படி இதைச் செய்திருக்க முடியும் - என்று சீசரின் இரத்தம் - ஐயம் தீர்த்துக் கொள்ள, தெளிவுபடுத்திக் கொள்ள வெளியே வருகிறது! கட்டாரி பாய்வதால், காயம் ஏற்பட்டு இரத்தம் வெளிப்படும் இயற்கையான விளைவின்மீது, கவிஞன் தனது கருத்தை இங்கு ஏற்றி வைத்திருக்கிறான். இப்படிச் சொல்லுவதை அணி இலக்கணம் ‘தற்குறிப்பேற்ற அணி’ என்று குறிப்பிடும் என இலக்கணக் காரர்கள் - சட்டென்று காவிய அனுபவத்தைச் சிதைத்து- இலக்கணத்தின் பக்கம் கவனத்தைத் திருப்பி விடுவார்கள்.

நாடகப் பாத்திரங்களின் உணர்ச்சி நிலைகளை அள்ளிக் கொண்டு வரும் இக்காட்சியில், சேக்சுபியரின் கவிதை, வெறும் தற்குறிப்பேற்ற அணி வரம்புக்குள் நின்று இயங்கவில்லை! அப்படி வரம்புக்குள் நிறுத்தி அணி வகைப்பாட்டில் கவிதையை முடக்கிவிடும் எவரும், சீசருக்கும், புரூட்டசுக்கும் இடையே இருந்த நட்பும் அதற்கேற்பட்ட துயரம் நிறைந்த முடிவும் தரும் அனுபவத்தை இழந்து விடுவார்கள்.

சேக்சுபியரின், ‘ஜூலியஸ் சீசர்’ நாடகம் இக்காட்சியைப் பின்வருமாறு படைத்துக் காட்டுகிறது

**‘As he plucked the cursed, steel away**
**mark how the blood of Caesar followed it**
**As rushing out of doors, to be resolved**
**If Brutus so unkindly knocked or no’**
**Julius Caesar Act III Scene**

இக்கவிதைப் பகுதிக்கு விளக்கம் மேலே தரப்பட்டு விட்டதால். மொழி பெயர்க்க வேண்டியதில்லை!

கலைஞரின் படைப்புகளுக்குள் இத்தகைய காவியப் பரிமாணம் வாய்ந்த காட்சி ஒன்றை எடுத்து, மேற்குறித்த சேக்சுபியரியக் காட்சியோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

‘கலைஞரின் கவிதைகள்’ தொகுப்பில் ‘இனமான ஏந்தல்கள்’ என்கிற தொகுப்பில் இராவணன், போர்க் களத்தில் வஞ்சக வீடணனால் வீழ்த்தப்பட்ட பகுதியில் அக்காட்சி நமக்குக் கிடைக்கிறது.

வீழ்ந்துபட்ட எந்த இனமும், தன்னை மீட்டெடுக்க முன்னைய விழுமியங்களை நினைவுபடுத்திக் கொள்வது கட்டாயத் தேவையாகிறது. ‘எப்படி இருந்தது நம்மினம்? எப்படி இருந்தனர் நம்மினத் தலைவர்? எப்படி, எவர் நம்மை வீழ்த்தினர்? இனி மீள என்ன செய்ய வேண்டும்?’ என்றெல்லாம் எண்ணி, எண்ணி, காழ்ச்சிந்தை, மறச்சிந்தை ஊட்டப்பட்டாலன்றி, எடுத்துக் காட்டுகள் காட்டப்பட்டாலன்றிக் குனிந்த இனம் ஒருபோதும் நிமிர முடியாது.

தமிழின மீட்சிக்காகவே ஆரியக் கதைகளில் வீழ்த்தப்பட்டவர் வரலாறுகள் தமிழ் மக்களுக்குத் திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டன. புராணங்களில் இழித்தும், பழித்தும் பேசப்பட்டவர்களும் போரில், வஞ்சகத்தால் ஒடுக்கி ஒழிக்கப்பட்டவர்களும், சிறப்புக்கு உரியவர்களாக எடுத்துக் காட்டப்பட்டனர். ‘தீங்கு செய்த ஆரியம் தமிழருக்கு எதிரானது’ என்பதை அழுத்தந் திருத்தமாக எடுத்துரைக்கவே ஆரியக் கதைகளின் எதிர்நிலைப் பாத்திரங்கள் மீது தமிழ் மக்களின் பாசத்தை வளர்ப்பதும், மதிப்பை உயர்த்தும் திராவிட இயக்கத்தின் கடமையாக இருந்தன.

**‘தென்னிலங்கை யிராவணன் தன்னையும்**
**தீய னென்னும் துரியனையும் பிறர்**
**என்ன சொல்லி எவ்வாறு கசப்பினும்**
**இன்று நானவர் ஏற்றத்தைப் பாடுவேன்’**

**பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதி ப. 184**

இங்கு நாம் கவனிக்கத்தக்கு ‘திராவிடன்’ என்று நாம் கருதும் இராவணனுடன் தென்னாட்டவன் என்றோ, திராவிடன் என்றோ யாராலும் சொல்லப்படாத,துரியோதனனையும் ஒரு தட்டில், பாரதிதாசன் ஏன் வைத்து மதிக்க வேண்டும் என்பதுதான்! பாண்டவரால் வீழ்த்தப்பட்ட அவன் அவர்களுக்கு உறவினனே தவிர அவனுக்கும் தமிழனுக்கும் என்ன உறவு? பாரதிதாசனின் ஒரே நோக்கம், ஆரியக் கதைகளில் எதிர்நிலைப் பாத்திரங்களாக இடம் பெறும் எவரும் நம் ஆதரவுக்குரியவராகக் கொள்ளப்பட வேண்டும் என்பதுதான்.

இன்னொன்றையும் இங்குக் குறிப்பிடலாம். ஆரியக் கோட்பாட்டுக்கு, வாழ்வியலுக்கு எதிரான ஆரியப் பாத்திரங்களும், புரட்சிக் கவிஞனின் ஆதரவுக்கு உரியனவாகி விடுகின்றன. தீபாவளிக் கதையில் வரும் ‘நரகனை’ புரட்சிக் கவிஞர் ‘தமிழ்ச் சேய்’ என்று தழுவி அவனைக் கொண்டு தமிழின உணர்ச்சியை எழுப்ப முற்படுவதை அதற்கு எடுத்துக்காட்டாகச் சொல்லலாம்.

இப்பின்னணியில்தான், கலைஞரின் ‘இனமான ஏந்தல்கள்’ தொகுப்பில் இராவணன், கும்பகர்ணன், இந்திரசித்து, வாலி முதலியோர் வடித்தெடுக்கப்பட்டுள்ளனர். இராவணன், வீடணச் சதியால் வீழ்ந்து பட்டதை கலைஞர் கவிதைப் படுத்தும்போது, சீசர், புரூட்டஸ் ஆகியோரிலிருந்து சேக்சுபியர் விலகி நின்று பேசுவதுபோலப் பேச முடியாது; என்பதற்காகவே, இப்பின்னணி இங்குக் கொணரப்பட்டது. இக்கருத்தை ஒருவேளை சிலர் மறுத்து, சேக்சுபியரும் பாத்திரங்களோடு ஒன்றி நின்று, உணர்ச்சி வயப்பட்டுத்தான் படைத்திருக்கிறார்; விலகி நின்று பேசவில்லை என்று வாதிடக் கூடும். ஏனெனில், சீசரின் உயிர் நண்பன் மார்க் ஆண்டனியாக மாறி சேக்சுபியர் நின்றுதான் இந்த உணர்ச்சிகரமான பகுதியைப் படைத்திருக்க முடியும் என்று வாதிடுவதிலும் ஓர் இலக்கிய நியாயம் உண்டு. அப்படியே எடுத்துக் கொண்டாலும் சேக்சுபியர் சீசரோடு ஒன்றுவதைக் காட்டிலும் நூறு மடங்கு மிகுதியாக இராவணனோடு ஒன்றி கலைஞர் இக்காட்சியைக் கவிதைப் படுத்தியிருக்கிறார், என்று நான் சொல்ல முடியும். சேக்சுபியருக்குச் சீசரோடு இனவழி, மொழி வழி, நில வழி என எவ்வழித் தொடர்பும், உறவும் கிடையாது. ஆனால், கலைஞருக்கோ இராவணன் அவருடைய ‘சிந்தையெலாம் தோள்களெல்லாம் பூரிக்கச் செய்கின்ற, தமிழர் மூதாதை, தமிழர் பெருமான், குள்ளநரிச் செயல் செய்யும் கூட்டத்தின் கூற்றம், மறத்தமிழன்’. எனவே இலக்கிய நியாயத்தையும் வெல்லுகின்ற இன நியாயம் -கலைஞரின் கவிதை வரிகளில் மேகத்தை வெட்டிப் பிளக்கும் மின்னலாக வேகத்தோடும், வெளிச்சத்தோடும் பதிவாகியிருக்கிறது.

இராவணன் போர் செய்கிறான் - இராமனோடும் அவன் படையோடும் கலைஞரின் கள வரிகள், இரத்தக் காட்சிகளை வரைகின்றன:

**‘வேல்பட்ட புலிபோல - விடுபட்ட கணைபோல**
**அணையிட்ட வெள்ளம் போல - ஆயிரம் வாள்பட்ட மார்புடையான் போரிட்டான்!**
**கால்பட்ட பிடரியுடன் கயவர்களம் மறைந்து போனார்**
**ஒழிந்ததடா பகை என்று, நகை முழக்கம்**
**செய்துவிட்டுத் திரும்பிநின்ற வழிதனிலே**
**ஒளிந்திருந்து ஆரியர்கள் ஒரம்பு வீசிவிட்டார்!**
**மார்பினிலே பட்டகணை வெட்டித் தள்ளி**
**யாரடா கோழையென்று வாளோங்கித் திரும்பி விட்டான்**
**ஓடுவதற்கு வழியின்றிச் சிக்கிவிட்ட இராமன் கூட்டம்**
**தேடுதற்கும் தசையின்றிப் பஞ்சாய்ப் போகும்!**
**கன்னலடா என்றன் நாடு அதை**
**இன்னலிலே மாட்டிவிட்ட உங்களுக்கு இந்த வாள்வீச்சு**
**மின்னலடா எனக்கூறிச் சுழற்றிவிட்டான்!’**

இராவண மதகளிறு பகைக் கூட்டத்தைக் கலக்கி நொறுக்கிக் கொண்டிருப்பதைக் கண்ட வீடணன் தன் கையில் இருந்த ஈட்டியைத் தன் அண்ணன் முதுகின் பக்கம் எறிகிறான். அந்த ஈட்டியை, ஈட்டி பாய்ந்த இராவணக் காட்சியை கலைஞர் காவியப் பரிமாணத்தில் படைத்திருக்கிறார்.

**‘மறைந்திருந்து பறந்து வந்த ஈட்டி - அவன்**
**மலைப் பாறை முதுகினிலே ஊடுருவி மார்பகத்தில்**
**தலை நீட்டிக் கண்ணீர் கொட்டும்!**
**இமயமலை சாய்வதுபோல், இராவணன் வீழ்ந்து விட்டான்!’**

சேக்சுபியர், ‘பழிகாரக் கட்டாரி’ என்று குறிப்பிடுவது போலவே கலைஞருக்கும், ஈட்டியின் வஞ்சகச் செயல்களே, அது மறைந்திருந்தது, பறந்து வந்தது ஆகியன என்று நமக்குச் சொல்கிறார். ‘எய்தவன்’ இருக்க அம்பை நோகலாமா? என்று நமக்கும் கேட்கத் தோன்றுகிறது. இராவணன் ‘மலைப்பாறை முதுகினில்’ அவ்வீட்டி ஊடுருவி மார்பின் வழியே வெளியே வருகிறது என்று சொல்வதன் மூலம் இராவணனின் ஒடுக்க முடியா உடல் வலிமை நமக்குத் தெரிவிக்கப்படுவதோடு வீடணன், இராவணன் இளவலாகையால் அவனால்தான் அப்படிப்பட்ட ‘மலைப் பாறை’யைத் துளைத்துச் செல்லும் ஆற்றலோடு ஈட்டியை எறிய முடிந்திருக்கிறது என்பதும் சொல்லப்படுகிறது.

சீசரின் மார்பில் இருந்து - இரத்தம் பாய்ந்து வெளிப்பட்டது போல் இராவணன் உடம்பில் ஈட்டி பாய்ந்த இடத்திலிருந்து குருதி ‘கொப்பளித்துப் பாய்ந்ததாக கலைஞர் சொல்லவில்லை. இராவண இரத்தம் பொங்கிப் பாயவில்லை. ஏனெனில் இராமன் பக்கமாகப் போய்ச் சேர்ந்து விட்ட பிறகு, போர்க்களத்திலும் வீடணன் தன்னை எதிர்ப்பான் என்பது, இராவணனால் எதிர்பார்க்கப்படும் ஒன்றுதான். இராவண இரத்தத்திற்கு அந்த ஐயம் இல்லை. ஆனால், அப்படியே தன் உடன்பிறந்தவன் பகைவர் பக்கம் சேர்ந்து எதிர்க்கும் போதும் தன்னோடு முரண்பட்டவன் ஆக மாட்டான் என்று இராவணன் உறுதியாக நம்பியிருந்தான். ‘படை கடத்தல்’ என்பதற்கே நம் உரையாசிரியர்கள் ‘பகைவரை வஞ்சியாது எதிர் நின்று வெல்லுதல்’ என்றுதான் பொருள் எழுதுவார்கள். இராவணன் இரத்தம் வீடணனின் இந்தக் கோழைத்தனத்தை எதிர்பார்க்கவே இல்லை.

இராவணன் முதுகில் பாய்ந்து நுழைந்த போதே, ‘ஈட்டிக்கு’ வெளியே தலைகாட்ட முடியாத இழிவு ஏற்பட்டு விட்டது. இராவண இரத்தத்தில் குளித்ததும், வெளியே தலைகாட்டி வீடணனால், தனக்கும், இராவணனுக்கும் தமிழர் போர் நெறிக்கும் ஏற்பட்டுவிட்ட களங்கத்தைத் துடைத்துவிடக் கண்ணீர் சொட்டுகிறதாம் ஈட்டி!


‘நானாக மறைந்திருக்கவில்லை. நானாகப் பறந்து வரவில்லை. நானாக இந்த நரிச் செயலைச் செய்யவில்லை’ என்று ஈட்டி, கண்ணீர் வாக்குமூலம் கொடுக்கிறது.

அந்த ஈட்டியின் ஒவ்வொரு கண்ணீர்த் துளியும் கலைஞரின் கவிதையில் ஒவ்வொரு எழுத்தாக வெப்பத்தோடும், வேதனை யோடும் வந்து விழ ஒரு காவியப் பரிமாணத்தின் கதகதப்பு நம் நெஞ்சுக்குள்ளே படர்கிறது.






# தஞ்சை கண்ட தமிழ்க் காட்சி!



புலவர் செந்தலை ந.கவுதமன்

ஒரு சொல்லுக்குள் கொள்கை வரலாற்றை கலைஞர் அவர்கள் நுழைத்த நுண்ணறிவைக் கண்டு 1967இல் ஏற்பட்ட வியப்பு இன்னும் விலகவில்லை.

தஞ்சை மாவட்டத்தில் கல்லணைக்கு அருகே உள்ள ஊர் திருக்காட்டுப்பள்ளி. அதனை ஒட்டிய ஊர் தான் நான் பிறந்த செந்தலை.

எங்கள் ஊரில் ஐந்தாம் வகுப்புவரை படிக்க முடியும். அதற்கு மேல் படிக்கத் திருக்காட்டுப் பள்ளிக்குச் செல்ல வேண்டும். திருக்காட்டுப்பள்ளி சிவசாமி அய்யர் உயர்நிலைப் பள்ளியும், பள்ளியோடு இணைந்த மாணவர் விடுதியும் தஞ்சை மாவட்டத்தில் பழப்பெருமை வாய்ந்தது.

திருக்காட்டுப்பள்ளியில் புதிய பேருந்து நிலையம் கட்டியிருந்தார்கள். “என்ன பெயர் வைக்கலாம்?” எனப் பலவாறு சிந்தித்தும் விவாதித்தும் உள்ளூர்க் கோவில் கடவுளின் பெயரையே வைப்பது எனப் பேரூராட்சியில் முடிவெடுத்திருந்தார்கள். தேவாரப் பாடல் பெற்ற அவ்வூர்க் கோவிலில் உள்ள இறைவன் பெயரைத் தாங்கி **“அக்னீஸ்வரர் பஸ் ஸ்டாண்ட்”** என்று பெயர் வைக்கத் தீர்மானித்து விட்டார்கள்.

தி.மு.கழகம் அரியணையேறி அறிஞர் அண்ணா முதலமைச்சராகி இருந்த நேரம்! பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைக் கொண்டு பேருந்து நிலையத்தைத் திறந்து வைக்க வேண்டுமென ஊர் மக்கள் விரும்பினர். கலைஞர் வர இசைந்தார்.

ஆட்சி தி.மு.கழக ஆட்சி என்பதாலும், திறந்து வைக்க வருபவர் கலைஞர் என்பதாலும், எல்லா இடங்களிலும் தமிழ்மணம் கமழ்வதாலும் பேருந்து நிலையப் பெயரிலும் தமிழ் மணம் கமழ வேண்டும் என்னும் முனைப்பு பிறந்தது.

‘அக்னீஸ்வரர்’ எனும் வட சொல்லை நீக்கிட்டு, **‘தீயாடியப்பர் பேருந்து நிலையம்’** என நுழைவாயில் அழகுற அமைக்கப்பட்டது.

பொதுப்பணித் துறை அமைச்சராக கலைஞர் பொறுப்பேற்றுச் சில மாதங்களே ஆகியிருந்த 1967 ஆம் ஆண்டு.! பேருந்து நிலையத் திறப்பு விழா காலை நேரத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

உயர்நிலைப்பள்ளி மாணவனாக இருந்த எனக்கு அன்று பள்ளி விடுமுறை. செந்தலைக்கும் திருக்காட்டுப்பள்ளிக்கும் நான்கு கிலோ மீட்டர் தூரம்! நடந்து சென்றால் உரிய நேரத்திற்குச் செல்ல இயலாதே என்ற கவலை.

செந்தலை திராவிடர் கழகத் தலைவரான என் தந்தையார் ச.நடராசன், தி.க. தோழரும் அரசியல் சட்ட எரிப்பு வீரரும் முடிதிருத்தும் நிலைய உரிமையாளருமான தோழர் கோவிந்தராசனோடு மிதிவண்டியில் செல்லச் சொன்னார்.

கூட்டம் தொடங்கியிருக்குமோ என்ற பதற்றத்தோடு, தோழர் கோவிந்தராசனும் நானும் மிதிவண்டியில் பறந்தோம்.

கலைஞர் வந்து விட்டார். அவரை முதன் முறையாக அப்போதுதான் பார்க்கிறேன். ‘அக்னீசுவரர் பெயரைத் தீயாடியப்பர் என்று மாற்றியிருந்தாலும் கலைஞர் இதைப் பற்றி என்ன பேசப் போகிறாரோ?’ எனக் கவலையோடு முணுமுணுத்துக் கொண்டிருந்தார் உடன் வந்த தி.க. தோழர் கோவிந்தராசன்.

பெருத்த ஆரவாரத்துக்கிடையே முத்தமிழறிஞர் கலைஞர் பேச எழுந்தார். வைத்த விழி வாங்காமல் அவரையே ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தது கூட்டம்.

பேருந்து நிலையப் பெயரைக் குறிப்பிட்டுப் பேசத் தொடங்கினார்.

**“ ‘தீயாடியப்பர்’ என்பது உணர்வூட்டும் பெயர்! செந்தமிழைக் காக்கத் தீக்குளித்த சின்னச்சாமி முதலிய தீரர்களை நினைவூட்டும் பெயர். மொழிப்போர் வரலாற்று முத்திரைப் பெயரைப் பேருந்து நிலையத்திற்கு சூட்டியிருக்கும் பெருமையைப் பெற்றுள்ளது திருக்காட்டுப்பள்ளி...”**

தீயாடியப்பருக்குக் கலைஞர் தந்த விளக்கத்தைக் கேட்டு எழுந்த கையொலி அடங்க நெடுநேரமானது.

சாமியை நினைவூட்டும் ‘தீயாடியப்பர்’ எனும் பெயரை, மொழிப்போர் வீரர் சின்னச்சாமியோடு பொருத்தி வைத்துப் புதிய கொள்கை வரலாற்றைத் தமது பேச்சால் உருவாக்கிக் காட்டினார் கலைஞர்.

அன்றைய உரை எழுப்பிய தமிழுணர்வும், கலைஞர் சூட்டிய தமிழ்க் காக்கும் வீரவரலாற்று எழுச்சியும் என்போன்ற இளையோரை இன்னோர் உலகத்திற்கு இழுத்துச் சென்று விட்டன.

பேருந்து நிலையத் திறப்பு விழாவைக் கொள்கை விழாவாக மாற்றிவிட்டார் கலைஞர்! ‘தீயாடியப்பர்’ என்னும் ஒரு சொல்லுக்குள் ஒரு கொள்கை வரலாற்றை நுழைத்த கலைஞரின் நுண்ணறிவு தந்த வியப்பு இன்றும் விலக மறுக்கிறது.

திறந்து வைத்த முத்தமிழறிஞர் கலைஞர் இன்று நினைவாய்த் தொடர்கிறார். அவர் திறந்து வைத்த **திருக்காட்டுப் பள்ளி தீயாடியப்பர் பேருந்து நிலையம்** இன்றும் அதே பெயரோடு, கலைஞரின் மாறாத நினைவுகளைச் சுமந்து நிற்கிறது.

தஞ்சை அன்று பெற்ற தமிழ்க்காட்சியை தமிழ்நாடு என்றும் நினைவு கூர வேண்டும்.

# கலைஞரின் எழுதுகோல் கட்டமைத்த புரட்சி!





கவிஞர் சல்மா

தலைவர் கலைஞரைப் பற்றி நினைத்துக்கொள்வதற்கும் எழுதுவதற்கும் எண்ணற்ற விஷயங்கள் அவரை அறிந்தவர்கள் ஒவ்வொருவருக்குமே இருக்கக்கூடும். அறியாதவர்களுக்கும்கூட.

இந்திய வரலாற்றில் பிறரால் அதிகம் மதிக்கப்படும் தலைவராகத் தன்னை நிலைநிறுத்திக்கொண்டவர் அவர். இன்னும் பல காலத்திற்கு யாரும் அவரது இடத்தை அடைய முடியாத அளவிற்கு உயர்ந்து நிற்பவரும் அவர்தான்.

அரசியல் தலைவராக, ஒரு இயக்கத்தின் தலைவராக, ஒரு மாநிலத்தின் முதல்வராக எவ்வளவோ விஷயங்களைத் தொட்டு அவர் தொடர்ந்து செயல்பட்டுவந்திருந்தாலும் அவற்றிற்கெல்லாம் அடிப்படையான காரணமாக இருப்பது அவரது எழுத்தாற்றல்.

அதுதான் அவரது இத்தனை சீர்திருத்தங்களுக்கும் சிந்தனைகளுக்கும் சட்டங்களுக்கும் இந்த அரசியலை மாற்றி அமைத்ததற்கும் அடிப்படைக் காரணமாக அமைந்திருந்தது.

அவர் தனது திரைப்படங்களில் எழுதிய வசனங்கள் புரட்சிகரமான சிந்தனைகளாக ஒலித்தன. ஆட்சிக்கு வந்த பிறகு அவற்றையெல்லாம் அரசின் சட்டங்களாக மாற்றும் பணியில் முழுமூச்சாக ஈடுபட்டு அவற்றை நிறைவேற்றிக் காட்டினார்.

ஒரு ஆட்சியாளர் வெறுமனே அரசியல்வாதியாக மட்டுமில்லாமல் ஒரு எழுத்தாளராகவும் இருப்பதன் பயனை இந்த மாநிலத்தின் மக்களுக்கு முழுமையாக அவரால் தர முடிந்தது. மகத்தான தலைவரான அவர் சிறந்த எழுத்தாளராகவும் இருந்தது தமிழகத்தின் நற்பேறு.

இந்த சமூகத்தில் எவையெல்லாம் அவருக்குச் சகிக்க முடியாததாக இருந்தனவோ - எவையெல்லாம் அநீதியாகத் தெரிந்தனவோ - எவையெல்லாம் மாற்றப்பட வேண்டும் என்று நினைத்தாரோ அவற்றைப் பற்றியெல்லாம் அவர் தனது படைப்புகளில் பேசினார். படைப்புகளின் வழியாகத் தன் சிந்தனைகளை மக்களிடம் கொண்டுபோய்ச் சேர்க்க முடிந்தது. அவரது படைப்புகள் சமூக மாற்றத்திற்கான அறை கூவலைக் கொண்டதாக அமைந்திருந்தன. அதற்கான திட்டத்தை முன்வைப்பவையாக இருந்தன. சமூக மாற்றத்திற்கு இலக்கியத்தின் பங்களிப்பு என்பது அதுதான்.

இப்படியாக, வாழ்நாள் முழுவதும்எழுத்தின் வழியாகத் தான் முன்வைத்த கனவுகளை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்காகத் தனது ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்திக்கொண்டார் கலைஞர்.

தத்துவார்த்தச் சிந்தனையாளர் எப்படி இயங்குவார் என்பதற்கான உதாரணமாக அவர் இருந்தார். சமூக மாற்றம் என்பது அத்தனை எளிதாகச் செய்து முடிக்கப்படக்கூடிய ஒன்று அல்ல. அதனை அவர் அறிந்திருந்ததால்தான் அவர் தன்னுடைய ஆட்சியின்போது படிப்படியாக அதை நோக்கிப் பயணித்தார். அதிகாரத்தில் இருந்தபோது ஒவ்வொரு முறையும் புதிதான பல சட்டங்களை நிறைவேற்றிக் காட்டினார்.

சட்டங்களைப் போட்டால் மட்டும் போதாது. சமூகம் அந்தச் சட்டங்களை ஏற்கச் செய்ய வேண்டுமென்றால் அந்தச் சட்டத்தின் நியாயங்களை மக்களிடம் எடுத்துச் சொல்லும் வாக்குவன்மை இருக்க வேண்டும். சட்டங்களைப் பிறப்பிப்பதற்கு முன்பே தன் எழுத்தாலும் பேச்சாலும் அந்தச் சட்டங்களுக்குப் பின்னால் இருக்கும் சிந்தனைகளை அழுத்தமாக முன்வைத்தவர் கலைஞர். சட்டங்களைப் பிறப்பித்த பிறகும் அவற்றின் நியாயங்களை விளக்கி அவர் எழுதிய சொல்லோவியங்கள் அந்தச் சட்டங்களை மக்கள் மனதார ஏற்கச்செய்வதில் பங்காற்றின. அவர் பிறப்பித்த சட்டங்கள் இந்தியாவுக்கே வழிகாட்டியாக இன்றைக்கும் இருந்துகொண்டிருக்கின்றன.

**சமூக மாற்றத்தைத் தனது தோள்களின் மீது சுமந்து அதை நிறைவேற்றிக் காட்டியவர் கலைஞர். அவருடைய எழுத்தும் சிந்தனையும் செயல்களும் மனிதர்களை அவர் எந்த அளவிற்கு நேசித்தார் என்பதை உலகுக்குக் காட்டக்கூடியவை. எந்த மாநிலத்திலும் சட்டமாக்கப்பட இயலாத பல சட்டங்களை அவர் இயற்றினார். சமத்துவபுரங்களை உருவாக்கினார். பெண்களுக்கான சொத்துரிமைச் சட்டத்தை இயற்றினார். இந்தச் சமூகத்தின் மிக இறுக்கமான இரண்டு விஷயங்களை அடித்து நொறுக்கக்கூடிய சட்டங்களாக அவை இருந்தன.**

**பல விதமான எதிர்ப்பினையும் தாண்டி அவர் தனது கொள்கையில் துணிந்து நின்றதன் சாட்சியாக அவை இருந்தன. அவற்றைச் சட்டமாக்கித் தனது நெஞ்சுரத்தையும் சமூகத்தின் மீதான நேசத்தையும் உறுதியாக வெளிப்படுத்தினார்.**

தந்தை பெரியாரின் கனவுகளை, பேரறிஞர் அண்ணா அவர்களது சிந்தனைகளை, சமூகத்திடம் கொண்டுசெல்வதற்காக அவர் தனது எழுத்தாற்றலையும் அவரது ஆட்சி அதிகாரத்தையும் முழுமையாகப் பயன்படுத்தினார். அப்படிப் பயன்படுத்துவதன் வழியாக அவர் இந்த சமூகத்திடம் தனக்கான அடையாளத்தை நிறுவினார்.

கட்சித் தொண்டர்களைச் சக மனிதர்களாக நெஞ்சார அணைத்துக்கொள்ளக் கூடியவராகவும் அந்தப் பரவசத்தைத் தனக்கான பலமாகக் கொண்டவராகவும் வாழ்ந்தார். அவர்களோடு உரையாடுதலின் வழியாக அவர் தன்னை உயிர்ப்புடன் வைத்துக் கொண்டார். தன்னை அவர்களுக்கு ஒப்புக்கொடுத்தவராக இருந்தார். தினமும் அறிவாலய வாசலில் நின்று நேசத்தைத் தரக் காத்திருக்கும் எளிய இதயங்களை அவர் ஏமாற்றியதில்லை. அவர்களிடமிருந்த அந்த அன்பைப் பெற்றுக்கொள்ள ஓடோடி வரும் மாபெரும் தலைவர் கலைஞர்.

அவர் வாழ்ந்த காலத்தில் நாம் வாழ்ந்தோம் என்கிற பெருமையே நமக்குப் போதுமானதாக இருக்கும். என்றென்றைக்கும்.

# கலைஞர் சந்திப்பு; கமழும் சிந்திப்பு!

கலைஞர்! இந்த நான்கு எழுத்துகள் நான்கு திசைகள் போல! நானிலம் இந்த நான்கு திசைகளுக்குள் அடங்குதல் போல் கலைஞர் என்னும் நான்கு எழுத்துகளுக்குள் கழகம் இயங்குகின்றது. கருணாநிதி, ஐந்து எழுத்து மந்திரம் போல் ஓர் ஆற்றல் மந்திரம். கலைஞர் மு. கருணாநிதி என்றால் பத்து எழுத்துகளால் ஆன ஒரு பத்துப்பாட்டு.

கருவிலே திருவுடையார் என்று காலங் காலமாகச் சொல்லிவரும் கருத்துக்கு ஒரு காவியமாகத் தோன்றியவர் கலைஞர். அடுத்தவனுக்கு அடுத்தவன் என அரசுரிமை அடைந்தது அக்காலம். மக்கள் அளிப்பது அரசுரிமை என மாறியது இக்காலம். மக்கள், யாருக்கு, எப்போது , ஏன், எதற்காக, எப்படி மணிமகுடம் சூட்டுகின்றார்கள்? மக்களுக்காக, மக்களில் ஒருவராய் மாறும்போது, மலரும்போது , வாழ்வை வழங்கும் போது மதித்து மகிழ்ந்து அந்த மக்கள் அளிப்பதே அரசுரிமை. அதன் அடையாளங்களே மணிமுடி, வெண்கொற்றக் குடை, செங்கோல் என்பன.

இருபதாம் நூற்றாண்டு எழுச்சிமிகு அரசியல் இலகிய காலம். தமிழ்நாட்டு மக்கள் தமக்கொரு தலைவராகப் பேரறிஞர் அண்ணா அவர்களைத் தவமாகத் தலைமேற் கொண்டனர். அண்ணாவிற்குப் பிறகு கலைஞர் அவர்களையே அரசுக் கட்டிலில் அமரவைத்தனர். நீண்ட காலம் ஆண்ட கலைஞர் போல் தமிழ்நாட்டை இருபதாம் நூற்றாண்டில் ஆண்டவர் எவரும் இலர்! ஏனெனில் மக்கள் ஈர்ப்பவர் கலைஞர்; மக்களை ஈர்ப்பவர் கலைஞர் ! காண்போரை ஈர்க்கும் கலை கருவில் உருவாகித் திருவாய்த் திகழ்ந்தவர்! பராசக்தி காலத்திலிருந்து தளபதி அவர்கள் தலைமை தாங்கும் இன்று வரை கலைஞர் என்னும் காந்த ஈர்ப்பாற்றல் கடுகளவும் குறையாமல் நெடுகவே நீண்டு வருகின்றது. நூற்றாண்டு கடந்தாலும் வீற்றாண்டு விளங்குபவர்;

போற்றீண்டு பொலிபவர்; காற்றீண்டு உலவிடும் காலமெலாம் காலூன்றி நிலைத்திருப்பவர் கலைஞர்! மலையாய் உயர்ந்து நிலையாய்த் திகழ்ந்து இன்று அலைகடல் ஓரம் அண்ணாவிற்கு அருகில் தலைவைத்துத் துயிலும் தலைவர் கலைஞர் அவர்களுடன் எத்தனையோ சந்திப்புகள், என் வாழ்வில்! அத்தனையும் சிந்திப்புகள்!மறக்க முடியுமா என்றவர் கலைஞர்; மறக்க முடியாதது ஒவ்வொன்றும்!

1965! இந்தி எதிர்ப்பு வரலாற்றில் எரிமலை வெடித்துச் சிதறித் தீயாய்க் குழம்பாய், ஆறாய் வெளிப்பட்ட நேரம்! எங்கெங்கும் தமிழ்நாட்டில் எழுந்தது போராட்டம்! மாணவர்களே மறவர்களாய் மாறினர்; மைய அரசைச் சீறினர்; மாநிலத் தடைகளை மீறினர்; மார்பை நிமிர்த்தி மடமடெனச் சிறைகள் ஏகினர்! பூக்குளித்த புதுமையாய்த் தீக்குளித்த செம்மல்கள்! அண்ணா தூண்டி விட்டார், அதனால் மாணவர்கள் எல்லை தாண்டிவிட்டார் என ஆட்சியில் இருந்தோர் அலர் எழுப்பினர்.

கலைஞர் கனல் பேச்சால் , கருத்தொளிர் எழுத்தால் களம் ஆக்குகின்றார் தமிழ்நாட்டை; கலங்க வைக்கின்றார் கோட்டை; எனக் காங்கிரசு அரசு கண்டபடி ஆடியது வேட்டை; கைகூப்பிக் காலில் விழுந்து வரவேற்றது இந்தி எனும் தீட்டை! இவரை விட்டால் போச்சு வெளியே; இட்டால் சிறையில் தனியே, எல்லாம் ஆகும் சரியே என்று நொண்டிக் கொண்டிருந்த அரசு தண்டிக்கத் துடித்தது கலைஞரை! “பாளையங்கோட்டைத் தனிமைச் சிறை; பாம்பு, தேளோடு உறை” என்று கலைஞரை இருட்சிறைக் கம்பிகளுக்குப்பின் இட்டது மருட்சி கொண்ட மாநில அரசு! கழகத் தலைவர்களுள் கலைஞர் ஒரு கரிகாலன் ஆனார்; கடுஞ்சிறையிருந்தும் கொட்டினார் முரசு!

நீறு பூத்த நெருப்பாக மாறியது போராட்டம்! மெச்சத் தகுந்த மேன்மையுடன் திகழ்ந்தது அன்றைய பச்சையப்பன் கல்லூரி! அதில் ஆறு ஆண்டுகள் தமிழ் பயிலும் பேறு பெற்றவன் நான்; வீறு கொள்ளக் கற்றவன் அங்கு! இந்தி எதிர்ப்பு மறியல் போராட்டத்தில் சிறை சென்று மகிழ்ந்தவன் நான். இளங்கலை (பி.ஏ;) இரண்டாம் ஆண்டு படிக்கையில் தமிழ் மன்றச் செயலராகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். முதலில் கனலுரைக் கலைஞரைக் கல்லூரிக்கு அழைக்க வேண்டும் எனக் கருதினேன்.அந்த 1965 ஆம் ஆண்டுதான் கலைஞரை நேரில் கண்டது.

மன்றத் தலைவர் பா.மாசிலாமணி, க. துரைப்பாண்டியன், க.இலலிதவேலன், நான் என நாங்கள் நால்வர் கோபாலபுரம் இல்லம் போனோம், வீட்டுத் தாழ்வாரத்தில் அமர்ந்தோம். கொஞ்ச நேரத்தில் குளித்த தலையைத் துவட்டி கொண்டே கைலி கட்டிய கவின் தோற்றத்தில் கலைஞர் வந்தார். வணங்கினோம், வரவேற்றார்; நேயமாய்ப் பேசினார்; நேரம் போனதே தெரியவில்லை.தமிழ் மன்றத்தைத் தொடங்கி வைக்கத் தாங்கள் வரவேண்டும் என்றோம். இரண்டு வாரம் நேரம் இல்லை; நாவலரைக் கேளுங்கள் தொடக்க விழாவிற்கு! நான் தனியாக வந்து உரையாற்றுகிறேன் என்றவர் நாளும், கவிப் புரட்சி என்னும் தலைப்பும் தந்தார். எங்கள் களிப்பிற்கு எல்லையே இல்லை; மகிழ்ச்சி வெள்ளத்தில் நீந்தினோம், இவ்வளவு எளிதாகப் பார்க்க முடியும், இனிதாகப் பேச முடியும் என்று நாங்கள் எண்ணவே இல்லை! ஆனால் சில காரணங்களால் கலைஞர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்கவில்லை.

1967 ஆம் ஆண்டு பி.ஏ; பட்டம் பெற்றவர்களுள் மிகச் சிறந்தவர் என்ற கல்லூரி விருது எனக்கு கிடைத்தது. எம்.ஏ; தேர்வில் பல்கலைக்கழக முதன்மையுடன் முதல் வகுப்பில் தேர்ச்சியடைந்து பொற்பதக்கங்களும் பரிசுகளும் பெற்றேன். கலைஞரைக் கோட்டையில் கண்டு பரிசு பதக்கங்களைக் காட்டியபோது கழக மாணவனாய் இருந்து முதன்மை பெற்றது பெருமகிழ்ச்சி ; மற்ற மாணவர்களுக்கு ஓர் எடுத்துக் காட்டு என்று மகிழ்ச்சியுடன் வாழ்த்தினார்.

பேராசிரியர்
மா. செல்வராசன்

1967 ஆம் ஆண்டு அதே பச்சையப்பன் கல்லூரித் தமிழ் மன்றத் தலைவராகத் தேர்தெடுக்கப்பட்டேன். 1968 ஆம் ஆண்டு நான் ஏற்பாடு செய்த முத்தமிழ் விழாவிற்குப் பேறறிஞர் அண்ணாவுடன் கலைஞரும் வருகை தந்தார். முத்தமிழ் விழா மலருக்கு அட்டை ஓவியம் தந்து உதவியவர் முரசொலி செல்வம் அவர்கள் . முரசொலி மாறன் அவர்கள் நாடாளு மன்றத் தேர்தலில் தோன்றிய அந்தத் தூயவர் தொடர்பு நேயவர் நட்பு இன்றும் துலங்குகின்றது.

நான் சென்னைப் பல்கலைக்கழகத்தில் டாக்டர் பட்ட ஆராய்ச்சி மாணவனாக இருந்தேன் . அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அரசியல் காழ்ப்புக்கு ஆளாகி அடாது செய்த மாணவர்கள் செயலுக்கு மாற்றாகச் செயற்பட வேண்டும் என்று விரும்பினேன் . ஆராய்ச்சி மாணவர் பேரவை ஒன்று உருவாக்கினேன் . அதன் சார்பில் டாக்டர் பட்டம் பெற்ற கலைஞருக்குப் பாராட்டு விழா நடத்த முடிவு செய்தேன்.அந்த முயற்சிக்கு உடனிருந்து முழுமையாக ஆராய்ச்சி மாணவ நண்பர்கள் உதவினர்.

கலைஞரிடம் இசைவுபெற ஒருநாள் மாலை கோபாலபுரம் இல்லம் சென்றேன். மாடிக்கு என்னை அழைத்த கலைஞர், புறப்படத் தயாராக இருந்தார், பாராட்டு விழாவிற்கு நேரம் தருமாறு கேட்டேன். அமெரிக்கப் பயணம் அடுத்த சில நாட்களில் ! அதற்குமுன் எங்கே நேரம் இருக்கிறது?அமெரிக்கா போய்வந்தபிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று எழுந்து நடந்தார். நேரம் தராவிட்டால் இங்கேயே மறியல் செய்வேன் என்று முதல்வர் என்றும் பாராமல் முரட்டுத்தனமாகக் கூறினேன். என்னய்யா, எப்போதும் சண்டைதானா? இருக்கிற நெருக்கடியை எடுத்துச் சொன்னாலும் உனக்குப் புரிய வில்லை, சரி வருகிறேன் என்றார்.உடன் வந்தவர்கள் வெலவெலத்துப் போயினர். முதல்வர் முன் இப்படியா முரட்டுத்தனம் காட்டுவது என்றனர் . ஆனால் கலைஞரோ மதிப்புக் குறைவாகக் கருதவில்லை; மாணவர்களை மதிப்பவர், மாணவர்கள் உரிமையுடன் பேச இடம் தருபவர். அதனால் அன்புக் குரலாகவே கேட்டார்!

அன்று நடந்த விழா இன்றும் மனக்கண்ணில் காட்சி தருகின்றது, கலைஞர் வருகைக்காக ஆர்க்காடு நவாபு அரசவையாக ஒரு காலத்தில் இருந்த சென்னைப் பல்கலைக்கழகச் செனட் மண்டபம் மூடிக்கிடந்தது. அதனைத் திறந்து புதுப்பிக்கச் செய்தோம்; அதற்குப் பேருதவியாக இருந்த அன்றைய துணைப் பதிவாளர்(பின்னர் கலைஞரால் பதிவாளர் ஆனவர்) செ.க. குமாரசாமி மறக்க முடியாதவர்!மேளதாளம், பேண்டுவாத்தியம் என ஆர்வமிகுந்த வரவேற்பு. 250 ஆராய்ச்சி மாணவர்களுடன் கலைஞர் அருந்தும் தேநீர் விருந்து ! விழாக் கோலமாக விளங்கியது பல்கலைக்கழகம் ! ஒன்றிய நிதியமைச்சர் மோகன் தாரியாவும் பதினைந்துக்கு மேற்பட்ட உலகப்புகழ் பெற்ற பல துறைகளின் பேராசிரியர்களும் கலைஞரைப் பாராட்டினர்; வாழ்த்தினர்; போற்றினர்! வானளாவப் புகழ்ந்தனர். பேரறிவாளர்களான பேராசிரியர்கள் கலைஞரின் பெருமைகளை இவ்வளவு பேசுவார்கள் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. இந்தியாவின் மூத்த முதல் மூன்று பல்கலைக்கழகளில் ஒன்று சென்னைப் பல்கலைக்கழகம். செனட்தான் பட்டம் வழங்க வேண்டும்; செனட் உறுப்பினர்களான பேராசிரியர்கள் பாராட்டிப் பேசியதும் துணைவேந்தர் தலைமை தாங்கியதும் கலைஞருக்கு டாக்டர் பட்டம் வழங்கியது போலவே ஆயிற்று. களிப்பு வெள்ளம் கரைபுரண்டு ஓடியது, ஆராய்ச்சி மாணவர்கள் கலைஞருக்கு அளித்த ஆரவாரமான வரவேற்பையும் கற்றவரிடையே கலைஞர்க்கு இருந்த மதிப்பையும் கண்டு ஒன்றிய நிதியமைச்சர் மோகன் தாரியா வியந்து போனார் . கலைஞர் பேசும் போது ஒன்றிய அமைச்சரைப் பார்த்துத் தங்கள் பேரிலேயே தாரியா என்று இருப்பது, தமிழ்நாட்டுக்கு மேலும் நிதி தாரியா என்று கேட்கத் தோன்றுகின்றது என்றதும் ஆரவாரத்தில் மண்டபமே அதிர்ந்தது.



நெருப்பாய் எரிந்த நெருக்கடிக் காலம்; 1976 ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள்; சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர் பணி கிடைத்த மகிழ்ச்சியுடன்டா க்டர் மா. செல்வராசன், தலைவர் கலைஞர் அவர்களிடம் கோபாலபுரம் இல்லத்தில் வாழ்த்துப் பெறும்போது அவர் மகள் வண்ணமலர் இனிப்புப் பெட்டி வழங்கும் காட்சி ! பின்னர் மகள் வண்ணமலர் கண்ணன் திருமணமும் மகன் இளங்கதிர்வீணாபினு திருமணமும் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தன. இப்போது இவர்கள் இங்கிலாந்தில் மருத்துவராக இருக்கின்றனர் .

எங்கள் மகள் வண்ணமலர் மருத்துவம் பயின்றவர். வண்ணமலர் மருத்துவர் கண்ணன் திருமணத்திற்குக் கலைஞர் தலைமை, பேராசிரியர் வாழ்த்து . அப்போது கலைஞர் முதல்வர்.கேட்டதும் ஒப்புக் கொண்ட நாட்டம் பலருக்கு வியப்பு!

கலைஞர் வருகின்றார் என்பதால் காலையில் இருந்தே பரபரப்பு, காவலர் சலசலப்பு. ஒன்பது மணிக்குப் பேராசிரியர் வந்தார், கலைஞரும் பேராசிரியரும் ஒன்றாக வருவார்கள் என்று கருதிக் கலைஞர் வரவில்லையா என்று கவலையோடு பேராசிரியரிடம் கேட்டேன். பாலு வீட்டுத் திருமணம் நடத்திவிட்டு வருவார்; என்னை முன்னால் போகச் சொன்னார் என்றார், ஒன்பதரை மணிக்குக் கவலையாக இருந்த எங்களுக்குக் களிப்பூட்டுவது போல் கலைஞர் கார் வந்தது. வாயிலில் கூட்டம் வரவேற்க! காரில் இருந்து இறங்கியதும் கலைஞருக்கு மாலை சூட்டும்போது அவர் கேட்ட முதல் கேள்வி, பேராசிரியர் வரவில்லையா என்பது !அரை மணி நேரம் முன்னதாகவே வந்துவிட்டார் என்றேன், அவர் திருமணத்தை நடத்தவில்லையா என்று அடுத்துக் கேட்டார்.என் மகள் திருமணம், தங்கள் தலைமையில் நடத்த வேண்டும் என்று ஆர்வமாக இருக்கும்போது அவர் எப்படி நடத்துவார் என்றேன். எனக்கு இன்னொரு நிகழ்ச்சி இருக்கின்றது;போக வேண்டாம் என்கின்றாயா என்று மறுகேள்வி. அது உங்கள் விருப்பம் என்று சொன்னேன். விசயகாந்த் வீட்டுத் திருமணம், அதற்குப் போக வேண்டும் என்றார்; அது உங்கள் விருப்பம் என்றேன்.அப்படியானால் இப்படியே போகட்டுமா என்றார். அதுவும் உங்கள் விருப்பம் என்று தடுமாறிச் சொல்லிவிட்டேன்.

கலைஞர் விடுவிடெனக் காரில் சென்று அமர்ந்துவிட்டார், நானோ, அச்சடித்த பதுமை என்பார்களே அப்படி அசையாமல் நின்று விட்டேன். கூடியிருந்த கூட்டத்தில் ஒரே பரபரப்பு, என் நண்பர்கள், தலைவரே இறங்கி வாருங்கள் என்று சத்தமிட்டு அழைத்தனர், ஏன் குரலெடுத்துக் கூவினர் என்றே கூற வேண்டும். சூழ்ந்திருந்த ஆர்க்காடு வீராசாமி முதல் காவல் அலுவலர்கள் வரை ஒன்றும் தோன்றாமல் நின்றனர். சில வினாடிகள் சென்றதும் கலைஞர் காரிலிருந்து இறங்கி மாடியிலிருந்த மண விழா அரங்கத்திற்கு வேகமாகப் படியேறினார், நானும் மற்றவர்களும் பின்னால் ஓடினோம்.

கலைஞர் திருமணத்தை நடத்திவைத்து வாழ்த்துரையில், தம்பி செல்வராசன் பேசுவதில் கெட்டிக்காரர் என்றார்.என்ன பொருளில் குறிப்பிட்டார் என்று எனக்கு விளங்கவில்லை .வைதிகத் திருமணத்தில் சம்பந்திச் சண்டை நடக்கும். அதுபோல நான் கோபித்தது போல் போகட்டுமா என்று காரில் அமர்ந்தேன், அவருடைய நண்பர்களெல்லாம் அலறிப் புடைத்து அழைத்தார்களே தவிர, அப்போதும் தம்பி செல்வராசன் அழைக்கவில்லை, தம்பி தவறு செய்தால் அண்ணன் மன்னிப்பது தான் அழகு என்று வாயிலில் நடந்த நிகழ்ச்சியை வண்ணமாக மாற்றினார்.அவ்வளவு பரபரப்பிலும் நான் அழைக்காமல் நின்று விட்டதைக் கூர்ந்து கவனித்துள்ளார். அவர் கூர்த்த மதிக்கு இது ஒரு சான்று!

2008 பத்தாண்டுகளுக்குப் பிறகு எங்கள் மகன் மருத்துவர் இளங்கதிர்மருத்துவர் வீணாபினு திருமணம் . இராசா முத்தையா அரங்கம்.தலைமை தாங்கி நடத்த வேண்டும் என்று வேண்டியதும் கலைஞர் தட்டாமல், தயங்காமல் சரி என்றார் என்று என் வரவேற்புரையில் குறிப்பிட்டேன். திருமணத்தை நிகழ்த்திய பின் வாழ்த்துரையில் கலைஞர் , தம்பி செல்வராசன் என்னை அழைத்ததும் நான் வருவதற்கு உடனே ஒப்புக் கொண்டதாகச் சொன்னார்; அது அவர் மீதுள்ள பற்றினால் அல்ல; பயத்தினால் ! அவரைப் பற்றிச் சிலர் என்னிடம் எதிராகச் சொன்னார்கள்.எல்லாவற்றையும் எந்தக் காதில் கேட்டேனோ அந்தக் காதிலேயே விட்டுவிட்டேன் .அவர் மகள் திருமணத்திற்கு வந்துவிட்டு வேறு ஒரு திருமணத்திற்குப் போக வேண்டும் என்றதும் அவர் என்ன சொன்னார் என்பது நினைவில் இருக்கின்றது என்று பத்தாண்டுகளுக்கு முன் எங்கள் மகள் திருமணத்தின் போது நடந்ததை எழுத்துமாறாமல் எடுத்துரைத்தார். அரங்கமே மலைத்துப்போய் அவரது நினைவாற்றலை எண்ணி அதிர்வேட்டாகக் கையொலி எழுப்பிக் களித்தது. அந்த நிகரற்ற நினைவாற்றல் அவரது நிலையாற்றல்!

என் துணைவியார் முனைவர் ஆ.அமிர்தகௌரி அவர்கள் சென்னை இராணி மேரி கல்லூரித் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியவர்;அப்போது அவர் எழுதிய சங்க இலக்கியத்தில் உரையாடல் என்னும் பிஎச்.டி; ஆய்வு நூலுக்கு அணிந்துரை ஒன்று கைப்பட எழுதித் தருமாறு வேண்டினோம் . முதல்வராக இருந்தும் அழகான கையெழுத்தில் அருமையான அணிந்துரையை மூன்றே நாள்களில் வரைந்து வழங்கினார்.

ஆயிரம் பணிகளுக்கு இடையிலும் அணிந்துரை எழுதிய ஆற்றல் அவரது இலக்கியம் போற்றல் ஆர்வத்திற்கும் அரும்புலமைக்கும் சான்றாகும்.

எப்போது போனாலும் என்னைப் பார்ப்பார், பெரும்பாலும் நேரம் பெற்றே அவரைப் பார்ப்பேன். உண்மையில், கலைஞர், கடைசித் தொண்டனைக் காண்பதிலும் கரைகடந்த இன்பம் கண்டவர்; காலை,பகல்,மாலை, இரவு என நான்கு வேளையும் ஆர்வமாய்ச் சந்தித்தவர் . அவரளவுக்குப் பலரையும் பார்த்த தலைவர் தமிழ்நாட்டில் வேறு எவரும் இல்லை!

வைகறை மலர்கள் என்னும் என்னுடைய கவிதை நூலுக்கு வழங்கிய அணிந்துரையில் இளந்தலை முறையின் நம்பிக்கை நட்சத்திரங்களுள் ஒருவர் என நான் செல்வராசனைக் கருதுகிறேன் என்று குறிப்பிட்டார், பிறகு அந்த நூலை அவரே வெளியிட்டார்.

மறைந்த சூ.இரா. கருப்பண்ணன் அவர்கள் நீண்ட நாள் அவருடைய நேர்முகத் துணைவராக இருந்து ஐ.ஏ.எசு ஆனவர். ஒருமுறை கடற்கரையில் நடந்து கொண்டிருந்த போது எதிர்ப்பட்டார். அப்போது பணியில் எனக்குச் சில இடர்கள், அவற்றைப் பற்றிப் பேசியபின் சொன்னார்,எல்லாவற்றுக்கும் கலைஞரிடம் நீங்கள் அறிமுகப்படுத்தியவரே காரணம் என்று! கலைஞருக்கு உங்களை மிகவும் பிடிக்கும் ;உங்கள் மேல் நல்லெண்ணமும் நம்பிக்கையும் கொண்டவர். அதனால் செல்வராசன் கேட்பதைச் செய்து கொடுங்கள், என்னைக் கேட்க வேண்டும் என்பதில்லை என்று என்னிடம் சொல்லியிருந்தார் என்றார் . கலைஞரின் இந்த நம்பிக்கைக்கு என்ன கடுந்தவம் செய்தேனோ?



## நேர்மை என்பது யாதெனின்?

எந்த ஒரு தீய செயலையும், கொலை, கற்பழிப்பு போன்ற கொடுஞ்செயலையும், அவற்றால் ஏற்படக் கூடிய விளைவுகளை நினைத்துப் பார்ப்பதால் தவிர்ப்பது என்று அல்லாமல்; அந்தக் கெடு நினைப்பு இயற்கையாகவே தோன்றாமல் இருப்பதுதான் “நேர்மை” எனப்படும் ! அந்த நேர்மையாளர்கள்தான், மனிதநேய முடையார் வரிசையில் வைத்துச் சிறப்பிக்கப்படுவர்.

**- கலைஞர்**



## பண்பாடு போற்றுதல் !

பண்பாடு போற்றும் பாங்கு, பழைமைச் சமுதாயத்திற்கு மட்டுமல்ல; பகுத்தறிவுப் பாதையில் பயணிக்கும் முற்போக்குப் புதுமைச் சமுதாயத்திற்கும் உரியதாகும் என்ற பொதுவான சிந்தனையின் அடிப்படையில், தொடர்புடைய கருத்துகள் செயல் வடிவம் பெறுவது “உன்னையே நீ அறிவாய்” என்ற சாக்ரடீசின் போதனையைப் புரிந்து கொண்டு, தன்னையே உணர்ந்து “தன்னை வென்றால் தரணியை வெல்ல முடியும்” எனும் நம்பிக்கை கொண்ட மக்கள் சமுதாயத்திற்குப் புது வழியை, புரட்சிகரமான வழியைக் காட்டக் கூடியதாகும்.

**- கலைஞர்**

# கலைஞரின் தத்துவப் போராட்டங்கள்!




உலக அளவில் பல அரசியல் தலைவர்கள் எழுத்தாளர்களாகவோ கவிஞர்களாகவோ இருந்திருக்கிறார்கள். அவர்களுடைய ஒன்றிரண்டு நூல்கள்கூட வெளிவந்திருப்பது ஆச்சரியமல்ல. ஆனால் வெகுசில தலைவர்களே தங்களுடைய ஒட்டுமொத்த அரசியல் வாழ்விலும் எழுத்தை ஒரு பிரதான ஆயுதமாக கைக்கொண்டிருக்கிறார்கள். அப்படி தன் எழுத்து களின் வழியே தனது தத்துவங்களையும் சிந்தனைகளையும் தொடர்ந்து முன்வைத்து ஒரு பெரும் இயக்கத்தைக் கட்டி எழுப்பியது மட்டுமல்ல, ஒட்டுமொத்த சமூகத்தோடும் பெரும் உரையாடல்களை வாழ்நாளெல்லாம் நிகழ்த்தியவர்களென்றால் உலக அளவில் ரஷ்ய புரட்சியின் தந்தை லெனின் போன்ற வெகுசிலரையே குறிப்பிட முடியும். இந்தியாவில் காந்தியடிகளும் அண்ணல் அம்பேத்கரும் அப்படி அரசியல் செயல்பாடுகளினூடே பெருமளவு எழுத்துப் பிரதிகளை உருவாக்கியவர்கள். தமிழ்நாட்டில் தந்தை பெரியாரின் பேச்சுகளும் எழுத்துகளும் பல தொகுதிகளாக வெளிவந்தன. அந்த வரிசையில் ஒரு அரசியல் தலைவராகவும் ஆட்சித் தலைவராகவும் கலைஞர் எழுதிக்குவித்த பல லட்சம் பக்கங்கள், அவரது அரசியல் போராட்டங்களுக்கும் தத்துவப் போராட்டங்களுக்கும் சாட்சியங்களாகத் திகழ்கின்றன.

கலைஞரின் அரசியல் அறிக்கைகள், உடன்பிறப்புக்கு எழுதிய கடிதங்கள், மேடைப் பேச்சுகள், சட்டமன்ற உரைகள், பேட்டிகள், முரசொலி தலையங்கங்கள் என அனைத்தும் கால வரிசையில் தொகுக்கப்பட்டு இன்று பார்வைக்குக் கிடைக்கின்றன. இவற்றை முறையாக ஆய்வு செய்யும் எவருக்கும் கலைஞர் ஒரு அரசியல் தலைவர் மட்டுமல்ல, ஒரு சித்தாந்த தலைவரும்கூட என்பது தெட்டத்தெளிவாகத் தெரியும். சமூக நீதி, மாநில சுயாட்சி, நில சீர்திருத்தம், சமூக நலத்திட்டங்கள், சமூக சீர்திருத்தம், தொழில் வளர்ச்சி, தமிழ் அடையாளம், பண்பாட்டுப் போராட்டங்கள், பாலின சமத்துவம் என ஒவ்வொன்று குறித்தும் கலைஞரினுடைய நிலைப்பாடுகளை மிகத் துல்லியமாக இந்த எழுத்துகளிலும் பேச்சிலும் காணலாம். அவை உடனடி அரசியல் எதிர்வினைகள் மட்டுமல்ல, கடந்த கால வரலாற்றிலிருந்தும் எதிர்காலத் தொலைநோக்கிலிருந்தும் அவர் ஒவ்வொன்றையும் அணுகுகிறார். ஒரு பிரச்சினையின் வெவ்வேறு பரிமாணங்களை கலைஞருடைய கண்கள் கூர்ந்து நோக்குகின்றன. கலைஞரின் எழுத்துகளில் நான் இரண்டு அம்சங்களை தொடர்ந்து காண்கிறேன். ஒருபோதும் அடிப்படைக் கொள்கைகளை விட்டுக் கொடுக்காத உறுதிப்பாடும் அதற்கான இடையறாத போராட்டமும், இன்னொருபுறம் காலத்தின் தேவைகளுக்கும் சந்தர்ப்பங்களின் நெருக்கடிகளுக்கு மேற்ப சில விட்டுக்கொடுத்தல்களும்.

இதில் சிலர் முரண்பாட்டைக் காணலாம். ஆனால் அரசியல் என்பதும் அதிகாரம் என்பதும் ஒரு நேர்கோட்டுப் பாதையல்ல. அது வளைவுகளும் செங்குத்தான மலையேற்றங்களும் பள்ளத்தாக்குகளும் நிறைந்த ஒரு பயணம். ஒரு கட்சியையும் ஆட்சியையும் காலத்திற்கேற்ப பாதுகாத்தால் மட்டுமே தான் ஏற்றுக்கொண்ட சமுதாயக் கடமைகளுக்கும் லட்சியங்களுக்கும் பங்காற்ற முடியும் என்பதில் கலைஞர் தெளிவாக இருந்தார். நடைமுறையில்அந்தலட்சியங்கள்நிறைவேற்றப்படுவதற்கு என்ன உத்திகள் தேவையோ அதைப் பயன்படுத்தினார். உலக வரலாற்றில் பல அரசியல் இயக்கத் தலைவர்கள் காலத்திற்கேற்ப செய்துகொள்ள வேண்டிய இந்த வளைந்துகொடுக்கும் தன்மை இல்லாததால் தங்கள் அரசியலையும் அரசியல் இயக்கத்தையும் இழந்திருக்கின்றனர் என்பதற்கு பல உதாரணங்கள் இருக்கின்றன. கொள்கையில் அசையாத இரும்பின் உறுதி, செயலில் வளைந்து கொடுக்கும் உடையாத பச்சை மூங்கிலின் தன்மை. இந்த இரண்டையும் கலைஞர் எப்படி ஒருசேரக் கையாண்டார் என்பதைப் பல்வேறு பிரச்சினைகள் குறித்த அவரது எழுத்துகளில் காணலாம்.

கலைஞர், அவரது மிக இளம்வயதுக் காலம் தொட்டு பேச்சையும் எழுத்தையும் தனது முதன்மையான அரசியல் கருவியாகக் கையாண்டார். அவரது இளமைக்கால எழுத்துகளில் அன்றைய காங்கிரஸ் அரசின் மாநில உரிமைகளுக்கு எதிரான போக்குகள் குறித்தும் எதேச்சாதிகாரப் போக்குகளுக்கெதிரான மிகக் கூர்மையான பார்வைகள் வெளிப்பட்டன. அதேசமயத்தில் இடதுசாரிகளோடு தீவிரமான தத்துவார்த்தப் போராட்டங்களை நடத்தினார். வர்க்கப் போராட்டம் மட்டுமே சமுதாய ஏற்றத் தாழ்வுகளுக்கான தீர்வு என்ற இடதுசாரிப் பார்வையைக் கடந்து வர்க்கத்தோடு சாதிய ஏற்றத் தாழ்வுகளும் ஒழிக்கப்பட்டால்தான் உண்மையான சமத்துவம் வளரும் என்பதில் கலைஞர் தெளிவாக இருந்தார். கலைஞர் காங்கிரஸோடும் இடதுசாரிகளோடும் அன்று நடத்திய தத்துவப் போராட்டங்கள் பெரியார் மற்றும் அண்ணா வழியில் திராவிடச் சித்தாந்தத்தின் வலுவான அடித்தளத்தை உருவாக்கின. பிற்காலத்தில் கலைஞரின் இந்தப் பார்வைகளே அவரது ஆட்சித் தத்துவமாகவும் மாறியது. ஒட்டுமொத்த தமிழ்நாடு அரசியலும் அந்தப் புள்ளிக்குப் பிற்காலத்தில் வந்து சேர்ந்தன.

கலைஞர் தன் எழுத்துகளை அரசியல் பிரகடனங்களுக்கான நேரடிக் கருவியாக மட்டும் பயன்படுத்தவில்லை. தனது சமுதாய நோக்கை வெளிப்படுத்த அவர் எல்லா ஊடகங்களையும் கலை வடிவங்களையும் பயன்படுத்தினார். அவர் நாடகங்களை எழுதினார். அவரே அதில் நடிக்கவும் செய்தார். பத்திரிகை நடத்தினார். அவரே அதில் எழுதவும் செய்தார். அந்தந்தக் காலகட்டத்தின் அரசியல் பிரச்சினைகளை, சமுதாயப் பிரச்சினைகளை தனது திரைப்பட வசனங்களில் வெகு கூர்மையாகப் பயன் படுத்தினார். அரசியல் கருத்துகள், அரசியல் மேடைகளில் சொல்லப்படும்போது நேரடியாக அந்த அரசியலைக் கவனிப்பவர்களை மட்டுமே போய்ச்சேரும். மாறாக ஒரு கலைவடிவத்தில் அதைச் சொல்லுகிறபோது அரசியலில் நேரடியாக ஈடுபாடு அற்றவர்களிடமும் அந்தக் கருத்துகள் ஆழமாகச் சென்றடையும் என்பதை கலைஞர் புரிந்து கொண்டிருந்தார். அப்படித்தான் அவரது அரசியல் சிந்தனைகள் தமிழ்நாட்டின் கடைக்கோடி மனிதன்வரை சென்றடைந்தன. அவரது வசனங்கள் தமிழ்ப் பேச்சு வழக்கின் ஒரு பகுதியாகவே மாறின என்று சொல்லலாம். கதைகளாகவும் கவிதைகளாகவும் கட்டுரைகளாகவும் அரசியல் அறிக்கைகளாகவும் கலைஞர் தொடர்ச்சியாக தமிழ் மனங்களின்மேல் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தினார்.



கவிஞர் மனுஷ்ய புத்திரன்

கலைஞருடைய சமூகநீதி அரசியல் பெரும் வெற்றி பெற்றதற்குக் காரணம் அவர் அதை தமிழ்ப் பண்பாட்டு அரசியலோடு வெற்றிகரமாக இணைத்ததுதான். சாதிகளாகவும் வர்க்கங்களாகவும் கிராமம், நகரம் எனவும்; படித்தவர் படிக்காதவர் எனவும் பிளவுண்டு கிடந்த தமிழ்ச் சமூகத்தை ஒரு ஒற்றைப் புள்ளியில் இணைத்தால் மட்டுமே சமூக நீதி அரசியலையும் அதற்கான அதிகாரத்தையும் கொண்டுசெலுத்த முடியும் என்பதைப் புரிந்துகொண்ட கலைஞர் தமிழ் அடையாள அரசியலை தன் எழுத்துகளில் முதன்மைப்படுத்தினார். தமிழ்ப் பண்பாட்டு மரபின் வலிமையான கூறுகளை அவர் தொடர்ந்து முன்னெடுத்துச் சென்றார். அய்யன் திருவள்ளுவரையும் கண்ணகியையும் தமிழ் இலக்கியத்தின் தமிழ்ப் பண்பாட்டின் அடையாளங்களாகக் கட்டி எழுப்பினார். இந்த இரண்டு திருவுருக்களுமே தமிழ்ச் சமூகத்தின் ஆதாரமான மையப்புள்ளிகள் என்பதை கலைஞர் வெற்றிகரமாக நிறுவினார். ஆட்சித் திறனில் ராஜராஜ சோழன், தமிழ் அடையாளத்தின் மற்றொரு பகுதியாக மாற்றப்பட்டார். தமிழ்நாட்டின் மதரீதியான பிம்பங்களும் குறியீடுகளும் பின்னுக்குத் தள்ளப்பட்டு கலைஞர் உருவாக்கிய தமிழ்ப் பண்பாட்டு அடையாளங்கள் முன்னிலை பெற்றன. பல்வேறு பண்பாட்டு அடையாளங்களை தனதாக்கிக்கொள்ளும் இந்துத்துவா பேரினவாதத்தால் இன்று வரை அய்யன் திருவள்ளு வரையும் கண்ணகியையும் ராஜராஜ சோழனையும் எவ்வளவோ முயற்சி செய்தும் தனதாக்கிக்கொள்ள முடியவில்லை என்றால் அதற்கு முதன்மையான காரணம் அந்த அடையாளங்களை திராவிட அடையாளங்களாக உறுதியான தமிழ் அடையாளங்களாக கலைஞர் நிறுவியதுதான்.

இவை எல்லாவற்றையும் தீர்மானித்தது உறுதியான தெட்டத்தெளிவான கலைஞரின் தத்துவப் போக்குகள்தான். அவர் ஒருபோதும் பழமை வாதத்தோடும் மதவாதத்தோடும் சமரசம் செய்துகொண்டதில்லை. மாநில உரிமைகளுக்கான போராட்டத்தை எந்த நிலையிலும் விட்டுக்கொடுத்ததில்லை. தேசிய அரசியலில் அவர் முதன்மையான பங்கு வகித்த காலத்தில்கூட மாநில அரசியலை அவர் விட்டுத்தந்ததில்லை.

கலைஞர் தனது எல்லா முடிவுகளையும் ஆவணப்படுத்தியிருக்கிறார். அதற்கு விளக்கமளித்திருக்கிறார். ஒரு எழுத்தாளர், ஒரு சிந்தனையாளர், ஒரு மாபெரும் இயக்கத்தின் தலைவர், ஒரு மாநில முதலமைச்சர், மன உறுதி குன்றாத போராளி என அத்தனை பரிமாணங்களிலும் கலைஞர் எப்படி நிகரற்ற ஒருவராக தன்னைக் கட்டமைத்துக்கொண்டார் என்பதற்கு அவர் விட்டுச் சென்றிருக்கும் எண்ணற்ற பக்கங்கள் சாட்சியங்களாக இருக்கின்றன.

கலைஞரின் அரசியல் சரிதத்தை எழுத விரும்பும் எவரும் எதையும் எங்கும் தேடிச்செல்ல வேண்டியதில்லை. அவரே எல்லா சரித்திரச் சான்றுகளையும் விட்டுச் சென்றிருக்கிறார். ஒரு எழுத்தாளன் எழுத்தின் வழியே தன் காலத்தை எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்பதற்கு மட்டுமல்ல, அதை எப்படி மாற்றியமைக்க வேண்டும் என்பதற்கும் கலைஞரின் எழுத்துகளும் அதன் வழியே அவர் நடத்திய தத்துவப் போராட்டங்களும் சாட்சியமாக நிற்கின்றன.



## இளைஞனின் கனவு!

நன்கு கற்றுத் தெளிந்து தேர்ந்து நாம் ஈடுபாடு கொண்ட துறையில் நடு நின்ற நாயகமாய் நாடு போற்றத் திகழ்வோம்; என்பதே ஒவ்வொரு இளைஞனும் காண வேண்டிய கனவு - அந்தக் கனவு காண்பதற்காக உறங்க வேண்டிய அவசியமில்லை

மாறாக; அந்தக் கனவு கண்டிட விழித்தெழுக! விழித்தெழுந்தால் மட்டுமே; கனவுகள் நிறைவேறும் எதைப் பற்றியும் கனவு காண்பது எளிது; அந்தக் கனவு, கடின உழைப்பின்றி நிறைவேறும் என்பது அரிது!

எனக்கு மிகவும் பிடித்த பொன்மொழிகளில் ஒன்று; “நீண்ட தூரம் ஓடினால்தான், அதிக உயரம் தாண்ட முடியும்” என்பதாகும்.

- கலைஞர்



## உடல்நலத் துறை!

நடைப்பயிற்சி மூலம் முக்கியமாக உடலின் எடையைக் குறைப்பது மூச்சுப் பயிற்சி மூலம் சுவாசப் பைகளை முறையாக இயங்கச் செய்வது - குருதியோட்டத்தைச் சீராக்கிக் கொள்வது - அதன் அடிப்படையில் இருதயத்துக்குப் பாதுகாப்பு உருவாக்குவது - யோகப் பயிற்சி மூலம் எலும்புகள், நரம்புகளுக்கு வலுவூட்டுவது - தியானப் பயிற்சி மூலம் மன அமைதி காண்பது; இவை போன்றவை வாழ்வுக்கு இன்றியமையாதவை என்பதை உணர்ந்து; எத்தனையோ துறைகள் பற்றிய நூல்களைப் படிக்கின்ற நாம்; உடல்நலத் துறை குறித்து விளக்கமளிக்கின்ற நூல்களையும் படிக்கின்ற ஆர்வத்தைப் பெறுதல் வேண்டும்.

- கலைஞர்

## பக்கத்தில் இருப்பதே பலவீனமா?



பக்கத்தில் இருந்து நமக்குப் பழக்கமானவர், பல்கலை அறிவாளியாக இருப்பினும், பக்கத்தில் இருக்கிறார் என்பதே பலவீனமாகிவிடுகிறது.

வானில் சிறகடிக்கும் வண்ணத்துப் பூச்சியைக் காண்பதில் காட்டும் ஆர்வம்; வண்ணச் சிறகுகளுடன் நம் வீட்டுக் கொல்லையில் நடைபோட்டுக் கொண்டிருக்கும் சேவலின் மீது செல்வதில்லை அல்லவா ?

இப்படியும் நம்மவர் திறனுக்கும் சிறப்புக்கும் நன்மதிப்பு குறைக்கப்படுகின்ற நிலை கண்டு நெஞ்சு பதைத்திடும் வேளையில்; அனுமதி இன்றி நுழையும் ‘அழுக்காறு’ எனும் பாவிக்கு இடம் அளிப்பது என்பது, ‘ கொள்ளை நோய்’க்கும் விருந்து வைப்பது போலத்தான் ஆகிவிடும்.

பிறர்க்கு வரும் நலமும், வளமும், புகழும், பாராட்டும், அனைத்தும் நமக்கு வந்ததாகக் கருதி மகிழ்வதே, அக் கொள்ளை நோய் நம் எல்லைப் பக்கமே எட்டிப் பார்க்க முடியாத தடுப்பு முறையாக அமையும்.

- கலைஞர்

# கவிஞர்கள் பார்வையில் கலைஞர்!



புலவர் இந்திரகுமாரி



சின்னஞ்சிறுமிகள் போட்டிருக்கிற பின்னல் மாதிரி, இருளைக் கிழித் தபடி மின்னல் அடிப்பதைப் பார்த் திருக்கிறீர்களா? அதுதான் அன் றைய இரவை மழையிரவாக ஆக்கப்போகிற ஊழிப் பெருமழைக்கான முன்னுரை.

திருக்குவளையில் தொடங்கிய இளைஞர் கலை ஞரின் கவிதைப் பயணமும் இத்தகையது தான். அது கவிதைக்கான இலக்கணங்களைத் தகர்த்து உணர் வையும் கனவையும் விதைத்த எழுச்சிக் கவிதை களுக்கான முன்னுரை. தன்னுடைய தமிழ்ப் புலமையை காட்டிக்கொள்வதற்காகவோ, தூசு படிந்த மரபுகளைக் காப்பி அடித்து காசு பார்ப்பதற்காகவோ எழுதவில்லை அவர். அந்த வாலிப வயதிலேயே, அவரது ஒவ்வொரு எழுத்திலும் ஒரு அக்கினிக் குஞ்சு அடைகாக்கப்பட்டது. ஒவ்வொரு வார்த்தையிலும் பொறிபறந்தது. சுருங்கக் கூறின் இளைஞர் கலைஞ ரின் எழுத்து யாப்பிலக்கணச் சிறையை அடித்து உடைத்து வெளியே வந்த அக்கினிப் பறவை. அது தான் அவரது பேரடையாளமாக பரிமாணம் பெற்றது.

இலக்கணத் தடைகளைத் துணிவுடன் அத்துமீறி எழுதும் முன்னணிக் கவிஞர்களில் ஒருவரான கலாப் ரியா, எந்தவகையில் கலைஞர் தங்களது முன்னோடி என்பதை, கலைஞரின் மறைவுக்குப்பின் சுட்டிக்காட்டி னார். **“என் கவிதை யாப்பின்றிப் போனாலும் போகட் டும்….. என் மொழியும், இனமும் காப்பின்றி போகக் கூடாது”** என்ற கலைஞரின் வாக்குமூலத்தை அவர் நினைவுபடுத்தினார். தன் பேனா மக்களுக்கானது என்கிற கோட்பாட்டில் கலைஞர் உறுதியாக இருந்த தையே இது காட்டுகிறது.

மூத்த கவிஞரும், தமிழறிஞருமான ஈரோடு தமி ழன்பன், கவிஞர் கலாப்ரியா சொன்னதை வழி மொழிகிறார். **“கவிதையை ஜனநாயகப் படுத்தியவர் கலைஞர். அதனால்தான் அத்தனைக் கவிஞர்களும் கலைஞருக்கு வாக்களிக்கிறார்கள்”** - என்றால் அவர் வெறும் எழுத்தாளராக இல்லாமல், எழுத்தாளர்களின் எழுத்தாளராக, கவிஞர்களின் கவிஞராக கலைஞர் இருந்தார் என்பது இதிலிருந்து புலனாகிறது.

எத்தனை எழுத்தாளர்களின் எழுத்து, ஒவ்வொரு நாள் காலையிலும், லட்சக்கணக்கான வாசகர்களைச் சென்றடைந்திருக்கும்? கலைஞர்தான் அதை சாதித் தார். ஒவ்வொரு நாள் காலையிலும், அவரது முழுப் பக்க எழுத்தோவியம், உறங்கிக்கொண்டிருந்தவர் களையும் தட்டியெழுப்புகிற அளவுக்கு முரசொலியாய் ஒலித்தது. உடன்பிறப்புகள் மட்டுமல்ல, எதிரிகளும் அதை மனப்பாடம் செய்யவேண்டியிருந்தது. அறிவும் ஆவேசமும், மகிழ்வும் நெகிழ்வும் நீக்கமற நிறைந் திருந்தன கலைஞரின் கடித இலக்கியங்களில்! அதில், பொய்மை இல்லை; உண்மை இருந்தது. குரோதம் இல்லை; கோபம் இருந்தது. அந்தக் கோபம் தார்மீகக் கோபம். ஏய்க்கப்படுகிற மக்களின் நிலை கண்டு கொதித்து எழுந்த ஒரு தலைவனின் கோபம். கடிதமா கட்டும், கவிதையாகட்டும்…. அவரது ஆவேச எழுத் துகள் ஒவ்வொன்றும் தமிழ் எழுத்துகளாலேயே தயா ரிக்கப்பட்ட பாஸ்பரஸ். இதைத்தான் தனக்கே யுரிய சுருக்கத் தமிழில் இப்படிச் சொன்னார், கவிக்கோ அப்துல் ரகுமான்.

**“கலைஞரின் பேனா தீக்குச்சி …….**
**தாளில் உரசினால் தீப்பிடிக்கிறது…”**

கலைஞரின் பேனாவோடு உரசிப்பார்க்க முயலும் வாய்ச்சவடால் வீரர்கள், அப்துல் ரகுமான் சொன் னதை நினைவில் கொள்வது நல்லது.

இன விடுதலை பற்றிப் பேசுகிற தகுதி பெரியார் வழி அண்ணாவுக்கும், அண்ணா வழி கலைஞருக்கும், கலைஞர் வழி தளபதிக்கும் இயல்பாக வாய்த்ததைப் பார்த்து எவரேனும் மனக்கிலேசம் அடைந்தால், வர லாறு அவர்களைக் குப்பைத் தொட்டியில் வீசி எறிந்து விடும்.

அவதாரக் கவிஞன் வாலி இதைத்தான் சொன் னார்.

**“இனவிடுதலைக்காக உண்ணாவிரதம் நோற் காமல், அண்ணாவிரதம் நோற்றவன் நீ! அத னால்தான் அண்ணனுக்குப்பின் அண்ண னானாய்….. அந்த மன்னனுக்குப்பின் மன்னனானாய்”**

என்கிற வாலியின் வார்த்தைகள் வலுவானவை.

வாலி குறிப்பிட்டதைப் போல், **“குளித்தலைக்குப் பிறகு குனியாத தலையாகவே இருந் தது கலைஞரின் தலை. சிலர் வாழ்ந்த வாழ்வை அவர்க ளது வண்டவாளம் சொல்லும். கலைஞ ரின் தியாக வாழ்வை கல்லக் குடி தண்டவாளம் சொல்லும்”** என்கிற வாலியின் கவிதை, கொண்ட கொள் கைக்காகத் தன் னையே கொடுக் கத் தயாராயிருப்ப வன்தான் தலைவனாய் இருக்கத் தகுதி படைத்தவன் என்பதை திட்டவட்டமாகத் தெரிவிக்கிறது. வெறுங் கண்ணால் பார்ப்போரைக் காட்டிலும், வரலாற்றுப் பார்வையோடு கலைஞரைப் பார்ப்போருக்கே அவ ரது நிஜமான உயரம் புலப்படும் என்கிற உண் மையை வாலியின் வார்த்தைகள் பலப்படுத்து கின்றன.

**“கலையானாய்! காவலா னாய்! களத்துக்கு வேல்கள் செய்யும் உலையானாய்!”** என்கிற கவிப்பேரரசு வைர முத்துவின் கவிதை, கலை ஞரின் பன்முகத் தன் மையை எடுத்துரைக்கிறது.


**“உன்மீது அடித்த புயல் இமயமலை மீது அடித்திருந் தால் இமயம் கொஞ்சம் இடம்பெயர்ந்திருக்கும்! உன் மீது அடித்த வெயில் சமுத்தி ரம் மீது அடித்திருந்தால் பாதி கடல் பாலையாகியிருக்கும்! நீயோ காற்றில் சவாரி செய் தாய்….. வெயிலை சமாதி செய்தாய்”** என்கிற வைரமுத் துவின் கவிதை, இடர்களை யும் இன்னல்களையும், தடைகளை யும் தடுப்புகளை யும்தகர்த்தெறிந்து முன்னே றிய முத்தமிழறிஞர் கலைஞ ரின் துணிவைக் கொண்டா டுகிறது.

**“வண்ணத்தமிழ்ப் பாக்க ளுக்கு வளைகாப்புச் செய்தவர்”** - என்கிறார் கபிலன். வளைகாப்பு செய்ததுடன் நின்றுவிட வில்லை. தமி ழினத்திற்கு இடப்பட்ட விலங்கை தன்னந்த னியாகத் தகர்த்தெறிந்துவிட்டுத்தான் வேறு வேலை பார்த்தார். இதையும் மறக்காமல் பதிவு செய்திருக்கிறார் வாலி.

**“ஆண்டு 2007ல் எமனிடமிருந்து என்னை மீட்டாய்! அதற்கு முன்…. ஆண்டு 2006ல் ஓர் வுமனிடமிருந்து தமிழ் மண்ணை மீட்டாய்”** என்கிற வாலியின் கவிதை, சமகாலத்திலேயே கலைஞரின் பேராண் மையைப் பதிவு செய்த கவிதை. வாலியின் வார்த்தை கள், கலைஞரின் பேராண்மையை மட்டுமின்றி பேரன்பையும் பறைசாற்றுகின்றன. செந்தமிழால் தன்னை வைதாரையும் வாழவைத்தவர் கலைஞர். தன்மீது வீசப்பட்ட தமிழ் மலர்களைப் போல, தன்மீது வீசப்பட்ட தமிழ் வசைச் சொற்களையும் நேசிக்கும் அளவுக்கு கனிவு இருந்தது கலைஞரின் இதயத்தில்!

**“கலைஞர் என்பது தாயின் ஆண்பால் பெயர். பிறக் காத குழந்தைக்கும் தொட்டில் கட்ட அவரிடம்தான் இதயம் இருக்கிறது”** என்று ஈரோடு தமிழன்பன் குறிப்பிடுவது, இந்தப் பேரன்பைத்தான்! அதற்குக் கார ணம் அண்ணாவின் இதயம் கலைஞரிடம் இருந்த துதான். அருந்தமிழ்க் கவிஞர் மு.மேத்தா சொல்வ தைப்போல், **“அண்ணா ஒரு அணையா விளக்கு! கலைஞர் எண்ணையாக தன்னையே எந்நாளும் தரு வதால் அண்ணா ஒரு அணையா விளக்கு”** என்பது நாம் பெருமிதப்படவேண்டிய பேருண்மை. **“திருக் குவளை இல்லாது போயிருந்தால், தமிழகத்தில் இரு குவளைதான் இருந்திருக்கும்”** என்று கலைஞரின் சிறப்பை கவிஞர் - பேராசிரியர் ஷாஜாகனி மிக எளி மையாக விளக்கி இருப்பார். திராவிட மாடல் பாணி யில் சாதனை படைக்கும் தளபதியின் நேர்த்தியான தலைமையில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் மூவரின் கோட் பாட்டுக்கு வலு சேர்ப்பதாக இருக்கும்.

# நன்னெறி என்பது எது?



எந்தக் குறிக்கோளை அடையவும் அது குவிந்து கிடக்கும் பொருள் வளமாயினும், நில வளமாயினும், அதிகாரமாயினும், மதச் சார் பின்மையாயினும், ஒவ்வொன்றையும் அல்லது அனைத்தையுமே அதிரடித் தீவிரச் செயல்களால்தான் வென்றெடுக்க முடியும் என்ற வேண் டாத நினைப்பை விட்டொழிப்பதுதான் மனித சமுதாயத்திற்கு; சற்றுத் தாமதமாயினும் நன்மை பயக்கக் கூடிய சாத்வீக மார்க்க நன்னெறியா கும்.

“இல்லை; இல்லை ! மூட்டைப் பூச்சியை விரட்ட, வீட்டைத்தான் கொளுத்துவேன்” என்பது விதண்டாவாதமாகும். அதன்படிச் செயல்படு வதும், விபரீதச் செயல் மட்டுமல்ல; விபரம் புரியாதோர் நடத்தும் வேதனைச் செயலுமாகும்! எனவே தீவிரவாதத் தீப்பந்தத்தைக் கீழே போட்டு விட்டு; மூட்டைப் பூச்சியை விரட்டி வீட்டைக் காத்திட; தக்க மருந்து அடிப்போம்; தவறாமல் அகந் தூய்மை, புறந் தூய்மையைக் கடைப் பிடிப்போம் ! தேனில் குழைத்துக் கொடுத்தாலும் ‘ தீவிரவாதம்’ என்பது மருந்தாகி விடாது; தீராத விஷமேயாகும்.

**- கலைஞர்**



# அரசியல்!

அரசியல்; நிலம் போன்றது! அது ஜனநாயகப் பயிர் வளர்க்கப் பயன்பட வேண்டும் - அந்தப் பயிர் மட்டுமே வளர்ந்தால் மனித வளம் - மதச்சார்பற்ற - மத நல்லிணக்க வளம் செழித்துக் குலுங்கும்.

அரசியல் நிலத்தில் தன்னலம் வளர்க்க, களைகளாய்த் தோன்றுவோர்; களையப்பட வேண்டியவரேயாவர் !

அப்படிக் களைந்து விட்டால்; அரசியல் தூய்மையாகும்! ‘அறநெறி தானிய விளைச்சல்’ அமோகமாகப் பெருகும்! குளத்தில் படர்ந்துள்ள பாசியை அகற்றாமல்; குளத்தைப் பழிப்பது; பழிப்போரின் குற்றம்தானே?

பாசியைக் கண்டுகொள்ள; முதலில் நம் கண்ணில் விழுந்துள்ள தூசியை அகற்றிக் கொள்வோம்.

**- கலைஞர்**

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131